விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 12 சனிக்கிழமை (27.06.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 190

## போதையை ஒழிக்க மாணவர் சக்தி திரள்வு




மேலும் படங்கள் உள்ளே...

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வி அமைச்சும், வலயக்கல்வி அலுவலகங்களும் இணைந்து யாழ். குடாநாட்டில் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்தக்கோரி விழிப்புணர்வு பேரணிகளை நேற்று நடத்தியுள்ளன. குறித்த பேரணிகள் வடக்கில் உள்ள பெரும்பாலான பாடசாலை மாணவர்களின் பங்குபற்றுதல்களுடன் நடைபெற்றதோடு வீதி நாடகங்கள் பலவும் எழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டிருந்தன.


சர்வதேச போதைப் பொருள் பாவனை மற்றும் சட்டவிரோதக் கடத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாணத்தில் உள்ள பல பாடசாலைகளிலும் விழிப்புணர்வு பேரணிகளும் கண்டன போராட்டமும் நடத்தப்பட்டது. போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் அசுர குணம் கொண்ட மது அரக்கர் களை அடியோடு அழித்திடுவோம், குடிக்கும மாந்தர் எவரது குடும்பமும் நனறாய் வாழ்ந்த 02ஆம் பக்கம் பார்க்க....

# நாடாளுமன்றம் கலைப்பு

## ஒகஸ்ட் 17-ல் பொதுத் தேர்தல்

(கொழும்பு)

இலங்கை நாடாளுமன்றத்தை உடனடியாக கலைக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று உத்தரவிட்டுள்ளார். இதன்படி நாடாளுமன்ற பொதுத் தேர்தல் எதிர்வரும் ஒகஸ்ட் 17ஆம் திகதி நடத்தப்படவுள்ளதாக கூறப்படுகின்றது. மேற்படி அறிவிப்பை வெளியிடுவதற்கான வர்த்தமானி அறிவித்தல் நேற்றிரவு அச்சிடலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளமையை அரச அச்சக கூட்டுத்தாபனம் உறுதி செய்துள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)



நேற்று முன்தினம் இலங்கைக்கு வருகை தந்த முன்னாள் இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் நேற்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்தபோது...

## போர்க்குற்றவாளிகள் எவரும் நீதியின் முன் நிறுத்தப்படவில்லை

### அமெரிக்க இராஜாங்க திணைக்களம் அறிக்கை

(கொழும்பு)

இலங்கையின் மனிதவுரிமை நிலைமைகள் கடந்த ஆண்டிலும் மோசமானதாக இருந்ததாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்டுள்ள உலக நாடுகளின் மனிதவுரிமை நிலைமைகள் தொடர்பான 2014ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்களில் ஈடுபட்ட ஒருவரேனும் நீதியின் முன் இன்னமும் நிறுத்தப்படவில்லை 23ஆம் பக்கம் பார்க்க....

## இனவாதமே பிரபாவை புலியாக மாற்றியது

### சிங்கள மொழியில் மனோ எடுத்துரைப்பு

(கொழும்பு)

வேலுப்பிள்ளை பிரபாகரன் வானத்தில் இருந்து குதித்து வந்தோ அல்லது மண்ணுலகில் உதித்து எழுந்தோ இந்நாட்டில் இருந்திராத இன விரிசலை ஏற்படுத்தவில்லை.

உண்மையில்இந்நாட்டில்தொன்று தொட்டு இருந்து வந்த இனவாதம் தான் வேலுப்பிள்ளை பிரபாகரனை விடுதலை புலிபிரபாகரனாக மாற்றியது.

இதை இந்த நாட்டின் அனைத்து இன அரசியல் தலைவர்களும் மனதில்கொள்ள வேண்டும்என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இந்து - பௌத்த கலாசார பேரவை விழா, கொழும்பு இராமகிருஷ்ணா மிஷன் மண்டபத்தில் நடைபெற்றது. ஹெல உறுமய கட்சி தவிசாளர் அததுரலியே இரத்தின தேரர் எம்பி, அமைச்சர்கள் கரு ஜெயசூரிய, விஜேதாச ராஜபக்ஷ, பீலிக்ஸ் பெரேரா ஆகியோர் பங்குபற்றிய இந்த விழாவில் சிங்கள 23ஆம் பக்கம் பார்க்க....

## நீதிமன்ற தாக்குதல் 14 பேருக்கு பிணை

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் 20 ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதிமன்ற கட்டடத் தொகுதி மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் கலவரத்தில் ஈடுபட்டதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைககப பட்டிருந்த 66 சந்தேக நபர்களில் 14 பேரை 5 லட்சம் ரூபாய் சொந்த பிணை முறியில் 23ஆம் பக்கம் பார்க்க....

## சாராயப் போத்தல்களுடன் மூவர் கைது



23ஆம் பக்கம் பார்க்க....

நடுவுநிலை தவறா… …கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## போதை...

தில்லை, ஆயுளை குறைத்து அமைதியை கெடுக்கும் போதைப்பொருள்களை புறம்தள்ளுவோம்" போன்ற பல வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாதைகளை தாங்கியிருந்தனர்.

குறித்த போராட்டங்களில் பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

வட மாகாண கல்வி அமைச்சினால் நேற்றைய தினம் போதைப்பொருள் எதிர்ப்பு தினமாக அறிவிக்கப்பட்ட நிலையில் வட மாகாணத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளிலும் போதைப்பொருள் பாவனைக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

இதன் ஒரு பகுதியாக யாழ்ப்பாணத்தில் வலிகாம வலயம், யாழ். வலயத்திற்குட்பட்ட அநேகமான பாடசாலைகள் விழிப்புணர்வு பேரணிகளை பிரமானடமான முறையில் நடத்தியிருந்தனர்.

யாழ்.இந்து மகளிா கல்லூரியில் ஆரம்பமான பேரணி மற்றும் ஊர்வலத்தை யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா மற்றும் கல்லூரி முதல்வா்திருமதிஎஸ்.விமலநாதன் ஆகியோர் தொடக்கி வைத்திருந்தனர்.

இவ்வாறாக யாழில் வெவ்வேறு இடங்களில் நடைபெற்ற பேரணிகளில் பல்லாயிரக்கணக்கான பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டனர். குறிப்பாக யாழ்.இந்து மகளிர் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, யாழ். வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை, கொக்குவில் இந்துக்கல்லூரி, கோண்டாவில் ராமகிர்ஷ்ணா வித்தியாலயம் உட்பட பல பாடசாலைகள் மது பாவனையால் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து வீதி நாடகங்களையும் முன்னெடுத்திருந்தன.

மேலும் நேற்றைய தினம் காலை 8.30 மணிக்கு யாழ. நகர்ப்பகுதிக்கு அருகாமையில் உள்ள பாடசாலைகளின் முன்றலில் ஆரம்பமான பேரணிகள் யாழ்.நகரில் ஒன்று கூடி வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வடக்குமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களின் பங்கேற்புடன் யாழ்.பண்ணை பகுதியில் உள்ள முற்றவெளியில் காலை 10 மணிககு நிறைவடைந்தது.

(செ-4)

# மரண அறிவித்தல்

## சரவணமுத்து கிருஷ்ணபிள்ளை



அச்சுவேலி தோப்பைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து கிருஷ்ணபிள்ளை நேற்று 26.06.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகதாதர்-பூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், இராசமணியின் அன்புக் கணவரும், மகேஸ்வரி, இராசம்மா, இளையபிள்ளை, கணேசமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும், நாகரத்தினம், கந்தசுவாமி, சதாசிவம், இராஜேஸ்வரி, திருமதி சோதிப்பிள்ளை சோமசுந்தரம் ஆகியோரின் மைத்துனரும், கிருபானந்தா (சுவிஸ்), சந்திரவதனா (ஜேர்மனி), கிருஷ்ணறஞ்சினி (ஜேர்மனி), கிருஷ்ணவேனி (ஆசிரியர்- இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்), கிரிதரன் (ஜேர்மனி), கிருஷ்ணகுமாரி (UK) ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜயமாலினி, புவேந்திரநாதன், திருநாவுக்கரசு, வள்ளுவதாசன் (காசாளர் - யாழ்.பல்கலைக்கழகம்), வினோபா, செந்தில்குமரன் ஆகியோரின் மாமனாரும், கிரீசன், பிரியங்கன், ஹம்சானந்தி, ஆனந்தபைரவி, சகானந்தி, கபிலன், திஷாந், வாகீசன், சுபத்திரன், அச்சயன், கீர்த்திகன், ஆதீசன், சுரபி, மேகவி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 28.06.2015 ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இணுவில் கிழக்கு,
இணுவில்.

தகவல்: கி.கிருபானந்தா -மகன்
கி.கிரிதரன் - மகன்
சி.வள்ளுவதாசன்-மருமகன்

(963)

காஞ்சி பரமாச்சார்யார் இல்லம் ஒன்றை அமைப்பதற்காக காஞ்சி காமகோடி பரமாச்சார்யான் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள் மீது ஈடுபாடுடையவர் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

(960)

தொடர்பு: 0778476482

## சைவ வித்தியா விருத்திச் சங்கம்

### வெற்றிடம் : தையற்பணியாளர் (Tailor)

எமது சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கு ஆடை தைக்கும் பணிக்கு தகுதிவாய்ந்த பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து தையல் பயிற்சி பெற்றதற்கான சான்றிதழோடு பூவேலை ஆகியவற்றில் தேர்ச்சி மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

வயதெல்லை :- 25-50

ஊதியம் :-ஒப்பந்த அடிப்படையில் பேசி நிர்ணயிக்கப்படும்.

தொழிற்றகைமைச் சான்றிதழ் பிரதிகள் , இரு நற்சான்றிதழ் பிரதிகளுடன் விண்ணப்பம் கிடைக்க வேண்டிய கடைசி நாள் 10-07-2015

C-1398

சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

தி.செல்வமனோகரன்
செயலாளர்

### உங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அதி உயர் சம்பளத்துடனான வேலைவாய்ப்புகள்

ஜேம், கோடியல், சொக்லெட், பிஸ்கட், பால்மா, யோகட் போன்ற தொழிற்சாலைகளில் (18-50) ஆண் பெண் ,
நாட் சம்பளம் -(1500) , OT-100, (8HRS) வேலை,
மாத சம்பளம் (25000-45000)
இப்போது யாரும் தராத சலுகையாக நாங்கள் நாட்சம்பளம், கிழமைசம்பளம், மாதசம்பளம் தருகிறோம்.
உணவு, தங்குமிடம் முற்றிலும் இலவசம்.
வரும் நாளிலே வேலை உண்டு. தொடர்பு கொள்ளவும்.

(948)

0775977259 0778910598

## ஜுலை 2 2015

மகளிர்க்கான அழகுக் கலை, மனையியல்பயிற்சி வகுப்புக்களின் புதிய பிரிவு ஆரம்பமாகிறது



ஃபேஷியல்
மணப்பெண் ஒப்பனை
கேக் ஐசிங்
தையல் பயிற்சி
மற்றும் எமது வழமையானபயிற்சிகள்



(சி-1400)



பயிற்சிகளின் முடிவில் தகமைச் சான்றிதழ் வழங்கப்படும்

மேலதிக விபரங்களை எமது அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்

## தூரிகை

மத்திய கல்லூரி வீதி
நெல்லியடி

## வாழ்த்தி வரவேற்கின்றோம்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

(அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்)



### கிளிநொச்சி மாவட்ட பணியகம்

ராஜன்கட்டடம், ஏ-9 வீதி,
கரடிப்போக்குச் சந்தி
(கொமர்ஷல் வங்கிக்கு அருகாமையில்)
இன்று (27.062015)
பி.ப. 3 மணிக்கு
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரின் மாவட்ட பணியகம் திறந்து வைப்பதையிட்டு பெரும் மகிழ்வடைவதோடு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாடுகள் எம் மண்ணில் இனிதே நடைபெற வாழ்த்தி வரவேற்கின்றோம்.

(சி-1404)

கிளிநொச்சி வாழ் மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கட்சிகளை இணைத்து நாடளாவிய ரீதியில் போராட்டம்

(கொழும்பு)

**பாராளுமன்றத்தை உடனடியாக கலைப்பதோடு சிறுபான்மை கட்சிகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய தேர்தல் சட்டத்தையும் இரத்து செய்யவேண்டும். இல்லாவிடின் அரசியல் கட்சிகளை இணைத்து நாடுமுழுவதும் போராட்டம் நடத்தப்படும் என புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

கொழும்பிலுள்ள அவரது கட்சிக்காரியாலயத்தல் நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறு மற்றும் சிறுபான்மை கட்சிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய தேர்தல் சட்டத்தை இரத்து செய்ய வேண்டும். பாராளுமன்றத்தை கலைக்குமாறும் அவ்வாறு கலைக்காவிட்டால் அரசியல் கட்சிகள் மற்றும் ஏனைய அரசியல் சக்திகளுடன் இணைந்து நாடு முழுவதும் போராட்டம் நடத்தப்படும்.

20 ஆம் திருத்தச் சட்டம் தொடர்பில் பொய்யான விவாதங்களை நாடாளுமன்றில் நடத்தி காலம் கடத்தப்படுகின்றது. இந்த சட்டத்தினால் சிறு கட்சிகளுக்கு நன்மை ஏற்படப் போவதில்லை.

தற்போதைய தேர்தல் முறைமை இரத்து செய்வதனை நாம்எதிர்க்கின்றோம். வருப்பு வாக்கு முறைமையை இரத்து செய்வதற்கு வேறும் வழிகள் உண்டு.

விருப்பு வாக்கு இரத்துசெய்வதேதேவை என்றால் இவ்வளவு துள்ளத்தேவையில்லை விருப்பு வாகசு முறைமையை இரத்துசெய்ய நாம்யோசனைகளை முன்வைத்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


## அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோவில்
## இன்று ஏழாம் திருவிழா



**அச்சம் தவிர்ப்பாய் அகில வாழ்வு தருவாய்**

சீரோங்கும் இணுவையிலே- நன்றே
தேரோங்கும் நொச்சியம்
பதியினிலே- நின்றே
வானோங்கும் கருணை மழை பொழியும்
எழிலோங்கும் முருகா கந்தா சரணம்
மேன்மைக் கந்தபுராணம் செப்பும்
வான்புகழ் இறையே இருபத்தைந்து நாள்
சான்றோர் உனைத் தொழுது விழா எடுக்க
தேன்போல் கருணை மொழி
பகவர்வாய் சரணம்
பச்சை மயில் ஏறி வள்ளி தெய்வயானையுடன்- எம்
அச்சம் தவிர்ப்பாய் அகில வாழ்வு தருவாய் சரணம்

இணுவை
ச.முகுந்தன்
ஏழாம் நாள் உபயகாரர்

(சி-1389)



## சமையற்காரர் தேவை
**(சைவபோசனம்)**

தங்கி நின்று வேலை செய்யக்கூடிய குடிப்பழக்கம் அற்றவர் உடன் தேவை. சம்பளம் நேரில். (943)

சாயிராம்
101,பலாலி வீதி, யாழ்ப்பாணம்



## பயானா பிளாஸ்டிக் மீள் சுழற்சி

கழிவு பிளாஸ்டிக் விலைக்கு வாங்கப்படும்
வாளிவேசன்-1Kg-50/=
கதிரை-1Kg-80/=
கான்-1Kg-35/=
(336)

தொடர்புகளுக்கு:-0212228680, 0775925088
**108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.**
சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க எம்முடன் இணையுங்கள்


# தேர்தலில் போட்டியிடும் பேய்களில் சிறந்த பேய்களுக்கு வாக்களிக்கவும்

நடக்கவிருக்கும் பொதுத் தேர்தலில் இரண்டு பிரதான கட்சிகளும் பேய்களை தேர்தலில் களமிறக்கக் கூடும். அந்தப் பேய்களில் சிறந்த பேய்களை மக்கள் தெரிவு செய்ய வேண்டுமென மாதுலுவாவே சோபித தேரர் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஆரோக்கியமான அரசியல்வாதிகளை அழைப்பது தொடர்பில் மார்ச் 12 அமைப்பு கொழும்பில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மோசடிக்காரர்கள், ஊழல்வாதிகள், சிறுவர் துஷ்பிரயோகிகள், கசினோகாரர்கள், குடுகாரர்கள், போதைப்பொருள், மது வியாபாரிகளுக்கு வேட்பு மனு வழங்கக்கூடாது. இதனை நான் கட்சித் தலைவர்களிடமும் வலியுறுத்திக்கேட்டுக்கொள்கின்றேன்.

மக்கள் தமது கையில் உள்ள வாக்கினை அளிப்பதற்கு முன்னர் யாருக்கு? எதற்கு? அளிக்கிறோம் என்பதனை சிந்திக்க வேண்டும்.

சிலவேளை, இரண்டு பிரதான கட்சிகளும் பேய்களை தேர்தலில் இறக்கக் கூடும் என்றும் அதில் சிறந்த பேய் தெரிவில் சிந்தனையுடன் செயற்பட வேண்டும் என்றும் சோபித தேரர் தெரிவித்தார்.

வேட்பாளர்கள் தமது சொத்து விபரங்களை வெளியிட வேண்டும், தேர்தலுக்கு பணம் கிடைப்பது, செலவு செய்வது போன்றவை வெளிப்படுத்தப்பட வேண்டும், வங்கிக் கணக்கு சோதனை செய்யும் குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-5)


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 38<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில் A/L/ அரச தொழில்<br>தொ.இ: B/4680 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 78 செவ் இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: USA<br>தொ.இ: G/1477 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 33 1/4<br>தகைமை/தொழில்: ஜேமன் PR<br>தொ.இ: B/4681 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 34<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: CDF/ வங்கியாளர்<br>தொ.இ: G/1480 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 28 3/4சூரிசெவ் 8 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: A/L/ வங்கியாளர்<br>தொ.இ: B/4683 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 27<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில் HNDA/ அரச தொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் அசைவமும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/1488 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 19 3/4<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: சிவில் பொறியியலாளர் சிங்கப்பூர்<br>தொ.இ: B/4684 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம் மகம்<br>கி.பா: 48<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSC/ ஆசிரியர்<br>தொ.இ: G/1495 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


## ராசி பலன்

27.06.2015
(ஆனி 12, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு
தசமி முற்பகல் 8.20 மணிவரை
சுவாதி பின்னிரவு 1.50 மணிவரை
இராகுகாலம் 8.55-10.25 மணிவரை
சுபநேரம் 2.55-4.25 மணிவரை
அமிர்தசித்தம்

வளவன்

| | | | |
| --- | --- | --- | --- |
| கேது | | புதன் | சூரி செவ் |
| | | | குரு சுக் |
| | | | |
| | | சனி சந் | ராகு |

**மேடம்:** தொலைபேசி முலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களை எளிதில் செய்து முடிப்பீர்கள், விருந்தினர் வருகையுண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

**இடபம்:** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், உடல்நலம் சீராகும், கடன் சுமை குறையும் வாய்ப்புண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மிதுனம்:** பெருமைகள் வந்து சேர கணபதியை வழிபட வேண்டிய நாள், சான்றோர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கடகம்:** வாகன சுகமுண்டு, தூரதேசச் செய்திகள் மகிழ்ச்சி தரும், பெற்றோர் மீது பிரியம் கூடும், பொருளாதார நிலை உயர வழி வகை செய்வீர்கள், சுப செலவுகள் கூடும்.

**சிம்மம்:** அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், பணத் தேவைகள் பூர்த்தியாகும், நண்பர்கள் மூலம் நன்மைகள் இடம்பெறலாம், எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கன்னி:** திடீர் பணவரவு மனதிற்கு சந்தோசம் தரும், எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், மக்கள் போற்றும் வாழ்வமைய கண்ணனை வழிபட வேண்டிய நாள்.

**துலாம்:** தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், உறவினர் வருகையுண்டு, எடுத்த காரியங்களில் சில தாமதங்கள் ஏற்படலாம், பயணங்களால் பலனுண்டு, சயனசுகக் குறைவான நாள்.

**தனுசு:** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் தேடி வரலாம், முயற்சிகள் எளிதில் கைகூடும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, பொதுவாழ்வில் புகழ் கூடும், செய்தொழில் மேன்மையுண்டு.

**மகரம்:** பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் கைகூடலாம், அந்நியர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கும்பம்:** புதிய முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், போசன நன்மையுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மீனம்:** கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், உடல் நலனில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், வரவை விட செலவுகள் கூடலாம், போசன சுகக் குறைவான நாள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

**ஆன்மீகம் 227**

## பொறாமையிலிருந்து விடுதலை!

...ஆனால் உண்மையில் மனோ சியத்திலிருந்து அவர்களை விடுவித்தேன், என்று சொன்னேன்.

அவர்கள் மாயை அல்லது பொய்யான தோற்றங்கள் விலகுவதை உணரத் தொடங்கினர். ஆனால் என்ன நிகழ்கிறதென்றால், நீங்கள் பொய்யான நிலையிலேயே இருந்து பழகி விட்டதால், அது விலகத் தொடங்கும்பொழுது, ஏதோ தவறு நடந்து விட்டதாக நினைக்கிறீர்கள்! பிரச்சனை என்னவென்றால், மக்களிடம் மிகுதியான உண்மைகளைச் சொல்லி புரிந்து கொள்ளுதல் நிகழத்தொடங்கும் பொழுது, ஒரு விதமான பயம் ஆட்கொள்கிறது. அவர்கள் அறியாமையின் மறைப்பில் அனுபவித்த சுகங்கள் ஆட்டம் காணத் தொடங்குகிறது.

பாருங்கள், எந்த அளவிற்கு உங்கள் அறியாமை கரைகிறதோ, அந்த அளவிற்கு நீங்கள் கடவுள் அல்லது பிரபஞ்ச இருப்புத் தன்மையால் ஆட்கொள்ளப்படுகிறீர்கள். நீங்கள் தினசரி வாழ்க்கையில் மேற்கொள்ளும் எந்தவொரு முயற்சியும், உங்கயை காலிசெய்து கொள்ளுதலை நோக்கித் திருப்பி விடப்பட்டால், நீங்கள் பிரபஞ்ச இருப்புத் தன்மையினால் நிரப்பப்படுவீர்கள். வாழ்க்கையில் மற்ற எல்லாமே வெறும் தற்செயலானதும் முக்கியமற்றதும்தான், இதை நினைவில் கொள்ளுங்கள்.

உங்களுடைய ஒவ்வொரு மூச்சும், உங்களுடைய விழ்ப்புணர்வை அதிகப்படுத்துவதை நோக்கியே இருக்க வேண்டும். அப்பொழுதுதான் நீங்கள் உண்மையிலேயே பிரபஞ்ச இருப்புத் தன்மையை அல்லது கடவுளை உணர வேண்டும் என்று விழிப்புடன் தீர்மானித்திருக்கிறீர்கள் என்று பொருள். உங்களிடம் இந்த உறுதியான தீர்மானம் நிகழவில்லை என்றால், நீங்கள் தேடுவதாக இன்னும் நடித்துக் கொண்டிருக்கிறீர்கள், அவ்வளவே. நீங்கள் வெறுமனே உங்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் ஒரு



கணமும் மற்றவர்களை ஏமாற்றுவதாக நினைக்காதீர்கள். உங்களைத்தான் ஏமாற்றிக் கொண்டிருக்கிறீர்கள்.

வெளிநோக்கியிருக்கும் உங்கள் அடிகளை உள்நோக்கி திருப்புவதுதான் முதல் அடி. ப- வளைவெடுக்கும் அந்தக்கணம் தான் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. கவனம் கொள்ளுங்கள், நீங்கள் ப- வளைவெடுத்து விட்டீர்கள் என்பதை உங்கள் விழிப்புணர்வு சொல்லும். அது வரையில் உங்களை ஒருங்கிணைக்க முடியாமைக்கு மக்களையும், சூழ்நிலைகளையும், வெளியுலக சந்தர்ப்பங்களையும் காரணம் காட்டி உங்கள் மனம் மேலும் மேலும் சாக்குகளை சொல்லிக் கொண்டிருக்கும். ஒருமுறை நீங்கள் ப- வளைவெடுத்து விட்டால் இவையெல்லாம் மறைந்து முக்கியமற்றதாகிவிடும். அவை சிறிது சிறிதாக தங்கள் முக்கியத்துவத்தை இழந்துவிடும். அவை அங்கிருக்கும் என் பதில் சந்தேகமில்லை; ஆனால் நீங்கள் அவற்றுடனேயே நிலையாக முன்னேறிக் கொண்டிருப்பீர்கள். அவைகள் தங்களுடைய பாத்திரத்தை மிகவும் சரியாகச் செய்து, நீங்கள் மிகவும் சக்திமிக்க கவனிப்பவராக உதவும். முதலடி எடுத்து வைப்பது அல்லது ப-வளைவெடுப்பதே மிகவும் கடினமான காரியம். ப-வளைவெடுக்கும் பொழுதே பாதி வேலை முடிந்துவிடுகிறது. பிறகு நீங்கள் பிரபஞ்ச இருப்புத் தன்மையின் வழிகளுக்கு மிகவும் வளைந்து கொடுப்பவராக ஆகிவிடுகிறீர்கள்.

நீங்கள் ப-வளைவெடுக்கும் பொழுது, எல்லாமே தியானமாகிவிடுகிறது. அது நடனமாடுவதோ, அல்லது வெறுமனே உங்கள் உடைகளை உடுத்திக்கொள்வதோ அல்லது களைவதோ, எதுவாக இருப்பினும் அது அதிகாரித்துக் கொண்டிருக்கும் விழிப்புணர்வுடன் செய்யப்படுகிறது.

நீங்கள் இவற்றைச் செய்வதை வெறுமனே கவனித்துக் கொண்டிருப்பீர்கள்; கொஞ்சம் கொஞ்சமாக இந்த மொத்த உலகமுமே ஒரு மாயைதான் என்பதைப் புரிந்துகொள்வீர்கள். நீங்கள் உள்நோக்கி முதலடியெடுத்து வைக்கும் பொழுதே, உண்மையில் ஒரு பெரிய அடியை எடுத்து வைக்கீறீர்கள்; ஏனெனில் முதலடியே ஒரு பெரிய அடிதான். அது வரையில் வெறுமனே தத்துவமாகிக் கொண்டும், தேடுவதாக உங்களையும் மற்றவர்களையும் நம்பவைத்துக் கொண்டும். நாளுக்கு நாள் குழப்பம் அதிகரித்துக் கொண்டும், உறுதி குறைந்து கொண்டும் இருக்கிறீர்கள்.

நீங்கள் முதலடி எடுக்கும் பொழுதே, உங்களை வெற்றி கொள்ளத் தயாராகி விட்டீர்கள். மற்றவர்கள் வெல்வது மிகவும் சுலபம். வெறுமனே சில ஆயுதங்களை எடுத்துக் கொள்ளுங்கள், அல்லது உங்கள் நாவால் அவர்களை நார் நாராகக் கிழித்துவிடுங்கள். அவ்வளவுதான். ஆனால் உங்களை வெல்லதற்கு உண்மையிலேயே தைரியம் வேண்டும். இந்த விஷுக்தி சக்கரமானது முழுவதும் உங்களை வெல்வது பற்றியதே..

(தொடரும்)

**பரமஹம்ஸ சுவாமி**


# அதிசய உலகம்

### விளையாட்டு ஆர்வத்தில் தந்தையின் பணத்தை செலவு செய்த 5 வயது சிறுவன்

பிரித்தானியாவில் 5 வயது சிறுவன் ஒருவன் விளையாடுவதற்காக தனது தந்தையின் கணக்கில் இருந்த பணத்தை செலவு செய்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரித்தானியாவின் நோர்த்தாம்ப்டன்சயர் மாகாணத்தில் உள்ள கிங்ஸ்தோர்பி பகுதியை சேர்ந்தவர அலிஸ்டெயர் லீத்.இவர் முகநூலில் தனது கிரிடிட் கார்ட் மற்றும் வங்கி கணக்கு ஆகியவைகளை பதிந்துவைந்திருந்தார்.

விளையாட்டுகள் மற்றும் ஆப்ஸ் ஆகியவற்றை பதிவிறக்கம் செய்துகொள்வதற்காக அவர் இதை பயன்படுத்தி வந்துள்ளார். இந்நிலையில் அவரது 5 வயது மகனான அலெக்ஸாண்டர தனது தந்தையில் கணணியில் ஜூசி ஜாம் விளையாடிக் கொண்டிருந்தார்.



இந்நிலையில் விளையாட்டில் அடுத்த நிலைக்கு செல்வதற்காக தனது தந்தையின் கிரிடிட் காட்டின் எண்ணை பயன்படுத்தி 400 யூரோவை செலவு செய்துள்ளார்.

இந்நிலையில் கிரிடிட் கார்டின் பில்லை பார்த்த லீத் அதிர்ச்சி அடைந்துள்ளார்.

பின்னர் இது குறித்து அவர் கூறியதாவது, குழந்தைகள் பணத்தை எளிதாக கையாளும் வகையில் விளையாட்டு மென்பொருள் நிறுவனங்கள் தங்களது அமைப்புகளை வைத்துள்ளனர். இது மிகவும் தவறாக போக்கு. எனது குழந்தையின் இந்த செயல் எனக்கு அதிர்ச்சியை அளித்துள்ளது, எனினும் அவன்மேல் எனக்கு கோபம் இல்லை.

அவன் என்ன செய்தான் என்றே அவனுக்கு தெரியாது என்று தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தெரிவித்த புகாரையடுத்து முகநூல் நிர்வாகம் அவருக்கு பணத்தை திரும்ப அளித்துள்ளது.

# சமைப்போம் சுவைப்போம்

## இஞ்சி ஊறுகாய்

**தே.பொருட்கள்:**

இஞ்சி - கால் கிலோ
நல்லெண்ணெய் - 50 மி.லி
மஞ்சள் பொடி - ஒரு சிட்டிகை
கடுகு - தேவையான அளவு
உப்பு - 50 கிராம்
புளி - 15 கிராம்
மிளகாய் பொடி - 3 ஸ்பூன்
உளுந்தம் பருப்பு - தே.அளவு



**செய்முறை :**

இளம் இஞ்சியை வாங்கி, தண்ணீரில் நன்கு சுத்தமாக கழுவி கொள்ளவும். மேல் தோலை அப்புறப்படுத்திவிட்டு சிறிய துண்டுகளாக நறுக்கி கொள்ளவும்.

ஒரு பாத்திரத்தில் 100 மி.லி தண்ணீர் எடுத்துக்கொண்டு அதில் புளியைக் கரைக்கவும் . அதனுடன் மஞ்சள் பொடி மற்றும் உப்பை கரைக்கவும்.

பாத்திரத்தில் சிறிதளவு எண்ணெய் விட்டு கடுகு , உளுந்தம் பருப்பு தாளிக்கவும் அதில் இஞ்சி துண்டுகளை போட்டு நன்கு கிளறவும்.ள

கடைசியாக புளிக்கரைசலை அதில் ஊற்றவும் . மிதமான தீயில் சிறிது நேரம் கொதிக்க விடவும். மிளகாய் பொடி சேர்க்கவும்.

கடைசியாக மீதமிருக்கும் எண்ணெய் அதில் ஊற்றி கிளறிவிட்டு இறக்கி வைக்கவும்.

சூடு ஆறியவுடன் பாட்டில்களில் எடுத்து வைக்கவும்.

இஞ்சி ஊறுகாய் செரிமானத்திற்கு மிகவும் நல்லது .

சாப்பிட அடம் பிடிக்கும் குழந்தைகளுக்கு சோற்றுடன் சேர்த்து இஞ்சி ஊறுகாயும் கொடுத்து வந்தால் அவர்கள் பசியெடுத்து சாப்பாடு கேட்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



உருவமாக
1926
04
03

ஒளியாக
2014
07
08

# அமரர் சின்னட்டியன் பசுபதி

## திதி:27.06.2015





அன்போடும் பண்போடும் வாழ்ந்து எங்களை பாசமாய் அரவணைத்த எங்கள் அப்பாவே உங்கள் கரங்களின் உழைப்பை உங்கள் குடும்பத்தின் வளர்ச்சிக்காகவும் சமூக ஆலய வளர்ச்சிக்காகவும் செலவு செய்ததை நாம் இன்று மீட்டிப்பார்க்கிறோம். பிள்ளைகளை இயற்கையின் இன்பத்தில் தூக்கிவீசி அதில் பிள்ளைகள் பெற்ற இன்பத்தை அள்ளிப்பருகி கண்ணை இமை காப்பது போல பிள்ளைகளை பேதமின்றி ஒரே நேரத்தில் பிள்ளைகளாய் வளர்த்து இன்று வானுறையும் தெய்வத்துள் சென்று ஒரு வருடமென்ன எத்தனை யுகம் சென்றாலும் எம் இதயங்களில் உம் புன்னகை வதனம் தவழ்ந்து கொண்டே இருக்கும். இன்றும் உம் புத்திரர்கள் உங்களை ஐயா எனத்தொடங்கி பத்து நிமிடம் அழுத பின்னரே மறுகதை கூறுகிறார்கள். எங்கள் ஐயா நீங்கள் குடியிருந்ததால் எங்கள் வீடும் கோயிலே! இனி எந்தச் சாமி வந்து உங்கள் இடத்தை நிரப்பும். ஆண்டு ஒன்றாகியும் நீங்கள் இறந்ததை ஏற்றுக்கொள்ளமுடியாத அளவிற்கு பார்க்கும் இடமெல்லாம் உள்ளத்தால் உங்களைக் காண்கிறோம். இன்று 27.06.2015 சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்தி நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

### அமரர் சின்னட்டியன் பசுபதி ஞாபகார்த்த நிதியம்

1.அமரர்சிபசுபதி கல்விகற்ற ஊரெழு கணேச வித்தியாசாலையில்அவரது பிள்ளைகள்ஒன்பது பேரும்அவரது 27 பேரப்பிள்ளைகளும்கல்விகற்று இன்று சீரும்சிறப்புமாக விளங்குகிறார்கள் அந்த வகையில் கணேசாவில் நடைபெறும் பரிசளிப்பு விழாவுக்கு ஒவ்வொரு வருடமும் ரூபா 15000.00 நிதியத்திலிருந்து வழங்கப்படும்.

2.ஊரெழு நாவலம்பதி ஞானவைரவர் ஆலயத்தின் மூன்று தசாப்தகாலம் முகாமையாளராக இருந்து வழிநடத்தியதன் பயனாகவும் அவருக்குப் பின்னர் 1986 தொடக்கம் தெரிவு செய்யப்படுகின்ற பரிபாலனசபையினால் இன்று ஆலயம் சகல வளங்களையும் தன்னகத்தே கொண்டு அருள்பாலித்துக் கொண்டிருக்கிறது. இவ் ஆலயத்தின் அலங்கார உற்சவத்தின் கொடியேற்றத் திருவிழாவை தலைமையேற்று நடத்தி வந்ததனால் ஞானவைரவப் பெருமானின் கடாட்சம் கிடைத்த வண்ணமுள்ளது. இந்த வகையில் ஆலயத் திருப்பணிக்கு ஒவ்வொரு வருடமும் ரூபா 10000/=வழங்கப்படும்.

3.ஊரெழு வீரகத்தி விநாயகர் ஆலய மஹோற்சவத்தின் ஐந்தாம் திருவிழாவை கடந்த அறுபது வருடங்களுக்கு மேலாக தங்களது சகோதரர்களையும் இணைத்து நடத்தி வந்துள்ளதனால் விநாயகரின் அருள் கிடைத்த வண்ணமுள்ளது. அந்த வகையில் ஆலயத்திருப்பணிக்கு ஒவ்வொரு வருடமும் ரூபா 10000/= வழங்கப்படும்.

4.ஊரெழு வளர்பிறை சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் வளர்பிறை பாலர் பாடசாலையில் அமரருடைய பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளென 34 பேர் கல்வி கற்று வளமுடன் வாழ்கிறார்கள். சிறப்பான ஆரம்பக்கல்வியை வழங்கிய பாலர் பாடசாலையில் நடைபெறும் விளையாட்டுப்போட்டிக்கு ஒவ்வொரு வருடமும் ரூபா 10000/= வழங்கப்படும்.

5.அமரர் பிறந்த வளர்பிறை பிரதேசத்திலும் அவர் விவசாயம் செய்த சர்வசக்தி பிரதேசத்திலும் வசிக்கும் மாணவர்களில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு ரூபா 3000/=, க.பொ.த.சாதாரண பரீட்சையில் சிறப்புச் சித்தியடைபவருக்கு ரூபா 2000/= வீதமும் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகம், கல்வியியற் கல்லூரி செல்லும் மாணவர்களுக்கு ரூபா 5000/= வீதம் நிதியத்திலிருந்து வழங்கப்படும். இன்று நண்பகல் 12 மணிக்கு நாவலம்பதி ஞானவைரவர் திருக்கோவிலின் விசேட குரு பிரம்மஸ்ரீ நா.திவாகரக்குருக்களின் ஆசியுடன் நிதியம் ஆரம்பிக்கப்படும்.

தலைவர்-திரு.இ.மயில்வாகனம்(தலைவர், முதியோர் பேரவை, யாழ்.மாவட்டம்)
பிரதமவிருந்தினர்-திரு.இ.இரட்ணம்(தலைவர், சந்தைப்படுத்தல் துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
சிறப்பு விருந்தினர்:-திரு.வே.கா.கணபதிப்பிள்ளை (ஓய்வுபெற்ற அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை),
திரு.வ.சந்திரசேகரம் (ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், மன்னார்)
கௌரவ விருந்தினர்:- திரு.ச.லலீசன்(பிரதி அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை), திரு.இ.மன்மதராசன்(தலைவர், சர்வதேச ஒன்றியம், ஊரெழு)
திரு.ம.ற.ஜெயதரன் (கிராம உத்தியோகத்தர், ஊரெழு)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

**தேவி பவனம்**
**ஊரெழு கிழக்கு, ஊரெழு**

**குடும்பத்தினர்**
**0776735994**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமறைக் கலாமன்றம் நடத்தும் தமிழ்விழாவின் 2ம் நாள் அமர்வு


இரண்டாவது அமர்வு பண்பாடு, ஊடகம், இணையம் தொடர்பான அமர்வாக ம.நிலாந்தன் தலைமையில் இடம்பெறும். இதன்போது ஆய்வுரைகளை 'அறிவுருவாக்கப் பண்பாட்டுத் தளத்தில் தமிழ் இணையம்' என்னும் தலைப்பில் கெ.சர்வேஸ்வரனும், 'ஈழத்து அச்சு ஊடக வெளியில் சமகாலத் தமிழ் இலக்கியம்' என்னும் தலைப்பில் கருணாகரனும், 'சமகால ஈழத்துத் தமிழ்ப் பண்பாட்டுச் சூழலில் காண்பியக்கலைகள்' என்னும் தலைப்பில் திருமதி. பப்சி மரியதாசனும், 'ஈழத்தில் தமிழ்த் திரைப்பட இரசனை' என்னும் தலைப்பில் ச.இராகவனும் சமர்ப்பிப்பார்கள்.

இரண்டாம் நாள் ஆய்வரங்குகளில் சிறுகதை தொடர்பான முதலாவது அமர்வு ஐயாத்துரை சாந்தன் தலைமையில் நடைபெறும். இதன் போது ஆய்வுரைகளை 'படைப்பிலக்கிய நோக்கில் ஈழத்துச் சிறுகதைகள்' என்னும் தலைப்பில் குப்பிழான்ஐ.சண்முகனும், 'ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை - கருத்துநிலையும், புதிய வரைபுகளும்' என்னும் தலைப்பில் தியாகசேகரனும் (திசேரா), 'இனவரையியல் நோக்கில் தமிழ்ச் சிறுகதைகள்' என்னும் தலைப்பில் த.அஜந்தகுமாரும், 'ஈழத்துத்தமிழ்ச்சிறுகதைகளில் பண்பாட்டு அடையாளமும் இருப்பியலும்' என்னும் தலைப்பில் இராஜேஸ்கண்ணனும் ஆய்வுரைகளை சமர்ப்பிப்பார்கள்.

இரண்டாவது அமர்வு மலையக இலக்கியம், விமர்சனம் தொடர்பான அமர்வாக தெ.மதுசூதனன் தலைமையில் நடைபெறும், இதன் போது ஆய்வுரைகளை 'ஈழத்து நவீன இலக்கிய விமர்சனமும், கலாரசனையும்' என்னும் தலைப்பில் தி.செல்வமனோகரனும், 'கிழக்கிலங்கையின் விமர்சன வளர்ச்சி' என்னும் தலைப்பில் அ்துல் றவாக்கும், 'மலையகத்தின் சமகால நவீன இலக்கிய செல்நெறி' என்னும் தலைப்பில் சு.தவச்செல்வனும், 'மலையக இலக்கியத்தில் பண்பாட்டுக் கலைகள்' என்னும் தலைப்பில் பொன்.பிராகரனும் சமர்ப்பிப்பார்கள்.

மூன்றாம் நாள் ஆய்வரங்குகளில் கவிதை தொடர்பான முதலாவது அமர்வு கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் நடைபெறும். இதன் போது ஆய்வுரைகளை 'ஈழத்து தமிழ்க் கவிதைகளில் முஸ்லிம்களின் இருப்பும், எதிர்ப்பரசியலும்' என்னும் தலைப்பில் சிராஜ்மஷ்ஹூரும், 'சமூகப் பண்பாட்டு அசைவியக்கமும், ஈழத்துப் பெண்களின் கவிதைகளும்' என்னும் தலைப்பில்.சி.ரமேசும், 'ஈழத்து நவீன கவிதை- படைப்பு நிலையும், வெளிப்பாடும்' என்னும் தலைப்பில் சித்தாந்தனும், 'ஈழத்தில் தமிழில் நிகழ்ந்துள்ள மொழி பெயர்ப்புக் கவிதைகளின் அரசியல்' என்னும் தலைப்பில் வேல்நந்தகுமாரும் சமர்ப்பிப்பார்கள்

இரண்டாவது அமர்வு நாடகம் தொடர்பான அமர்வாக கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும். இதன் போது ஆய்வுரைகளை 'மரபுவழி நாடகங்களின் இருப்பும், இயங்குநிலையும்' என்னும் தலைப்பில் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசனும், 'திருமறைக் கலாமன்றத்தின் அரங்கச் செயற்பாடுகள் - ஒரு பார்வை' என்னும் தலைப்பில் பா.இரகுவரனும், 'யுத்தத்துக்குப் பின்னான அரங்கப்போக்குகள்' என்னும் தலைப்பில் கலாநிதி சி.ஜெயசங்கரும், 'கூற்கை நெறியாக அரங்கு எதிர்கொள்ளும் சவால்கள்' என்னும் தலைப்பில் செ.செல்வகுமாரும் ஆய்வுரைகளை சமர்ப்பிப்பார்கள். இரண்டாம் நாள் மாலை நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்புரையை மன்னார் மறை மாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையமான 'கலையருவியின் இயக்குநர் அருட்தந்தை தமிழ்நேசன் அடிகளார் வழங்குவார். கலை நிகழ்வுகளாக கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் 'ஊருக்கு நல்லது சொல்வேன்' என்னும் தலைப்பில் கவியரங்கமும், நாட்டிய கலாகேந்திரா இயக்குநர் கலாநிதி கிருஷாந்தி .ரவீந்திரா, துணை இயக்குநர் துஷ்யந்தி சுகுணன் ஆகியோரின் தயாரிப்பில் முன்னணி அணி செய் கலைஞர்கள், ஆடல் ஆற்றுகை நிகழ்த்துவோர் பங்கேற்கும் 'ஓம்கார தெய்வீக ஆடல் ஆராதனை நடன நிகழ்வும் திருமறைக் கலாமன்றம் வழங்கும் 'குசேலர்' இசை நாடகமும் இடம்பெறும். (இ)




## தேடல் நாடகமும் அரங்கியலுக்குமான பகிர்வுக்களம் இரண்டாம் நாள் நிகழ்வு

தேடல் நாடகமும் அரங்கியலுக்குமான பகிர்வுக்களம் இரண்டாவது நிகழ்வு இன்று 27 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நாவலர் கலாசாரமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தே.தேவானந்தா தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் தன்னார்வத் தொண்டுப் பணிகளும் அரங்கச் செயற்பாடுகளும் எனும் தலைப்பில் யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தின் இணைப்பாளர் ந.சுகிர்ராஜ் உரையாற்றுவர்.

இதில் தன்னார்வத் தொண்டுப் பணிகளில் அரங்கச் செயற்பாடுகள் எவ்வாறு பயன்படுகிறது என்பது பற்றியும் தொண்டுப் பணிகளுக்கும் அரங்கச் செயற்பாட்டுக்குமான தொடர்பு பற்றியும் விரிவாக கலந்துரையாடப்படவுள்ளது.

செயற்திறன் அரங்க இயக்கத்தின் ஏற்பாட்டில் நடத்தப்படும் இந் நிகழ்வில் நாடக அரங்கியல் துறை சார்ந்த மாணவர்கள் மற்றும் ஆர்வலர்கள் பங்குபற்ற முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-3)



புத்தூர் கிழக்கு கல்லுடை கன்னியர் வைரவர் ஆலய அலங்கார உற்சவத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட சைவசமய அறிவுப்போட்டி பரிசளிப்பு விழாவில் சைவப் பணியாற்றிய ஊறெழு நா.முருகையா, புத்தூர் இ.நடேசன், ஆனைக்கோட்டை க.பொன்னுத்துரை, புத்தூர் திருமதி. வீ.நாகம்மா ஆகியோருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்ட போது...

## தொழில் தேடுவோரைப் பதிவு செய்தல் சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில்

சங்கானைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தொழில் தேடுவோர் தொடர்பான விபரங்கள் அந்தந்த கிராம அலுவலர் அலுவலகங்களில் எதிர்வரும் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9மணி தொடக்கம் மாலை 4மணி வரைபதிவுசெய்யப்படவுள்ளது.

சங்கானைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பிரிவுகளில் உள்ள தொழில் தேடுவோர் தங்கள் பிரிவுக் கிராம அலுவலர் அலுவலகங்களில் உரிய கல்வித் தகைமையை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் வருகை தந்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு சங்கானைப் பிரதேச செயலாளர் அ.சோதிநாதன் அறிவித்துள்ளார்.

இவ்விபரங்களினடிப்படையில் பொருத்தமான துறைகளில் தொழில் வாய்ப்புக்கள் பெற்றுக்கொடுக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன என உதவிப் பிரதேச செயலாளர் திருமதி கி.செந்தூரன் அறிவித்துள்ளார். (இ-3)

## 435 கிராம சேவையாளர் பிரிவில் 662 திட்டங்களுக்கு நிதிஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சினால் யாழ்.மாவட்டத்திலுள்ள 435 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் 662 திட்டங்கள் அமுல்படுத்துவதற்கென 435 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சின் கிராமங்களை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் இலங்கை முழுவதும் 15 ஆயிரம் கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது.

இத்திட்டமானது பயனாளிகளின் 25 வீத பங்களிப்புடன் சகல பிரதேசங்களிலும் நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

இதில் பொதுவாக வீதி அபிவிருத்தி ,முன்பள்ளி அபிவிருத்தி, சனசமூக நிலைய அபிவிருத்தி, வடிகால் புனரமைப்பு, பொதுக்கிணறுகள் புனரமைப்பு, பொது மண்டபங்கள் ஆரம்ப சுகாதார நிலையம், கிராமிய செயலகங்கள், பாடசாலை கட்டட புனரமைப்பு , சிறுவர் பூங்காக்கள், மின்சாரம், மீன்பிடி, விவசாயம், விளையாட்டு , கலாசாரம் மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி போன்ற விடயங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

இந்த வேலைத்திட்டங்கள் அனைத்தும் மாகாண சபை, பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகள் , கல்வி அலுவலகங்கள், கமநல அபிவிருத்தித் திணைக்களம், சுகாதார திணைக்களம், நகரசபை, மீன்பிடி மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களம் போன்ற திணைக்களங்களால் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

இத் திட்டங்கள் அனைத்தும் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்குள் முடிவடையும் என அவர் தெரிவித்தார். (இ-9)

## மாதாந்த கலை நிகழ்ச்சி

வட இலங்கை சங்கீத சபையின் மாதாந்த கலை நிகழ்ச்சி இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சங்கீத சபையின் மருதனார்மடத்திலுள்ள தற்பரானந்தன் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

கீதாவாகினி இசைக் கல்லூரி மாணவர்களின் இசையரங்கு, சங்கீதபூஷணம் சு.கணபதிப்பிள்ளையின் இசைக்கச்சேரி, பதஞ்சலி சேத்திர மாணவர்களின் நாட்டியாஞ்சலி என்பன இடம் பெறவுள்ளன. (இ-3)

# மாணவர்களை சைபர் கபேக்குள் தனியாக அனுமதிக்கக் கூடாது!

## நீதிபதி இளஞ்செழியன் அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

**ஆசிரியர்கள், பெற்றோர்களுடன் வரும்போது மட்டுமே மாணவ,மாணவிகளை சைபர் கபேக்குள் அனுமதிக்க வேண்டும். தனியாக மாணவ, மாணவிகள் வரும்போது அனுமதிக்கக்கூடாது என யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் அறிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் சைபர் குற்றங்கள் புரிவதற்கு சைபர் கபேக்கள் அல்லது இணையத்தள நிலையங்கள் உறுதுணையாக இருப்பதாகவும் எனவே சைபர் குற்றம் சம்பந்தமான சட்டங்களை இறுக்கமாக கடைப்பிடித்து அமுல்படுத்துமாறு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு மேல் நீதிபதி இளஞ்செழியன் அறிவுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்ற பிணை மனு வழக்கொன்றில் இடம்பெற்ற விசாரணையின் போதே அந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

18வயதுக்கு குறைந்த சிறுவர்கள், மாணவ மாணவிகளை தனியாக சைபர் கபேக்கு அனுமதிக்கக்கூடாது.

பெற்றோர்களுடன் சிறுவர்கள் வரும்போது மட்டுமே அனுமதிக்கப்படவேண்டும். மாணவ மாணவிகளை சைபர் கபேக்குள் தனியாக அனுமதிக்கக்கூடாது. ஆசிரியர்கள்,பெற்றோர்களுடன் வரும்போது மட்டுமே அனுமதிக்கவேண்டும்.

காதலர்கள் பூங்காவாக சைபர் கபேக்கள் இயங்க அனுமதிக்கக்கூடாது.பொலிஸ் புலனாய்வு மூலம் சைபர் கபேக்கள் கண்காணிக்கப்பட்டு சைபர் குற்றங்கள் புரிகின்றார்களா என்பதை அவதானித்து சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சைபர் கபேக்களில் அறிவியல் புரட்சி தகவல்களை தர இறக்கம் செய்வதை விட யாழ்ப்பாணத்தில் பாலியல் ரீதியான இணையத்தள தர இறக்கங்கள் அதிகமாக இடம் பெறுவதாக தரவுகள் தெரிவிக்கின்றன.

சைபர் கபே பொதுமக்கள் மத்தியில் பொதுமக்கள் பாவனைக்காக நடத்தப்படுகின்ற போது சட்ட ஒழுங்குக்கு உட்பட்டு நடக்காத நபர்களை சட்டத்தின் முன்நிறுத்த வேண்டும்.

நீதிமன்ற கட்டளை பெற்று தொலைத்தொடர்பு நிறுவனங்கள்ஊடாககுறிக்கப்பட்ட சைபர் கபே சைபர் குற்றங்களைப் புரிகின்றனவா என்பதைக்கண்காணித்து அவர்கள் உள் நுழைகின்ற இணையத் தளங்களை அவதானித்து சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.


பேஸ்புக்,டுவிட்டர் போன்ற வலைத்தளங்கள் நன்நோக்கத்திற்காக, தொடர்பாடல்களுக்காக உருவாக்கப்பட்டவை. இந்த அறிவியல் புரட்சியை நாசப்படுத்தி சிலர் பேஸ்புக், டுவிட்டர் போன்ற சமூக வலைத்தளங்கள் மூலம் சமூக விரோதக்குற்றங்கள்,கலாசார சீரழிவுகளை புரிகின்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதை சட்டத்தின் ஊடாக கட்டுப்படுத்துவதற்கு சைபர் குற்றங்கள் சட்டத்தை யாழ்ப்பாணத்தில் அமுலுக்கு கொண்டு வரவேண்டும்.

எந்தத் தொலைபேசியில் இருந்து இயங்குகின்றது, எந்த கைத்தொலைபேசியிலிருந்து இயங்குகின்றது,எந்த தொலைத்தொடர்பு கோபுரப் பகுதியிலிருந்து இயங்குகின்றது என்பவற்றை தொழில்நுட்பம் மூலம் மிக இலகுவில் கண்டுபிடிக்கக்கூடிய இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியை பாவித்து நீதிமன்ற உத்தரவுகள் மூலம் கலாசார சீரழிவை ஏற்படுத்தும், சமூக சீரழிவை ஏற்படுத்தும் இணையத்தளங்கள் கட்டுப்படுத்தப்படுவதுடன் அவற்றுக்குத் துணை போகின்ற சைபர் கபேக்கள் சட்ட ரீதியாக இயங்குகின்றனவா? சட்டரீதியான பதிவுகளுடன் இயங்குகின்றனவா? சைபர் குற்றங்கள் புரிகின்றனவா? என்பவற்றை பொலிஸ் புலனாய்வின்மூலம் கண்காணித்து குற்றம் புரியும் சைபர் கபேக்களை நீதிமன்ற உத்தரவில் இழுத்து மூடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

அறிவியல் புரட்சியின் மூலம் அறிவை வளர்ப்பதற்கு நீதிமன்றம் தடையாக இருக்காது. மாறாக அறிவியல் புரட்சி என்ற போர்வையில் சமூக,கலாசார சீரழிவை ஏற்படுத்தும் யாழ்ப்பாணத்தில் இயங்கும் சைபர் கபேக்கள் சட்டக்கண்காணிப்புக்குள் பொலிஸ் புலனாய்வுக்குள் உடனடியாக கொண்டு வரப்பட்டு சைபர் குற்றங்கள் சட்டத்தின் கீழ் உடனடி நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகின்றார்கள் என நீதிபதி மேலும் அறிவுறுத்தியுள்ளார். (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்க பொன் விழா சிறப்பு மலர் - 27.06.2015



பொன் விழா குழு

### கீரிமலை நகுலேஸ்வர ஆதீன முதல்வர் இராஜஸ்ரீ கு.நகுலேஸ்வரக்குருக்களின் ஆசிச்செய்தி

தெல்லிப்பழை தெய்வீகம் நிறைந்த பூமி. துர்க்காதேவியின் கடாட்சத்தால் இளைஞர்கள் ஒன்றுபட்டு உருவாக்கிய தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் பெருமைக்குரியது.

இச்சங்கம் ஆலயத்தில் ஆற்றும் தொண்டுப்பணி கண்டுபூரிப்படைந்தவர்கள் பலர் நேரந்தவறாது தொண்டாற்றும் இச்சங்கம் வலி. வடக்கில் தனித்துவம் பெற்ற அமைப்பாக வளர்ச்சியடைந்துள்ளது. இச்சங்கத்தினர் எமது ஆலயத்திலும் தொண்டாற்றுவது வழக்கம். பொன்விழாக்காணும் இச் சங்கம் இவ்வையகம் உள்ளவரை சிறக்கநகுலாம்பாள்சமேதநகுலேஸ்வரப் பெருமானை வேண்டி ஆசிர்வதித்து அமைகின்றேன்.

**இராஜ ஸ்ரீ.கு.நகுலேஸ்வரக் குருக்கள்**

### நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் வழங்கிய ஆசிச்செய்தி



என்கடன் பணிசெய்து கிடப்பதே என்ற சிந்தனையோடு ஒன்றுபட்ட உணர்வுடன் தொண்டாற்றி வரும் தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் பொன்விழா குறித்து நல்லாசி வழங்குவதில் ஆனந்தமடைகின்றோம்.

ஆலயப் பணிகளில் இளைய சமூகம் அக்கறை கொள்ள வேண்டும். கடந்த ஐம்பது வருடங்களாக தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் ஆசாரத்தோடு தொண்டாற்றி வரும் இச்சங்கத்தினர் சேவையை வாழ்த்தாதவர்களில்லை.

ஒரே சீரான சால்வை வேட்டியுடன் அவர்கள் சுவாமி காவும் தொண்டு முதல் வீதியைச் சுத்தம் செய்யும் தொண்டுகள் பக்தர்களைப் பரவசப்படுத்தும்.

இச்சங்கம் போல் நல்லொரு ஊர்களிலும் சைவச்சங்கங்கள் உருவாகி நல்லவண்ணம் சிறக்கப் பிரார்த்திக்கின்றோம்.

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், நல்லைதிருஞானசம்பந்தர் ஆதீனம்.**


### செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி



தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் ஆரம்பித்து ஐம்பது ஆண்டுகள் நிறைவடைவது குறித்து வாழ்த்துகின்றேன். எங்கள் தேவஸ்தானத்தின் வளர்ச்சியில் அயராது பாடுபடும் சங்கத்தின் பொன்விழா சிறக்கத் துர்க்காதேவியை வணங்குகின்றேன்.

சிரமதானப் பணிகளால் பெருமை பெற்ற இச்சங்கம் மேலும் மேலும் தூய தொண்டாற்றித் தம்பணி தொடர வேண்டுகின்றேன். எங்கள் சமயம் சார்ந்த சமூகப் பணிகள் பல காத்திருக்கின்றன. வலி. வடக்கில் போரால் சீரற்றுப்போன ஆலயங்களிலும் இச்சங்கம் அக்கறை கொண்டு சேவையாற்றுமாறு அன்புடன் வேண்டுகின்றேன். பொன் விழாவை வெற்றிகரமாக நிறைவேற்றும் சபையினர்க்கும் இச்சங்கத்தின் மேன்மைக்காக உழைத்த அனைவருக்கும் இதயபூர்வமான ஆசிகள் உரித்தாகுக.

**கலாநிதி ஆறுதிருமுருகன், தலைவர், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.**



எல்லாம்வல்ல ஸ்ரீ துர்க்காதேவியின் திருவருளோடும் அன்னை சிவத்தமிழ்ச் செல்வி அம்மாவின் நல்லாசியோடும் தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தினர் தமது 50ஆவது ஆண்டு பொன்விழாவினைக் காண்பது மிகச்சிறப்பான நிகழ்வாகும்.

எமது இளைஞர்கள் அம்பிகையின் நித்திய, நைமித்திய விழாக்களில் நம்மால் இயன்ற சரியைத் தொண்டினை ஆற்றி சமூகத் தொண்டினையும் ஆற்றி அம்பிகையின் பேரருளைப் பெற்று பெருவிருட்சமாக வளர்ந்து வருகிறார்கள்.

வருங்காலத்தில் இச்சங்கம் நூற்றாண்டினை காண்பதற்கு அம்பிகையின் அருளும் அம்பிகையின் ஆசியும் கிடைக்கப் பிரார்த்தித்து வாழ்த்துக்களும் எமது நல்லாசிகளையும் வழங்குவோமாக.

**சிவஸ்ரீ வா.அகிலேஸ்வரக்குருக்கள், பிரதம சிவாச்சாரியார், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம், துர்க்காபுரம், தெல்லிப்பழை**



தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் 50 வருடங்கள் தாண்டி பொன்விழாக் காண்பதையிட்டு மாவை ஆதீனப் பேரரசு மிகுந்த மகிழ்ச்சியடைகின்றது.

மேலும் இளைஞர் சங்க அங்கத்தினர் செய்துவரும் தொண்டுகள் அளப்பரியன.

இன,மத, மொழி வேறுபாடின்றி இளைஞர் சங்க அங்கத்தினர் மாபெரும் தொண்டுகளைச் செய்து முக்கியமாக சைவமும் தமிழும் வளர சேவைகளைப் புரிய அவர்களது முயற்சிகள் வெற்றியடைய எல்லாம்வல்ல மாவை கந்தப்பெருமானின் திரு வருள் கிடைக்க மாவை ஆதீனப் பேரரசு ஆதீன கர்த்தாக்களின் ஆசியுடன் வாழ்த்தி ஆசீர்வதிக் கிறேன்.

**மாவைக் கந்தா**
**போற்றி போற்றி**
**நின்பாதம் சரணம்**
**மஹாராஜஸ்ரீ து.டி.இரத்தின சபாபதிக் குருக்கள், ஆதீன கர்த்தா.**

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி அம்பாள் கோவிலில் மகா கும்பாபிஷேகம் 1981 ஆம் ஆண்டு நடைபெற்றது. அப்பெருவிழாவில் பங்குபற்றுகின்ற பேறு எமக்குக் கிடைத்தது. கும்பாபிஷேகம் தொடர்ந்து நடைபெற்ற மண்டலாபிஷேகத்திலும் பணிபுரிகின்ற வாய்ப்பு எமக்குக் கிட்டியது. அதே ஆண்டில் நடைபெற்ற இராஜகோபுர பணிக்கு இந்து இளைஞர் குழாம் அத்திபாரம் தொடக்கம் கோபுர கும்பா பிஷேகம் வரை தமது சரீர உதவியை செய்ததாக தங்கம்மா அப்பாக்குட்டி மூலம் அறிய முடிந்தது.

அன்றையகாலம் தொடக்கம் நித்திய நைமித்திய பணியைச் செய்வதற்கு வாய்ப்புக் கிட்டியது.சமகாலத்தில் தேர் ஓடும் வீதிகள் செப்பனிப்படுகின்ற பணியில் இளைஞர்கள் ஈடுபட்டதைக் கண்டோம். அவர்கள் தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கமாக உதயம் பெற்று அம்மையாரின் வழிகாட்டலில் தமது சங்கத்தை பாடுதல், பரவுதல், பணிசெய்தல் என்னும் சின்னத்துடன் சங்கத்தை வளர்ச்சியடையச் செய்தனர்.

குறிப்பாக மகோற்சவம், நவராத்திரி, கௌரிவிரதம், ஆடிச்செவ்வாய் போன்ற விசேட விழாக்காலங்களில் நமது திருத்தொண்டு பணிகளைத் திறம்படச் செயலாற்றினார்கள். உசன் கந்தசுவாமி கோயில் உற்சவ காலங்களிலும் தேர்த்திருவிழாவிலும் தமது தொண்டினைச் செய்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இவர்களின் துரித வளர்ச்சியின் காரணமாக சங்கத்திற்குச் சொந்தமாக காணி வாங்கி கட்டடத் தொகுதியினை நிர்மாணித்து அதன்மூலம் கிடைக்கப்பெறும் வருமானத்தில் பரிசளிப்பு விழாக்களும், நவராத்திரி விழாக்கள், சமூகப் பணிகள், தேரடி உற்சவம் அறிஞர்களை கௌரவித்தல் போன்ற விழாக்களுடன் நில்லாது தமது சங்கத்தைச் சுற்றியுள்ள இடங்களில் வர்த்தகக் கொட்டகைகளை அமைத்து அதன்மூலம் ஈட்டும் வருமானங்களைக் கொண்டு சங்க வளர்ச்சியை மேம்படச் செய்து ஐம்பதாவது ஆண்டு பொன்விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்து இளைஞர் குழாம் ஒற்றுமையாகி நாட்டில் நல்ல பிரஜைகளாக, ஒழுக்கம் உள்ளவர்களாக, சமயப் பற்றுள்ளவர்களாக, சமூகப் பணியில் மேம்படுத்துவதாகவும் திகழவேண்டும் என்பதை அம்பாளின் திருக்கடாட்சமும் சுந்தர ஆஞ்சநேயப் பெருமானின் திருவருளும் கிடைக்கவேண்டுமென என் நல்லாசிகளைக் கூறுகின்றேன்.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.**

**லோகா சமஸ்தா சுகினோ பவந்து**
**சிவஸ்ரீ.இ.சுந்தரேஸ்வரக் குருக்கள், ஆதீன கர்த்தாவும் சிவாச்சாரியாரும், ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோவில், மருதனார்மடம், சுன்னாகம்.**

### வலி. வடக்கு பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி

வலி.வடக்குப் பிரதேசத்தில் தனக்கென தனித்துவமான பண்புகளைக் கொண்டியங்கும் தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கமானது ஐம்பதாவது அகவையினைக் கொண்டாடுவதையிட்டு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிக்க உவகையடைகின்றேன். தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கமானது இக்கிராம இளைஞர்களின் பங்களிப்புடன் என் கடன் பணி செய்து கிடப்பதே என்பதைத் தாரக மந்திரமாகக் கொண்டு 1965 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு அன்று முதல் இன்றுவரை தெல்லி நகரை அழகுறச் செய்கின்ற துர்க்கையம்மன் ஆலயத்துடன் அமைந்து அளப்பரிய பங் காற்றி வருகின்றமை யாவரும் அறிந்ததே.

தெல்லிநகர் துர்க்காதேவி ஆலயத்துடன் மட்டுமல்லாது தெல்லிப்பழைப் பகுதியில் அமைந்துள்ள பல ஆலயங்களிலும் சரியைத் தொண்டாற்றி வருகின்றமையும் எல்லோருக்கும் தெரிந்த ஓர் விடயமாகும். அதுமட்டுமல்லாது மக்கள் சேவையே மகேசன் சேவை என இவ்வூர் மக்கள் போக்குவரத்துச் செய்யும்போது வெயிலிலும் மழையிலும் அவர்களைப் பாதுகாக்கவென பஸ்தரிப்பு நிலையம் ஒன்றினையும் அழகுற அமைத்துச் கொடுத்தமை இச்சங்கத்தின் சமூகப் பணிகளில் ஒன்றாகும். மேலும் இவ்வூரில் அமைந்துள்ள பாடசாலைகள், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை என்பவற்றிற்கும் தம்மாலான சமூகப் பணிகளையும் செய்து வந்துள்ளனர். அத்தோடு தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில் மஹோற்சவ காலத்தில் இச்சங்கமானது அளப்பரிய சேவையினை தொடர்ச்சியாக ஆற்றி வருகின்றமையும் அனைவரும் அறிந்த விடயமே.

எனவே இவ்வாறான சமய சமூகப் பணிகளை வலி.வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்டு துர்க்காபுரம் பிரிவில் இருந்து ஆற்றிவரும் இச்சங்கமானது மென்மேலும் பல சிறப்புக்களைப் பெற எல்லாம்வல்ல அன்னையின் பாதார விந்தங்களை வணங்கி எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்**
**சோ.சுகிர்தன் - பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், வலி.வடக்கு, தெல்லிப்பழை.**

### தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் போசகர் தேசகீர்த்தி லயன் ச.ஆறுமுகநாதன் அவர் களின் வாழ்த்துச்செய்தி



ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இளைஞர்களாகிய நாம் உருவாக்கிய இச்சங்கம் இன்று பொன் விழாவைச் சந்தித்துள்ளது.

இச்சங்கத்தின் ஆரம்ப வளர்ச்சிக்கு எம் மோடு உழைத்தவர்கள் பலர். இன்று பொன் விழாக்காலத்தில் சிலர் அமரவுலகில் இருந்து வாழ்த்துவர். எமது சங்கத்தின் குறிக்கோள் தொண்டு செய்தலே. எம் சங்கத்தின் பாரிய தொண்டுப் பணிகள் என்றும் தொடர இறையருளை வேண்டி வாழ்த்துகிறேன்.

ச.ஆறுமுகநாதன்

### வாழ்த்துரை



அருள்மிகு துர்க்கை அம்பாளின் அருட் துணையால் 1965-ம் ஆண்டு நிகழ்ந்த கும்பாபிஷேகத்தின் போது அன்னையின் பணியில் இணைந்த தொண்டர் கூட்டமே, அன்றைய பெரியோர்களால் இந்து இளைஞர் சங்கமாக மலர் வழிகாட்டியது எனலாம்.

அவ்விதம் பாடு, பரவு, பணிசெய் என்கின்ற மகுடவாசகத்தை அடிப்படையாகக் கொண்டு சரியைப்பணிபுரிதலே எமது மிக முக்கிய கடனாக அமைந்தது. அவ்விதம் துர்க்கையின் தொண்டில் இணைந்த நாம் 1990-ல் அன்னையின் அருளினால் வெள்ளி விழாவினை மிகச்சிறப்பாக செய்தோம். இன்று எம் அங்கத்தவர்களின் அரிய முயற்சியினால் 50-வது ஆண்டு நிறைவு பொன்விழா கொண்டாடுவதில் பேருவகை அடைகின்றோம். அவ்விதம் அன்னையின் அருளால் அன்னைக்கு பணி செய்யும் எமது சங்கம் பொன்விழாவினை மட்டுமல்ல வைர விழா, பவளவிழா, அமுதவிழா, எனப்பலவிழா கண்டு பலநூறு ஆண்டுகள் அன்னையின் அருளால் வளம்பெற்று வாழ வாழ்த்துகிறேன்.

**திரு.சி.ரஜீவ்காந்**
**தலைவர், தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்து சந்தர்ப்பங்களிலும் அமெ. இலங்கைக்கு உதவும்

## அமெரிக்க பதில் தூதுவர் தெரிவிப்பு

வடக்கிலும் கிழக்கிலும் 20 ஆயிரம் புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்துவருவதாக தெரிவித்துள்ள கைத்தொழில் வணிகத்துறை அமைச்சர் றிசாத் பதியுதீன் அதற்கு அமெரிக்காவின் உதவிகளையும் எதிர்பார்ப்பதாக கூறினார்.

அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கும் இலங்கைக்கான அமெரிக்க பதில் தூதுவர் அன்று சீமானுக்கும் இடையில் ஏற்றுமதி அபிவிருத்தி சபையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு வேண்டுகோள்விடுத்தார்.

இந்த சந்திப்பின் போது அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவிக்கையில்,

இலங்கையின் நுகர்வு பொருட்களை அமெரிக்கா கொள்வனவு செய்துவருகின்றது. இலங்கையின் அமெரிக்காவுக்கான ஏற்றுமதி 2 பில்லியன்களாகும். அந்த வகையில் தைத்த ஆடைகளே அதிகமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இன்னும் இலங்கையில் அமெரிக்காவின் முதலீட்டாளர்கள் தமது முதலீடுகளை செய்வதற்கான சந்தர்ப்பம் தற்போது ஏற்பட்டுள்ளது என நம்புகின்றேன். இலங்கையின் எழுத்தறிவு வீதம் ஆசியாவில் முன்னணியில்



இருக்கின்றது. தொழிலாளர்களின் உழைக்கும் திறமை மிகவும் உயர்ந்த நிலையில் உள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புதிய ஆறு தையல் தொழிற்பேட்டைகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டுள்ளேன். அதில் மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ,அம்பாறை ஆகிய மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

யுத்தம் இந்த நாட்டில் பெரும் அழிவினை ஏற்படுத்தியுள்ளது. இதனால் பெரும் எண்ணிக்கையிலான விதவைகள் வடக்கிலும் கிழக்கிலும் இன்று காணப்படுகின்றனர். இவர்களது வாழ்வாதார மேம்பாடுகளுக்கு தொழில வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் இந்த தொழிற்பேட்டை ஆரம்பிக்கவும் திட்டமிட்டுள்ளேன் என்றும் கூறினார்.

இது தொடர்பில் அமெரிக்க பதில் தூதுவர் கருத்து தெரிவிக்கையில்,

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலுள்ள நட்புறவு மிகவும் முக்கியமானது. எல்லா சந்தர்ப்பங்களிலும் இலங்கைக்கு உதவி செய்யும் எண்ணத்தை அமெரிக்கா கொண்டுள்ளது. அமைச்சரின் அழைப்பின் பேரில் அமெரிக்க முதலீட்டாளர்கள் மற்றும் வியாபார சமூகத்தை இலங்கைக்கு அழைத்துவர நாம் நடவடிக்கையெடுக்கவுள்ளோம். அதேபோல் இலங்கையின் புதிய தொழில் வாய்ப்புக்களுக்கு அமைச்சர் றிசாத் பதியுதீன் முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு எமது ஒத்துழைப்பினை வழங்குவதாகவும் அமெரிக்க பதில் தூதுவர் கூறினார்.

அதேவேளை, இரு தரப்பு வர்த்தக உடன்படிக்கை தொடர்பிலும் இரு தரப்பு சந்திப்புக்களை எதிர்காலத்தில் ஏற்படுத்தவும் இதன்போது இனக்கம் காணப்பட்டது.

இந்த சந்திப்பின் போது ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தலைவர் பந்துல எகொடகே உள்ளிட்ட அதிகாரிகளும் இதன்போது கலந்துகொண்டனர். (2)



வவுனியா பெரிய கோமரசன்குளம் யேசுபுரத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ வீர துர்க்கை அம்பாள் ஆலய ஜெய வருட பங்குனி உத்தரம் அண்மையில் நடைபெற்ற போது...

## தேசிய வீடமைப்பு தினத்தையொட்டி பயனாளிகளுக்கு காசோலைகள்




தேசிய வீடமைப்பு தினத்தையொட்டியும்காலம் சென்ற முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் பிறந்ததினத்தையொட்டி யும் மடு பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு மன்னார் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் அண்மையில் காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டன.

"சமட்ட செவன" வீடமைப்புத் திட்டத்தின் கீழ் மடு பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் தெரிவுசெய்யப்பட்ட 12 பயனாளிகளுக்கு முதலாவது கட்ட கொடுப்பனவு வைபவ ரீதியாக வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மடுசெயலகத்தில்இடம்பெற்ற இந்நிகழ்வில் மடு பிரதேச செயலாளர் எஸ்.சத்தியசோதி மற்றும் மன்னார் மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் மாவட்ட முகாமையாளர் திருமதி ஆர்.சுகர்னராஜா ஆகியோர் கலந்துகொண்டு காசோலைகளை வழங்கி வைத்தனர். (2)

## கேப்பாபிலவு-புதுக்குடியிருப்பு பாலம் புனரமைப்பது எப்போது?

### பொதுமக்கள் கேள்வி

(முள்ளியவளை)

கரைதுரைப்பற்று, புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் ஆகியவற்றிற்கான எல்லையில் புதுக்குடியிருப்பு கேப்பாபிலவு பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

தற்போது குறித்த பாலம் பலத்த சேதமடைந்து பயணிப்போர் ஆபத்தை எதிர்கொள்ளும் நிலையில் காணப்படுகின்றது. இதே வேளை பாலம் சேதம் அடைந்தமைக்கு எதுவித சமிக்ஞைகளும் போடப்படவில்லை.

இவ் வீதியானது முல்லைத்தீவு மாவட்ட வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்குச் சொந்தமானதாகும்.

எனவே சம்ப ந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய



கவனமெடுத்து சேதமடைந்துள்ள பாலத்தை திருத்தி அச்சமின்றி மக்கள் பயணிக்க உதவுமாறு கோரிக்கை விடுக்கப்படுகின்றது.(2-302)

## கட்டடத் தேவைக்காக வைக்கப்பட்ட நீர்த்தாங்கி களவாடப்பட்டது

(முள்ளியவளை)

அரசின் நூறு நாள் வேலைத்திட்டத்தின் கீழ் கிராமத்திற்கான ஒரு மில்லியன் ரூபா ஒதுக்கீட்டின் அடிப்படையில் முள்ளியவளை கிழக்கு கிராமசேவையாளர் பிரிவின் கீழ் நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சனசமூக நிலைய கட்டடத் தேவைக்காக வைக்கப்பட்டிருந்த ஆயிரம் லீற்றர் கொள்ளளவு கொண்ட நீர்த்தாங்கி நேற்று முன்தினம் இரவு திருடர்களால் களவாடப்பட்டுள்ளது.

இது குறித்து முள்ளியவளை கிழக்கு கிராம அபிவிருத்தி சங்கத்தினரால் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நீர்த்தாங்கி [illegible] திற்கு சொந்தமானதாகும். (2-302)




## வருடாந்த பொங்கல் விழா

(குருமன்காடு)

வவுனியா கிடாச்சூரி கண்ணகை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய த்தின் வருடாந்த பொங்கல்விழா அண்மையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிதொடர்ந்து எட்டுதினங்கள் அபிஷேக [illegible] பூசை கள் நடை பெறும். எதிர்வரும் 29ஆம் திகதி திங் கட்கிழமை பொங்கல்விழா நடைபெற்று கொடியிறக்கத்துடன் பொங் கல் திருவிழா நிறைவுபெறும்.

இம்முறை பொங்கல்விழா கட ந்த 19ஆம் திகதி கொடியேற்றத் துடன் நடைபெறவிருந்த வேளை ஆலயத்தின் பிரதம பூசகரின் தந்தையும் முன்னாள் தலைமை பூச கருமான அருணாசலம் ஆறுமுகம் திடீரென மரணமடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (2-250)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 23 மில்லியன் ரூபா செலவில்

# முல்லைத்தீவு விநாயகர்புரத்தில் ஏற்று நீர்ப்பாசனத் திட்டம்

## வடக்கு மாகாண விவசாய அமைச்சரினால் விவசாயிகளிடம் நேற்று கையளிப்பு





முல்லைத்தீவு விநாயகர் புரத்தில் 22.7 மில்லியன் ரூபாய் செலவில் உருவாக்கப்பட்ட ஏற்று நீர்ப்பாசனத்திட்டம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வடக்குமாகாணவிவசாய அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில், மேற்கொள் ளப்பட்ட இத்திட்டத்தை விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் திறந்து வைத்து, அதனை இத் திட்டத்தின் பயனாளிகளான விநாயகபுரம் விவசாயிகளிடம் கையளித்துள்ளார்

போரினால் இடம்பெயர்ந்த விநாயகபுரம் மக்கள் மீள் குடியேறிய தன் பின்னர் நீர்ப்பாசன வசதிகள் இல்லாமையால் பயிர்செய்கையை மேற்கொள்ள முடியாமல் இருந்தனர். இது விவசாய அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டதை அடுத்து வவுனிக்குளம் இடதுகரை வாய்க்காலில் இருந்து நீரைப்பெறும் வகையில் இத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 130 விவசாயக்குடும்பங்கள் பயனடையவுள்ளன.

விநாயகபுரம் ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தில் கால்வாய்களுக்குப் பதிலாக குழாய்களின் மூலம் நீர் விநியோகிக்கப்படுவதோடு, ஒவ்வொரு விவசாயியும் தான் பயன்படுத்தும் நீரின் அளவை அறிவதற்கேற்ற முறையில் விவசாயக்காணிகளில் தனித்தனியாக நீர் அளவை மானிகளும் பொருத்தப்பட்டுள்ளன.

நீர் விரயமாகாத விதத்தில் இவ்வாறானதொரு ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் வடக்கில் உருவாக்கப்பட்டிருப்பது இதுவே முதன் முறையாகும்.

முல்லைத்தீவு மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் ந.ஸ்ரீஸ்கந்த ராஜா தலைமையில் நடை பெற்ற இத்திறப்புவிழா நிகழ்ச்சியில் வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன், மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் சோ.சண்முகநாதன், ஒய்வுநிலை நீர்ப்பாசன பணிப்பாளர் சோ.சிவபாதம், பிரதிநீர்ப்பாசப் பணிப்பாளர் கள் ந.சுதாகரன், ந.நவநேசன் ஆகியோருடன் அதிக எண்ணிக்கையிலான விவசாயிகளும் கலந்து கொண்டிருந்தார்கள். 2)

### அவசர கலந்துரையாடல்

(திருவையாறு)

கிளிநொச்சி மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெறும் என கிளிநொச்சி மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கத் தலைவர் இ.ஜெயராஜ் அறிவித்துள்ளார். எனவே, அனைத்து தொண்டர் ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (இ-2)

### வித்தியா மாலை நிகழ்வு

(கிளிநொச்சி)

வவுனியா சங்கத்தின் ஏற்பாட்டில் கிளி/ சிவநகர் அரசினர் தமிழ்க் கலவன் அ.த.க. பாடசாலையில் நேற்று முற்பகல் 11 மணி அளவில் வித்தியா மாலை நிகழ்வு நடைபெற்றது.

இதில் ஸ்ரீகல்கி பகவதி பகவானின் அனுக்கிரகத்துடன் மாணவர்களை தமது வாழ்வில் உன்னத நிலையை அடையச்செய்து சாதனையாளர்களாக்கி ஒழுக்கம், பணிவு, இறைசிந்தனை உள்ள இளைஞர் சமுதாயத்தை உருவாக்கி அவர்கள் வாழ்வில் வெற்றியும் ஆனந்தமும் அன்பும் நிறைந்தவர்களாக மாற்றுவதே இதன் நோக்கமாகும்.

வாழ்க்கையில் பெற்றோரை முதல் தெய்வமாக மதித்து கடைப்பிடித்து வந்தால் எதிர்கால வாழ்வு சிறப்பாக அமையும் என வலியுறுத்தப்பட்டது. (2-254)

### ஞாயிற்றுக்கிழமைகளில் சுழற்சி முறையில் மரக்கறிக் கடைகளைத் திறப்பதற்கு அனுமதி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொதுச்சந்தை மரக்கறி வியாபாரிகளின் நலன்கருதி ஞாயிற்றுக்கிழமைகளில் சுழற்சி முறையில் மரக்கறிக் கடைகளைத் திறப்பதற்கு கரைச்சி பிரதேச சபை அனுமதி வழங்கியுள்ளதாக சந்தை வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

குறித்த சந்தையில் 48 மரக்கறிக்கடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் மரக்கறி வியாபாரிகள் தமக்கு விடுப்பு தேவையென்பதை கருதிற்கொண்டு அவர்களால் கையொப்பமிடப்பட்ட மகஜர் ஒன்று அண்மையில் கரைச்சிப் பிரதேச சபை தவிசாளரிடம் கையளிக்கப்பட்டது.

இதனையடுத்து கரைச்சி பிரதேச சபை தவிசாளர் ஞாயிற்றுக் கிழமைகளில் 24 மரக்கறிக்கடைகளை சுழற்சி முறையில் திறப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-271)

### வித்தியாபுரம் சந்தையிலுள்ள 7 கடைகளுக்கு கேள்வி விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(மல்லாவி)

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு உட்பட்ட ஒட்டிசுட்டான், ஒலுமடு ஆகிய உப- அலுவலக எல்லைக்கு உட்பட்ட வித்தியாபுரம் சந்தையில் அமைக்கப்பட்டுள்ள 7 கடைகளுக்கான கேள்வி விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் கு.மிதிலைநாதன் அறிவித்துள்ளார்.


இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில் மேற்படி கடைகளுக்குரிய கேள்விப்பத்திரங்களைப் பெறவிரும்புபவர்கள் புதுக்குடியிருப்பு பிரதேச சபையினுடை ஒட்டிசுட்டான், ஒலுமடு ஆகிய உப-அலுவலக எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

கடைகளுக்குரிய கேள்விப்பத்திரங்கள் தொடர்பான தகவல்களையும் விளக்கங்களையும் பெற விரும்புவோர் புதுக்குடியிருப்பு பிரதேச சபை செயலகத்திலும் மற்றும் ஒட்டிசுட்டான், ஒலுமடு ஆகிய இடங்களில் உள்ள உப- அலுவலகங்களிலும் பெற்றுக் கொள்ள முடியும்.

கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி எதிர் வரும் ஜுலை மாதம் 23 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணி ஆகும்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை இருபிரதிகள் தயாரித்து மூலப்பிரதியை செயலாளர், புதுக்குடியிருப்பு பிரதேச சபை, புதுக்குடியிருப்பு எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலும் மறு பிரதியை பிராந்திய உள்ளூராட்சி, உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு எனும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (2-15)







கிளி/ தருமபுரம் மத்திய கால்லூரி மாணவர்களினால் நேற்றைய தினம் காலை 9.30 மணிக்கு போதைப் பொருட்களின் பாவனைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கண்டனப் பேரணி ஒன்று நடத்தப்பட்ட போது....

(படங்கள்:- தருமபுரம செய்தியாளர்)





போதைப் பொருட்களின் பாவனைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றைய தினம் முல்லைத்தீவில் பாடசாலை மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட கவனயீர்ப்பு ஊர்வலம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1176

# டொம் வருது... டொம் வருது..!

ஒரு காட்டில் முயல்குட்டி ஒண்ணு இருந்துச்சாம். ஒரு நாள், அதுக்கு சரியான விருந்து கிடைச்சது. கரட், தக்காளி, முட்டைக்கோஸ் எல்லாத்தையும் ஒரு பிடி பிடிச்சது. சிலுசிலுனு காத்து வர்ற ஓடக்கரை பக்கமா வந்துச்சு. "மெத மெத்" புல்வெளியில் படுத்தது. அடுத்த நிமிடமே ஆனந்தமா தூங்கிருச்சு.

கொஞ்ச நேரம் போனதும், 'டொம்'னு ஒரு சத்தம், "ஏதோ கனவு"னு அரைத்தூக்கத்தில் புரண்டு படுத்துச்சு. மறுபடியும் 'டொம்' சத்தம். "என்னடா இது?"னு எழுந்து பார்த்துச்சு. ஒண்ணையும் காணோம். மறுபடி கண்ணை மூடிப்படுத்தால், அதே 'டொம்' சத்தம். முயல் குட்டி ஏற்கனவே டைனோசர் பத்தி கேள்விப்பட்டு இருக்கு. போதாததுக்கு, நண்பன் குரங்கு வேறு "வித்தியாசமான விலங்குகள்" பற்றிய புத்தகத்தைக் காட்டிப் பயமுறுத்தி இருந்தது. "அந்த மாதிரி ஏதோ வந்துடுச்சோ?" ன்னு முயல் யோசிச்ச சமயம், மறுபடியும் ஒரு 'டொம்' சத்தம்.

அடுத்த நிமிஷம் துள்ளி எழுந்த முயல், "அய்யய்யோ! டொம் வருது" னு கத்தியபடியே ஓட ஆரம்பிச்சுது. அப்போ எதிரில் வந்த யானை, "ஹேய்... ஏன் இப்படி ஓடுறே?" ன்னு கேட்டுச்சு.

"டொம் வருது... சீக்கிரம் ஓடு"னு சொல்லிகிட்டே முயல்குட்டி ஓடிச்சு. யானையும் "பெயரே பயமுறுத்துற மாதிரி இருக்கே... இங்கே நிக்கிறது சேஃப்டி இல்லை"ன்னு முயல்குட்டி பின்னாடியே ஓட ஆரம்பிச்சது.

இதைப்பார்த்த ஒரு கரடி, "யானை அண்ணே... எங்கே ஓடுறீங்க?" என்று கேட்டுச்சு.



"விடயமே தெரியாதா? டொம் வருதாக்கும்" என்று சொல்லிக்கிட்டே ஓடிச்சு யானை. "யானையே பயந்து ஓடுதுனா, அந்த டொம்கிட்டே நாம மாட்டினா சட்னிதான்"னு அதுவும் ஓட ஆரம்பிச்சது.

இப்படியே ஒட்டகச்சிவிங்கி, மான், குரங்கு, கழுகு, புறா என எல்லாமே, "டொம் வருது... டொம் வருது'னு ஓடினதைப் பார்க்கிறப்ப, வியப்பாக இருந்துச்சு.

எல்லாம் சேர்ந்து சிங்கராஜா முன்னாடிபோய் நின்னாங்க. "ராஜா... ராஜா டொம் வருது காப்பாத்துங்க" ன்னு அலறினாங்க.

கொஞ்சம் முன்னாடிதான் ராணியோடு சண்டை போட்டு, அந்தக் கடுப்பில் உட்கார்ந்து இருந்தாரு சிங்க ராஜா. அதுக்கு செம கடுப்பு. "டொம்மா... அது யாரு?" ன்னு கேட்டாரு.

"அது பயங்கரமான விலங்கு. யானையைவிட பத்து மடங்கு வெயிட். ஒட்டகச்சிவிங்கியைவிட இருபது மடங்கு ஹைட்... உங்களைவிட நூறு மடங்கு திறமைசாலி" ன்னு ஒரு குரங்கு அடிச்சுவிட்டுச்சு.

சிங்க ராஜாவின் கடுப்பு உச்சி வெயில் மாதிரி 'கிர்ர்ர'ன்னு ஏறப்போச்சு. "ஓகோ... அந்த டொம் அவ்வளவு பெரிய ஆளா? அதை ஒரு கை பார்த்துடுறேன்"னு கிளம்பிடுச்சாம்.

முயல்குட்டி வழிகாட்ட, எல்லோரும் ஓடக்கரைக்கு வந்து சேர்ந்தாங்க. அங்கே யாருமே இல்லை. முயல் குட்டியோ... "ஐயோ, அந்த டொம் இங்கேதான் இருக்கு. ஒரு வேளை கண்ணை மூடிக்கிட்டாத்தான் வரும் போலிருக்கு"ன்னு சொல்லிச்சு.

"சரி, எல்லோரும் கண்களை மூடுங்க"ன்னு சொல்லிச்சு சிங்கராஜா. அப்படியே கண்களை மூடின கொஞ்ச நேரத்துல "டொம்"னு சத்தம்.

"பார்த்தீங்களா.... பார்த்தீங்களா... டொம் வந்துடுச்சு"ன்னு அலறிச்சு முயல்குட்டி.

கண்ணைத் திறந்து பார்த்தால் யாரும் இல்லை. சிங்க ராஜாவுக்கே பயம் வந்துருச்சு. "சரி, இப்போ எல்லோரும் அமைதியா இருந்து கவனிப்போம்"னு சொல்லிச்சு.

எல்லா விலங்குகளும் கண்களைக் கோலிக் குண்டு கணக்கா முழிச்சுக்கிட்டு கவனிச்சாங்க. முயல்குட்டி மட்டும் பயந்துட்டு கண்ணை மூடிட்டே இருந்துச்சு. அப்போ, "டொம்"னு பெரிய சத்தத்தோடு, ஓடக்கரையில் இருந்த தென்னை மரத்தில் இருந்து, ஒரு பெரிய இளநீர் தண்ணிக்குள்ளே விழுந்துச்சு.

"ஐயோ... டொம் வந்திருச்சு"னு சொல்லிக்கிட்டே முயல் குட்டி கண்ணைத் திறந்து பார்த்துச்சு. எல்லா விலங்குகளும் தன்னையே முறைக்கிறதைப் பார்த்து, அதுக்கு ஒண்ணும் புரியலை.

"ஒண்ணு இல்லே... ரெண்டு இல்லே... எத்தனை டொம உன்னைத் துரத்தப்போகுது பாரு" என்ற சிங்க ராஜா, "ரெடி ஸ்டார்ட்"ன்னு சொல்லிச்சு.

அத்தனை விலங்குகளும் "டொம்... டொம்"ன்னு சொல்லிக்கிட்டே முயல்குட்டியைத் துரத்த ஆரம்பிச்சது. "ஆகா! சாப்பிட்டது எல்லாம் செரிச்சுடும் போலிருக்கே"ன்னு அலறிக்கிட்டே ஓட ஆரம்பிச்சது முயல்குட்டி.

06.2015 27

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1358 - துப்ரோவ்னிக் குடியரசு அமைக்கப்பட்டது.
- 1709 - ரஷ்யாவின் முதலாம் பியோத்தர் பொல்டாவா என்ற இடத்தில் சுவீடனின் பன்னிரண்டாம் சார்ல்சின் படைகளை வென்றான்.
- 1801 - கெய்ரோ நகரம் பிரித்தானியப் படையினரிடம் வீழ்ந்தது.
- 1806 - புவனஸ் அயரசை பிரித்தானியர் கைப்பற்றினர்.
- 1950 - கொரியப் போரில் பங்கு பற்றவென ஐக்கிய அமெரிக்கா தனது படைகளை அனுப்ப முடிவு செய்தது.
- 1954 - இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் உருவாக்கப்பட்டது.
- 1954 - உலகின் முதலாவது அணுக்கரு ஆற்றல் உற்பத்தி மையம் மொஸ்கோவுக்கு அருகில் ஒப்னின்ஸ்க் என்னும் இடத்தில் அமைக்கப்பட்டது.
- 1967 - உலகின் முதலாவது ஏடிஎம் (ATM) லண்டன் என்ஃபீல்டில் அமைக்கப்பட்டது.
- 1974 - அமெரிக்க ஜனாதிபதி ரிச்சார்ட் நிக்சன் சோவியத் ஒன்றியத்துக்கு பயணம் மேற்கொண்டார்.
- 1977 - சீபூட்டி பிரான்சிடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1979 - முகமது அலி குத்துச்சண்டையில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.
- 1991 - சுலோவீனியா தனது விடுதலையை அறிவித்த இரண்டாம் நாளில் யுகோஸ்லாவியா அதன் மீது படையெடுத்தது.
- 1998 - கோலாலம்பூர் சர்வதேச விமான நிலையம் திறக்கப்பட்டது.
- 2007 - டோனி பிளேர் பிரதமர் பதவியைத் துறந்ததைத் தொடர்ந்து கோர்டன் பிறௌன் ஐக்கிய இராச்சியத்தின் பிரதமரானார்.

### பிறப்புகள்

- 1880 - ஹெலன் கெல்லர், அமெரிக்கப் பெண் எழுத்தாளர் (இ. 1968)
- 1922 - அகிலன், தமிழில் ஞானபீட விருது பெற்ற முதல் எழுத்தாளர்
- 1927 - டொமினிக் ஜீவா, ஈழத்தின் எழுத்தாளர், இதழாசிரியர்

### இறப்புகள்

- 1999 - ஜோர்ஜ் பப்படபவுலஸ், முன்னாள் கிரேக்க அரசுத் தலைவர் (பி. 1919)
- 2007 - டி. எம். தியாகராஜன், கர்நாடக இசைக் கலைஞர் (பி. 1923)
- 2009 - இ. முருகையன், ஈழத்துக் கவிஞர் (பி. 1935)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களை தமிழன்தான் ஆள வேண்டும்



பிரபாகரன் சிலை அகற்றிய விவகாரம், ஆந்திராவில் தமிழர் ஊடகங்களில் தென்படுகிறார் தமிழர் முன்னேற்றப் படையின் நிறுவனர் வீரலட்சுமி. தென்னிந்திய நடிகர் சங்கத்தை முற்றுகையிடும் போராட்டத்துக்கான கூட்டம் நடத்திக்கொண்டிருந்த அவரைச் சந்தித்தபோது.

**"நீங்கள் யார்? உங்கள் பின்னணி என்ன?"**

"என் சொந்த ஊர் சென்னை. என் தந்தை ஆசிரியராகப் பணி புரிந்தவர். அவர் சிறு வயதில் இருந்தே எனக்கு நற்பண்புகளைச் சொல்லி வளர்த்தார். வீர மங்கை வேலு நாச்சியார் போல ஒரு சிறந்த போராளி ஆகவேண்டும் என்பதே என் இலக்கு. எந்த அமைப்புகளிலும் இருந்தது இல்லை. நான் அடிப்படையில் தொழிற்சங்கவாதி. 17 வயது முதலே போராட்டக் களங்களைச் சந்தித்துப் பழக்கப்பட்டவள். சுதந்திர இந்திய தேசியத் தொழிலாளர் சங்கத்தின் தலைவராக இருந்து தொழிலாளரகளுக்குப் பல்வேறு உரிமைகளைப் பெற்றுத்தந்துள்ளேன். சோனியா, ஜெயலலிதா என பல தவறான முன்னுதாரணங்கள்தான் பெண்களை அரசியலுக்கே வரவிடாமல் தடுத்து விட்டது. அதனை மாற்ற நான் துணிந்துள்ளேன். அதுவரை திருமணம் செய்துகொள்ள மாட்டேன்."

**"தமிழர் முன்னேற்றப் படையின் கொள்கைகள் என்ன?"**

"2009-இல் ஈழத்தில் கொல்லப்பட்ட தமிழ் உறவுகளைப்போல இங்கேயும் நம் சொந்த மண்ணில் தமிழ் இனம் அழிந்துவிடக் கூடாது என்பதுதான் நோக்கம். தமிழர் முன்னேற்றப்படை தொடங்கப்பட்டதே காலம் காலமாக நமது தமிழ் மக்களை தெலுங்கர்களும் கன்னடர்களும்தான் திராவிடர்கள் என்கிற போர்வையில் ஆட்சி செய்து வருகிறார்கள். அதனாலேயே இதுவரை தமிழனுக்கான பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை.



சாதி மறுப்பு, பூரண மது ஒழிப்பு, அரசு மற்றும் தனியார் துறைகளில் தமிழனுக்கு 85 சதவிகிதம் இடஒதுக்கீடு, தமிழனை தமிழன்தான் ஆளவேண்டும் என்ற நான்கு கொள்கைகள்தான் எங்களது உயிர்மூச்சு."

**"இந்தக்கொள்கைகள் அனைத்தும் 'நாம் தமிழர் கட்சியின் கொள்கைகள்போல இருக்கிறதே?"**

"இருக்கலாம். ஆனால், எங்களின் போராட்டக்களம் அவர்களில் இருந்து மாறுபட்டது. வரும் 2016 சட்டமன்றத் தேர்தல் முதல், தேர்தல் அரசியலையும் கையில் எடுக்க உள்ளோம். முதற்கட்டமாக 41 தொகுதிகளில் போட்டியிட ஆயத்தமாகி வருகிறோம்."


**"சோபன்பாபு சிலை அகற்றம், குஷ்பு வீடு முற்றுகை போராட்டத்துக்கான பின்னணிகள் என்ன?"**

"பிரபாகரன்சிலையை வைத்தால் அகற்றுகிறது தமிழக அரசு. நம் மக்களின் 20 பேர் உயிரைப் பறித்தது ஆந்திர அரசு. அந்த மாநிலத்தின் நடிகர் சோபன்பாபுவின் சிலையை சென்னையின் முக்கிய இடத்தில் வைக்க அனுமதித்திருக்கிறது. அதையும் அகற்ற வேண்டும்தானே? அதனால்தான் போராட்டம் அறிவித்திருந்தோம். ஆனால், என் மீதும் எங்கள் நிர்வாகிகள் மீதும் வழக்குப் போட்டிருக்கிறார்கள். குஷ்பு யார்? அவருக்கும் தமிழக அரசியலுக்கும் என்ன தொடர்பு? ஒரு வடநாட்டுப் பெண்மணி சினிமாவுக்கு வந்தால் நடித்து விட்டுப் போக வேண்டியதுதானே?"

**"தமிழனைத் தமிழன் ஆள வேண்டும் என்கிற கொள்கை இங்கு செல்லுபடியாகுமா?"**

"ஏன் ஆகாது. நம்மைச் சுற்றி இருக்கும் மாநிலங்களைப் பாருங்கள். அந்த மக்களை அந்த மண்ணுக்கான மக்கள்தான் ஆள்கிறார்கள். நாமும் சில துரோகிகளின் கையில் நாட்டைக் கொடுத்து விட்டு ரோட்டில் நிற்கிறோம். விஷால் ஒரு தெலுங்கர். அவர் எப்படி தமிழ் நடிகர்களை நிர்வகிக்கலாம்? ஆலோசனை சொல்வதோடு அவர்கள் இருக்கட்டும். நாங்கள் அதிகாரம் செய்துகொள்கிறோம். யார் வேண்டுமானாலும் தமிழ் மண்ணில் இருக்கலாம். ஆனால், தமிழனைத் தமிழன் தான் ஆளவேண்டும். செய்த துரோகத்துக்காக காங்கிரஸை நம் மக்கள் கருவறுத்தார்கள்.

பி.ஜே.பி-யும் அந்த நிலையைக் கூடிய விரைவில் தமிழகத்தில் சந்திக்கும். விரைவில் தமிழகத்தின் அசைக்க முடியாத சக்தியாக மாறுவோம்." **-ஜூனியர் விகடன்-**





# கருவாச்சி காவியம்

**வைரமுத்து-174**

"ஆமா... அதுக்கென்ன...?"

"இந்த வீடு குப்பணம்பட்டி சோலமலத்தேவருக்கு கிரயமாயிருக்கு. உரியவுக வீட்டைக் காலி பண்ணிக் கொடுக்கணும் அனுப்ப வேண்டிய ஆளுக அனுப்பி அதிகாரத்தோட வந்திருக்கேன்."

கருவாச்சி நெஞ்சுல கைவச்சு நிக்க முடியாமா கதவுல சாஞ்சு சரிஞ்சு போனா.

ஊருக்கே ஒண்ணும் புரியல. கசமுசகசமுசன்னு சாதி சனத்துக்குள்ளேயே சலம்பலாகிப் போச்சு.

"இதென்னப்பா இது. மொட்டைத் தலைக்கும் மொழங்காலுக்கும் முடிச்சுப் போட்ட கதையாவுல்ல இருக்கு; சொக்கத்தேவன்பட்டி எங்க இருக்கு? குப்பணம்பட்டி எங்க இருக்கு? எவ வீட்ட எவன் எழுதி வாங்கறது?."

வந்த தலையாரி மேல வள்ளுன்னு விழுந்தாரு காவக்காரச் சக்கணன்.

தலையாரி ஒரு பணங்காட்டு நரி. இந்தச் சல சலப்புக்கெல்லாம் அஞ்சல.

"அய்யா கோவிக்காதீக. அழகுசிங்கம்கிறது யாரு?"

"ஆமா எங்கூருப் பயதான். கருவாச்சி மகன்தான்."

"கட்டையன் மகன்னு சொன்னாகளே..."

"ஆமா அப்படியும் சொல்லலாம்." எரிச்சலா வந்திருச்சு ஒரு சத்தம்.

"சிறுகச் சிறுக அப்பப்ப அழகுசிங்கம் வாங்கின கடனுக்காக இந்த வீட்ட சோலைமலைத்தேவருக்கு அவரு கிரயம் பண்ணிக்கொடுத்திட்டாரு."

"மீனாட்சி அம்மாள் கோயில் கூட எம் பேர்ல இருக்கன்னு எந்தப் பிச்சைக்காரனும் சொல்லிக்கிரலாம் ஆதாரமிருக்காப்பா?" "சிந்துவெம்பட்டியில பதிஞ்ச பத்திரத்தோட வந்திருக்கேன்; படிக்கிறேன் கேளுங்க."

பிரமதூத வருசம் புரட்டாதி மாசம் 17 ஆந் தேதி பெரிய



குளம் தாலூகா அன்னஞ்சி கிராமம் சொக்கத்தேவன்பட்டி காளியம்மன் கோவில் தெருவில் கதவு எண் பன்னிரண்டில் குடியிருக்கும் கட்டையத்தேவர் மகன் அழகுசிங்கம் ஆகிய நான் மதுரை ஜில்லா உசிலம்பட்டி தாலூகா வாலாந்தூர் கிராமம் குப்பணம்பட்டியில் குடியிருக்கும் பெரிய மாயத்தேவர் மகன் சோலைமலைத் தேவருக்கு எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரம். என் வியாபாரத்துக்காகவும் சொந்தச் சிலவுகள் மற்றும் சில்லறைக் கடன் தீர்ப்பதற்காகவும் தங்களிடம் நான் வாங்கிய மொத்தப்பணம் ரூபா 240க்காக எனக்குப் பூர்வீக பாத்தியப்பட்ட நான் அனுபவித்து வரும் அடியிற்கண்ட வீட்டை நான் தங்கள் பெயருக்குக் கிரயம் செய்து கொடுத்து விட்டேன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் பாவனையை எதிர்





யா/இந்து மகளிர் கல்லூரி



யாழ். இ





யா/கொக்குவில் இந்துக் கல்லூரி




யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயம்





யா/மத்திய கல்லூரி




யா/சென்ஜோன்ஸ் கல்லூரி






யா/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம்



வடமராட்சி கரவெட்டி பிரதேச பாடசாலை
கல்லூரி,இருதயக்கல்லூரி,ஸ்ரீ நாரத வித்தியால
மாகாண சபை உறுப்பினர்கள்,கரவெட்டி பி
பங்குகொண்டனர்.ஊர்வலத்தின் இறுதியில்



யா/ஹாட்லிக் கல்லூரி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ர்த்து மாணவர்கள் எழுச்சிப் பேரணி



ழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை






யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்









யா/கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி, கோண்டாவில் இந்துக்கல்லூரி



யம்



யாழ். விரசிங்கம் மண்டப பகுதி





யா/கலட்டி மெதடிஸ் மிஷன்



யா/செங்குந்தா இந்துக்கல்லூரி-




யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை














லை மாணவர்கள் சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு நேற்றுக்காலை விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர். கரவெட்டி ஞானசாரியார் யாலயம்,விக்னேஸ்வரா கல்லூரி,வடமராட்சி மத்திய கல்லூரி,பொன்னம்பலம் வித்தியாலயம்,கரணவாய் மத்திய மகா வித்தியாலய மாணவர்களும் பங்கு கொண்டிருந்தனர். வடக்கு ட்டி பிரதேச செயலர் மற்றும் உத்தியோகத்தர்கள்,கரவெட்டி பிரதேசசபை தவிசாளர் மற்றும் உறுப்பினர்களும் இந்த போதைப்பொருள் விழிப்புணர்வு ஊர்வலத்தில் வில் நெல்லியடி மத்திய பேருந்து நிலையத்தில் பொதுக்கூட்டம் இடம்பெற்றது.

(படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 இன் கீழ் தேர்வு நடைபெறும் விதம்!



தேர்தல் முறை சீர்த்திருத்தத்துக்கான அரசியலமைப்புத் திருத்தத்தின் 20 ஆவது நகல் வரைவு வர்த்தமானியில் கடந்த 12 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளது. இதுவரை எல்லோரும் அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தம் என்று கூறிய போதிலும் குறிப்பிட்டதோர் ஆவணம் இருக்கவில்லை. இப்போது அந்த ஆவணம் வெளிவந்துள்ளது.

ஆனால், இதற்கு முன்னர் சட்ட வரைவுகள் வெளிவரும்போது இருந்ததை விட வித்தியாசமானதோர் நிலைமைதான் இந்த விடயத்தில் காணப்படுகிறது. இதற்கு முன்னர் சட்ட வரைவொன்று வெளிவந்தால் அது ஆளும் கட்சியின் கொள்கைகள் மற்றும் கருததுக்கள் ஆகியவற்றுக்கு அமையவே வெளிவரும். ஆனால் இம்முறை அவ்வாறில்லை.

ஐக்கிய தேசிய கட்சியினர் அதிகமாக உள்ள அமைச்சரவையினால் அங்கிகரிக்கப்பட்டே இந்த சட்ட வரைவு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. ஆனால், ஐ.தே.க அதனை எதிர்க்கிறது.

அதனை நிறைவேற்றாமலே நாடாளுமன்றத்தை கலைக்க வேண்டும் என்று அக்கட்சி கூறுகிறது. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தைக் கொண்ட ஸ்ரீ.ல.சு.க.வும் புதிய தேர்தல் முறையின் முக்கிய சில அம்சங்களை ஏற்றுக்கொள்ளவில்லை.

சிறுபான்மை கட்சிகளும் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. அக்கட்சிகள் கூட்டாக தமது எதிர்ப்பை தெரிவித்து வருகின்றன. ஆனால், அந்த திருத்தத்துக்கு உரிமை கூறவோ அந்த எதிர்ப்பை எதிர்கொள்ளவோ ஒருவரும் இல்லை. தற்போதைய அரசியலின் குழப்ப நிலையை அது மேலும் சிக்கலாக்கியுள்ளது.

புதிய தேர்தல் முறை விகிதாசார மற்றும் தொகுதிவாரி தேர்தல் முறைகளின் கலப்பு முறையொன்றாகும். சகல அரசியல் கட்சிகளாலும் வெறுக்கப்பட்ட விருப்ப வாக்கு முறை இந்த தேர்தல் முறைமையில் இல்லை.

அதற்குப் பதிலாக தொகுதிவாரியாகவும் விகிதாசார முறையிலும் தேசிய பட்டியல் முலமாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர். இந்த அமைப்பை எவரும் எதிர்க்கவில்லை. தொகுதிகளின் எண்ணிக்கையிலேயே கருத்து வேறுபாடு நிலவுகிறது.

1978 ஆம் ஆண்டு இரண்டாவது குடியரசு அரசியலமைப்பு நிறைவேற்றப்படும் முன் தொகுதிவாரியாக மட்டுமே நாட்டில் தேர்தல்கள் நடைபெற்றன. அப்போது 160 தேர்தல் தொகுதிகள் இருந்தன.

அந்தத் தொகுதிகள்வாரியாக 1978 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தேர்தல்கள் நடைபெறாவிட்டாலும் அவை உத்தியோகபூர்வமாக முற்றாக மறக்கப்படவில்லை. விகிதாசார முறையில் தேர்தல்கள் நடைபெற்றாலும் தேர்தல்களை அடுத்து வாக்குகளை எண்ணும போது பழைய தொகுதிவாரியாக அவற்றை முதலில் எண்ணி தொகுதிவாரியாக முடிவுகளை முதலில் வெளியிடுவது தேர்தல் திணைக்களத்தின் வழமையாக இருந்து வந்துள்ளது.

விகிதாசார தேர்தல் முறையில் அவ்வாறு தொகுதிவாரியாக முடிவுகளை வெளியிடுவதில் அர்த்தமே இல்லை. ஆனால், நாடாளுமன்ற தேர்தலின் போது மட்டுமல்லாது ஜனாதிபதித் தேர்தலின் போதும் தேர்தல் திணைககளம் பழைய தொகுதிவாரியாக முடிவுகளை மட்டுமன்றி மாவட்ட முடிவுகளையும் வெளியிட்டுவிட்டுத்தான் ஒட்டுமொத்த முடிவை வெளியிடுகிறது.

ஏதோ ஒரு காரணத்துக்காக தேர்தல் திணைக்களம் அந்த நடைமுறையை கடந்த 37 ஆண்டுகளாக கடைபிடித்து வந்துள்ளது. அதன் காரணமாக பழைய 160 தொகுதிகள் மக்கள் மனதிலிருந்து அகன்றுவிடவில்லை. அவற்றின் எல்லைகளைப் பற்றி அரசியல் கட்சிகளுக்கிடையே முரண்பாடுகளும் இல்லை.

ஆனால், உத்தேச தேர்தல் முறையின் கீழ் தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கை 160 இலிருந்து 145 ஆக குறைகிறது. ஐ.தே.க இந்த எண்ணிக்கை மேலும் குறைத்து 125 ஆக வேண்டும் என்கிறது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 160 தொகுதிகள் இருக்க வேண்டும் என்கிறது.

சிறுபான்மை கட்சிகள் இந்த விடயத்தில் இரண்டும் கெட்ட நிலையில் இருக்கின்றன. தொகுதிகளை அதிகரித்து தொகுதிவாரியாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டால் வடக்கு கிழக்குக்கு வெளியே வாழும் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவம் குறையலாம். தொகுதிகளை குறைத்தால் புதிய தொகுதி நிர்ணயத்தின்போது அவர்கள் பாதிக்கப்படலாம்.

விகிதாசார முறையின் கீழ் நடைபெற்றதைப் போலவே உத்தேச முறையின் கீழும் மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்டே வாக்கெடுப்பு நடைபெறும். இப்போது போலவே அரசியல் கட்சிகள் தமது மாவட்ட வேட்பாளர் பட்டியல்களை சமர்ப்பிக்கும்.

ஆனால், அப்பட்டியல்களை தயாரிக்கும் போது தொகுதிவாரியாக போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்களை தனியாக குறிப்பிட்டு ஏனைய வேட்பாளர்களின் பெயர்களோடு தேர்தல் ஆணையாளர்களிடம் சமர்ப்பிக்கும்.

வாக்காளர்கள் அவரவரது கட்சிக்கு மட்டுமே வாக்களிக்க வேண்டும். தற்போதுபோல் கட்சிக்கு வாக்களித்துவிட்டு தாம் விரும்பும் வேட்பாளர்களின் இலக்கத்தின் மீதும் புள்ளடியிடத் தேவையில்லை. அதாவது, விருப்பு வாக்கு முறை ஒழிக்கப்படுகிறது.

வாக்குகளை எண்ணும் போது இப்போது போலவே தொகுதிவாரியாக அவை எண்ணபபடும். குறிப்பிட்டதோர் தொகுதிக்கு பல கட்சிகள் தத்தமது வேட்பாளர்களை நியமித்து இருக்கும். அவர்களில் ஆகக் கூடுதலாக வாக்குகளைப் பெற்றவர் அத்தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராவார். இவ்வாறு மாவட்டத்தின் சகல தொகுதிகளுக்கும் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர்.

ஒரு கட்சி குறிப்பிட்டதோர் மாவட்டத்தில் சகல தொகுதிகளிலும் தோல்வியடைந்திருக்கலாம். ஆனால், விகிதாசார ரீதியாக பார்த்தால் அக்கட்சி அம் மாவட்டத்திலிருந்து மொத்தமாக பெற்ற வாக்குகளின்படி அக்கட்சிக்கு ஒருசில ஆசனங்கள் கிடைக்க வேண்டும். புதிய முறைப்படி அக்கட்சிக்கு அவ்வாறு கிடைக்க வேண்டிய ஆசனங்கள் மாவட்ட தேர்வின் போதும் தேசிய பட்டியல் மூலமாகவும் வழங்கப்படும்.

உதாரணமாக மனோ கணேசனின் ஜனநாயக மக்கள் முன்னணி பதுளை மாவட்டத்திலிருந்து விகிதாசாரப்படி 4 ஆசனங்களைப் பெற வேண்டும் என்று வைத்துக் கொள்வோம்.

ஆனால், அக் கட்சியின் எந்தவொரு வேட்பாளரும் தொகுதிவாரியாக தெரிவு செய்யப்படவில்லை என்று வைத்துக்கொள்வோம்.

எனவே, அக் கட்சியின் தோல்வியடைந்த வேட்பாளர்களில் தொகுதி வாரியாக கூடுதலான வாக்கு சதவீதத்தைப் பெற்ற நான்கு வேட்பாளர்கள் அந்த நான்கு ஆசனங்களுக்கு தெரிவு செய்யப்படுவர்.

அக்கட்சி வெலிமடை, ஊவா-பரணகம, ஹாலி எல, பதுளை, பண்டாரவளை. ஹப்புத்தளை மற்றும் வியலுவ ஆகிய தொகுதிகளிலிருந்து முறையே 15,14,13,12, 11,10 மற்றும் 9 சதவீத வாக்குகளை பெற்றுள்ளது என்று வைத்துக் கொள்வோம்.

அவ்வாறாயின் ஆகக் கூடுதலான சதவீதத்தை பெற்ற வெலிமடை, ஊவா-பரணகம, ஹாலிஎல மற்றும் பதுளை ஆகிய தொகுதிகளின் வேட்பாளர்கள் எம்.பிக்களாக தெரிவு செய்யப்படுவர். கட்சி தொகுதிகளில் இழந்ததை மாவட்ட முடிவு ஈடு செய்யும்.

ஐ.தே.க அதற்கு விகிதாசாரப்படி பதுளை மாவட்டத்திலிருந்து கிடைக்க வேண்டிய ஆசன எண்ணிக்கையைவிட கூடுதலான ஆசனங்களை தொகுதிவாரியாக பெற்றிருக்கலாம். அவ்வாறாயின் அக்கட்சிக்குரிய தேசிய பட்டியல் உறுப்பினர் எண்ணிக்கையில் அந்த மேலதிக உறுப்பினர் எண்ணிக்கை குறைக்கப்படும். இதுதான் புதிய முறையின் சாரம்.

இதன்படி ஒரு கட்சி மாவட்ட ரீதியாக விகிதாசார முறைப்படி பெற்ற வாக்குகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப அக் கட்சிக்கு நாடாளுமன்ற ஆசனங்கள் கிடைக்கும். அதேவேளை தொகுதிகளுக்கு வகைச் சொல்லும் எம்.பிக்களும் இருப்பர்.

பார்த்தால் இந்த முறை நியாயமானதாகத்தான் இருக்கிறது. ஆனால், இதில் நடைமுறைப் பிரச்சினைகள் இருப்பதாகவே சிறுபான்மை கட்சிகள் கூறுகின்றன. இப்போது தொகுதிவாரியாக வேட்பாளர்கள் நிறுத்தப்படாததினால் குறிப்பிட்டதோர் மாவட்டத்தில் வாழும் ஒரு கட்சியின் ஆதரவாளர்கள் எல்லோரும் அக் கட்சிக்கே வாக்களிப்பர்.

ஆனால், தொகுதிவாரியாக வேட்பாளர்கள நியமிக்கப்பட்டபோது சில வாக்காளர்கள் தமது கட்சிக்கு வாக்களிப்பதை விட வெற்றி வாய்ப்பு உள்ள வேட்பாளருக்கு வாக்களிக்கவே விரும்புவர். இது சிறுபான்மை மக்களை பாதிக்கலாம். உதாரணமாக பதுளை தொகுதி யில் வாழும் ஒருவர் தற்போதைய விகிதாசார தேர்தல் முறையின்படி தேர்தல் நடந்தால் ஜனநாயக மக்கள் முன்னணிக்கு வாக்களிப்பார் என்று வைத்துக் கொள்வோம்.

ஆனால், புதிய முறைப்படி அத் தொகுதிக்கு ஐ.தே.க சார்பில் தற்போதைய ஊவா மாகாண முதலமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ போட்டியிட்டால் அதே வாக்காளர் ஹரீனுக்கு வாக்களிக்க முற்படலாம். இதனால், ஜனநாயக மக்கள் முன்னணி, பதுளை தொகுதியிலிருந்து பெறும் வாக்குகள் மட்டுமன்றி பதுளை மாவட்டத்திலிருந்து பெறும் வாக்குகளும் குறையும்.

எமது மேற்படி உதாரணத்தை மீண்டும் எடுத்துக்கொண்டால் இவ்வாறு பல தொகுதிகளில் வாக்குகள் குறைவதால் விகிதாசார தேர்தல் முறைப்படி பதுளை மாவட்டத்திலிருந்து 4 ஆசனங்களைப் பெற வேண்டிய ஜனநாயக மக்கள் முன்னணி புதிய முறைபபடி 4 ஆசனங்களுக்கு குறைவாக பெறலாம். அக் கட்சி, தொகுதிகளில் இழந்ததை மாவட்டம் ஈடு செய்யும் என்றாலும் மாவட்டம் குறைவாகவே ஈடு செய்யும்.

இதற்காகத்தான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இரட்டை வாக்குச் சீட்டு முறையை அறிமுகப்படுத்த வேண்டும் என ஆரம்பத்தில் கூறியது. இப்போது அந்தக் கருத்தை பல சிறிய மற்றும் சிறுபான்மை கட்சிகள் ஏற்றுக்கொண்டுள்ளன. அந்த யோசனையின்படி மேற்படி பதுளை தொகுதி வாக்காளர், ஹரீனுக்கு ஒரு வாக்கையும் தாம் விரும்பும் கட்சியான ஜனநாயக மக்கள் முன்னணிக்கு ஒரு வாக்கையும் அளிக்க முடியும்.

புதிய முறைப்படி சிறிய மற்றும் சிறுபான்மை கட்சிகள் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு இது ஓரளவுக்குத்தான் பரிகாரமாகலாம். ஏனெனில், தமது கட்சியை விட்டு ஹரீனுக்கு வாக்களிக்க முற்பட்ட ஒருவர் அத்தோடு தமது இரண்டாவது வாக்குச் சீட்டை பாவித்து ஹரீனின் கட்சிக்கும் வாக்களிக்க முற்படலாம். தேர்தல் சூட்டோடு அவரது மனதில் இவ்வாறானதோர் மாற்றம் ஏற்பட இடமுண்டு.

எந்தத் தேர்தல் முறையில் தேர்தல் நடைபெற்றாலும் தமிழ் தேசிய கூட்டமைப்பு வடக்கிலும் கிழக்கிலும் தமக்குரிய ஆசனாங்களைப் பெற்றுக் கொள்ளும். முஸ்லிம் காங்கிரஸும் கிழக்கில் தமக்குரிய ஆசனாங்களைப் பெற்றுக் கொள்ளும். சிறுபான்மையினர் என்ற அடிப்படையில் பார்த்தால் அந்த இரு மாகாணங்களில் தமிழ் முஸ்லிம் பிரதிநிதித்துவம் அவ்வளவாக குறையாது.

புதிய சனத்தொகை கணிப்பீட்டின் படி தொகுதி எல்லை நிர்ணயத்தின் போது வடக்கில் தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கை குறைந்தால் அது தமிழர்களுக்கு ஒரு பாதிப்பாக அமையும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே இயங்கும் சிறிய மற்றும் சிறுபான்மைக் கட்சிகள்தான் புதிய முறையினால் வெகுவாக பாதிக்கப்படப் போகின்றன. எனவேதான் புதிய முறையினால் இரு பிரதான கட்சிகள் மட்டுமே எதிர்க்காலத்தில் அரசியல் களத்தில் மீதமாகியிருக்கும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க அண்மையில் கூறியிருந்தார்.

ஐ.தே.க ஆட்சியில் இருக்கும் போது 2003 ஆம் ஆண்டு தேர்தல் முறையைச் சீர்த்திருத்துவதற்காகவென மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்தனவின் தலைமையில் நாடாளுமன்ற தெரிவுக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. அக் குழு பல ஆண்டுகளாக அந்த விடயத்தைப் பற்றி ஆராய்ந்தது.

ஆனால், பொது இணக்கப்பாடொன்றை ஏற்படுத்திக் கொள்ள முடியவில்லை. அவ்வாறிருக்கத்தான் தற்போது அரசாங்கமும் எதிர்க் கட்சிகளும் நாடாளுமன்றத்தைக் கலைக்க முன் ஓரிரு மாதங்களுக்குள் அவ்வாறானதோர் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள முயற்சிக்கின்றன.

இந்த விடயத்தில் தேர்தல் சீர்த்திருத்தம் என்பதைவிட வெவ்வேறு கட்சிகளுக்கு வெவ்வேறு நோக்கங்கள் இருப்பதாக தெரிகிறது. நாடாளுமன்றத்தை ஜனாதிபதி விரைவில் கலைக்காதிருக்க சர்ச்சைக்குரிய இந்த அரசியலமைப்புத் திருத்தத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பாவிக்க முற்படுகிறது. இது நீண்டகாலம் எடுக்கக் கூடிய விடயம் என்பதால் இதனை குழப்பி விரைவில் நாடாளுமன்றத்தை கலைக்கச் செய்வதற்காக ஐ.தே.க., தொகுதிவாரியாக 125 எம்.பிக்கள் மட்டுமே இருக்க வேண்டும் என்ற நடக்க முடியாததைத் பிரேரிக்கிறது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தேர்தல் சீர்த்திருத்தமும் ஒரு வாக்குறுதி என்பதால் ஏதோ ஒன்றை முன்வைக்க வேண்டும் என்ற நிலையில் செயற்படுகிறார் போலும்.

இரு பிரதான கட்சிகளும் தேர்தல் சீர்த்திருத்தம் தேவை என்ற நிலைப்பாட்டில் இருப்பதாக இருந்தால் ஏனைய கட்சிகளும் அதனை விரும்புவதாக இருந்தால் ஒரு சட்டமூலத்தையாவது நிறைவேற்றிக் கொள்ள முடியாத அளவு குழப்பத்தில் உள்ள இந்த நாடாளுமன்றத்தை கலைத்து தேர்தலை நடத்தி அடுத்த நாடாளுமன்றத்தில் ஆறுதலாக இந்த தேர்தல் சீர்த்திருத்தத்தை நிறைவேற்றிக் கொள்ளலாமே. அதனை விடுத்து ஒவ்வொரு கட்சியும் தத்தமது அரசியல் நோக்கங்களுக்காக 20 ஆவது திருத்தத்தை பாவிக்கின்றன. அதுதான் உண்மை.

-எம்.எஸ்.எம்.ஐயூப்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஸ்ரீல.சுதந்திரக் கட்சி தலைமையிலான

# ஐ.ம.சு.கூட்டமைப்பிலேயே தேர்தலில் போட்டியிடுவேன்

## மகிந்த அறிவிப்பு



(கொழும்பு)

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கீழேயே தாம் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதையே விரும்புவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

மகிந்தவையும் மைத்திரியையும் இணக்கத்துக்கு கொண்டு வருவதற்கான 6 பேர் கொண்ட குழுவிடம் அவர் இதனைத் தெரிவித்துள்ளார.

இதேவேளை தமக்கு பிரதமர் வேட்பாளர் நிலை வேண்டும் என்று தாம் ஒருபோதும் கோரவில்லை என்றும் மகிந்த குறித்த குழுவிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த 6 பேர் கொண்டகுழு நேற்று முன்தினம் மகிந்தவை மீரிஹனையில் உள்ள வீட்டில் சந்தித்து கலந்துரையாடியது. இதன் போது தாம் கட்சியில் பிளவை ஏற்படுத்த முயலவில்லை என்றும் மகிந்த தெரிவித்துள்ளார். குறித்த சந்திப்பு தொடர்பில் கருத்துரைத்த 6 பேரில் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் திலான் பெரேரா, தாம் முன்வைத்த யோசனைகளை மகிந்த ராஜபக்ஷ ஏற்றுக் கொண்டதாக தெரிவித்தார். இதேவேளை குறித்த குழுவினர் மீண்டும் மகிந்தவை சந்தித்து அதன் பின்னர் ஜனாதிபதி மைத்திரிபாலவை சந்திக்கவுள்ளனர். (இ-5)

# பந்துலவிடம் 2 பில்லியன் ரூபாவை இழப்பீடாகக் கேட்கும் நிதியமைச்சர்

(கொழும்பு)

14 நாட்களுக்குள் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன 2 பில்லியன் ரூபாவை இழப்பீடாக தனக்கு வழங்க வேண்டுமென நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க பந்துல குணவர்தனவிற்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

இவ்விவகாரம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தன, தொலைக்காட்சி விவாதம் ஒன்றில் கலந்து கொண்ட போது நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க மீது சுமத்திய குற்றச்சாட்டு தொடர்பில் இழப்பீடு கோரி சட்டத்தரணி ஊடாக கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நிதியமைச்சர் அனுப்பியுள்ள அந்த கடிதத்தில் தனக்கு ஏற்படுத்திய அவதூறுக்காக 14 நாட்களில் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன 2 பில்லியன் ரூபாவை இழப்பீடாக செலுத்த வேண்டும் என கோரியுள்ளார்.

அமெரிக்காவில் 125 வருட சிறை தண்டனை விதிக்கப்பட்ட. விடுதலைப் புலிகளுடன், சம்பந்தப்பட்ட ராஜ் ராஜரட்ணம் என்பவர் 3 மில்லியன் ரூபாவை ரவி கருணாநாயக்கவுக்கு அனுப்பியதாக பந்துல குணவர்தன குறித்த தொலைக்காட்சி விவாதத்தில் தெரிவித்திருந்தார்.

இலங்கை ரூபா பெறுமதியில் 42 கோடி ரூபாவான அந்த 3 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இலங்கை மத்திய வங்கியின் அனுமதியின்றி ரவி கருணாநாயக்கவின் வங்கி கணக்கிற்கு வந்தது. இது சிக்கியதன் காரணமாகவே சட்டமா அதிபர் அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ததாக பந்துல குணவர்தன தெரிவித்தார்.

எவ்வாறாயினும் இந்த விவகாரம் தொடர்பான வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வங்கி கணக்கு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நிதியுதவியை பெற்றுக்கொள்ளும் நோக்கில் வங்கி கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக துறவிகள் குரல் அமைப்பின் தலைவர் முருத்தொட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

நாரஹேன்பிட்டி அபயராம விகாரையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதிக்கு போதிய பாதுகாப்பு வழங்கப்படவில்லை என அவரது ஆதரவாளர்கள் கூறி வருகின்ற போதிலும் 105 பொலிஸார் மற்றும் 108 இராணுவத்தினர் என மொத்தமாக அவருக்கு 213 பேரின் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஊடக இணைப்பாளர் அண்மையில் வெளியிட்டிருந்த அறிக்கையில் இந்த தகவல் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறான நிலையில், முன்னாள் ஜனாதிபதிக்கு பாதுகாப்பில்லை எனக் கூறி அவரது ஆதரவாளர்கள் மக்கள் மத்தியில் அனுதாபத்தை பெற முயற்சித்து வருகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட வேண்டும் என அரசியலமைப்பில் பரிந்துரைக்கப்பட்டுள்ள எண்ணிக்கையை விட அதிகளவான பாதுகாப்பு மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வெலிக்கடை சிறைச்சாலை மோதலில் கொல்லப்பட்டவர்களுக்கு இழப்பீடு

## நீதி அமைச்சு நடவடிக்கை

வெலிக்கடை சிறைச்சாலையில் நடந்த மோதலின் போது கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்த கைதிகளின் உறவினர்களுக்கு துரிதமாக இழப்பீடுகளை வழங்க நீதியமைச்சு தீர்மானித்துள்ளது.

வெலிக்கடை சிறையில் நடந்த மோதல் தொடர்பில் விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைக்கு அமைய இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக நீதியமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோதல் ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் வன்முறையாக நடந்து கொள்ளாது, மோதல்களை ஏற்படுத்தாத நிலையில், காயமடைந்த அல்லது கொல்லப்பட்டவர்களுக்கு மாத்திரம் இழப்பீடு வழங்குமாறு விசாரணைக் குழு பரிந்துரை செய்திருந்தது.

அத்துடன் இந்த மோதல் சம்பவம் குறித்து விசேட கவனம் செலுத்தப்படாத சில விடயங்கள் சம்பந்தமாக தொடர்ந்தும் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளது.

இதேவேளை பொலிஸ்மா அதிபரின் நேரடி கண்காணிப்பின் கீழ் விசேட விசாரணைக்குழு நியமிக்கப்பட வேண்டும் எனவும் விசாரணைக்குழு பரிந்துரை செய்துள்ளது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

## ஆசைக்கோர் அளவில்லை!

ஒரு ஊரிலே கடவுள் பக்தர் ஒருவர் இருந்தார். அவர் தினமும் கோவிலுக்குச் சென்று வழிபட்டு வந்தார்.

ஒருநாள் அவர் கோவிலுக்குச் சென்று கடவுளிடம் "எனக்கு ஒரு இலட்சம் ரூபாய் நீ கொடுத்தால் நான் உன் சந்நிதியில் ஒரு தேங்காய் உடைக்கிறேன்" என்று வேண்டினார்.

கடவுள் உடனே அவர் கண் முன்னாடி தோன்றி " நீ கேட்ட ஒரு இலட்சம் ரூபாய்"என்று அவன் கையிலே பணத்தைக் கொடுத்து விட்டு மறைந்தார்.

இவனால் நம்ப முடியவில்லை. இவ்வளவு சுலபமாகக் கிடைக்கும் என்று தெரிந்திருந்தால் அநாவசியமாக ஒரு தேங்காய் உடைக்கிறேன் என்று வேண்டியிருக்கமாட்டேன். இருந்தாலும் வேண்டுதலை நிறைவேற்ற வேண்டியது கடமையாகும் என்று நினைத்தார்.

உடனே பக்கத்தில் உள்ள கடையொன்றிற்குச் சென்றான். ஒரு தேங்காயைக் கையில் எடுத்தான். "இது என்ன விலை" என்று முதலாளியிடம் கேட்டான்.

"ஐந்து ரூபாய்" என்றார் கடையில் இருந்தவர்.

"விலை அதிகமாக இருக்கிறதே" என்றான். "அப்படியென்றால் ஒன்று செய்யுங்கள்... அடுத்த ஊருக்குப்போய் அங்கே யுள்ள தென்னந்தோப்பில் இதைவிட குறைந்த விலைக்கு தேங்காய் வாங்கலாம்" என்றான்.

"சரி" என்று கூறிவிட்டு அடுத்த ஊருக்குக் புறப்பட்டான்.

அங்கே போய் விசாரித்தான். "ஒரு தேங்காய் மூன்று ரூபாய் விலை" என்றார்கள். "இதுவும் அதிகமாகத் தெரிகிறது" என்றார்.

"அப்படியென்றால் அதோ பார்... அந்த ஆற்றோரமாக ஒரு தென்னை மரம் இருக்கிறது. அதிலே நீயே ஏறி பறித்துக்கொள். ஒரு தேங்காய் ஒரு ரூபாய்" என்று தோப்பிற்குச் சொந்தக்காரன் கூறினான்.

இவனுக்கு மரம் ஏறத்தெரியாது. இருந்தாலும் ஆசை யாரை விட்டது? விலையும் அதிகமாக இருந்தது. ஆற்றோரமாகச் சென்றார். தட்டுத்தடுமாறி அந்த மரத்தில் ஏறினார். அந்தத் தென்னை மரம் வளைந்து ஆற்றுப் பக்கமாகப் போய் மறுபடியும் நிமிர்ந்தது. அதாவது மரத்தின் உச்சி சரியாக ஆற்றுக்கு நடுவில் இருந்தது.

இவர் கடவுள் கொடுத்த ஒரு இலட்சம் ரூபாவை மடியிலே இறுக்கிக் கட்டினார். உச்சிக்குப் போய் தேங்காய் பறிக்கிற சமயத்தில் காற்றும் மழையும் பலமாக கலந்து அடிக்க ஆரம்பி த்தது.

இவனது கால் வழுக்கி விட்டது. சட்டென்று ஒரு மட்டையைப் பிடித்துக்கொண்டு தொங்கினான். கீழே பயங்கர வெள்ளம். மடியில் ஒரு இலட்சம் ரூபாய் பணம். இவனது மனம் பதற ஆரம்பித்தது. இந்தச் சமயம் கரையிலே ஒரு யானைப் பாகன் யானையைக் குளிப்பாட்டிக் கொண்டிருந்ததைப் பார்த்தான்.

"ஐயா"ஒரு உதவி என்று கத்தினான். அவன் "என்ன வேண்டுமென்று" கேட்டான். "உன் யானையை மெதுவாக அழைத்து வந்து எனக்கு நேராக நிறுத்தி என் காலைப்பிடித்து கீழே இறக்கி விடு என் மடியில் இருக்கும் 10 ஆயிரம் ரூபாவைத் தருகிறேன்" என்றான்.

அவன் பார்த்தான் இந்தக்காலத்தில் கால், கை என்பவற்றை பிடித்துவிட்டால் கூட 10 ஆயிரம் ரூபாவை எவருமே தரமாட்டார்கள். இவன் காலைப் பிடித்தால் 10 ஆயிரம் ரூபா தருகி றேன் என்று கூறுகிறான்.

சிறிது நேரம் யோசித்தான். உடனே யானையை அவன் அருகில் கொண்டு சென்று நிறுத்தினான். அவன் காலைப் பிடித்தான். அவ்வளவுதான் அவ்வேளையில் யானை மெது வாக நடந்து அப்பாலே சென்று விட்டது. இப்போது யானைப் பாகன் இவன் காலைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு தொங் கினான்.

இப்போது யானைப் பாகன் சொன்னான், தம்பி!...மட்டையை விடாதே!... கெட்டியாகப் பிடித்துக்கொள்! நான் உனக்கு 10 ஆயிரம் ரூபா பணம் தருகிறேன்... இதோ மடியில்தான் வைத் திருக்கிறேன் என்றான்.

மேலே தொங்கிறவனுக்கு இந்த நிலைமையிலும் ஒரு பெரிய சந்தோசம். மேற்கொண்டு ஒரு 10 ஆயிரம் ரூபா பணம் தனக்கு கிடைக்கும் போல் இருக்கிறதே என்று நினைத்து தனது மனதை தேற்றிக் கொண்டான். இந்த சமயத்தில் ஒருவன் ஒட்டகத்தை குளிப்பாட்டிக் கொண்டு இருப்பதை இந்த யானைப்பாகன் கண்டுவிட்டான். ஐயா ஒட்டகக் காரரே அதை இங்கே கொண்டு வாருங்கள். எங்கள் காலை பிடித்து இறக்கி விடுங்கள் . நாங்கள் பணம் தருகின்றோம். அவனும் பணத்திற்கு ஆசைப்பட்டு வந்து அவனது காலைப் பிடித்த சமயம் ஒட்டகமும் நழுவிப்போய் விட்டது. இப்போது மூன்று பேரும் வரிசையாகத் தொங்கிக் கொண்டிருந்தார்கள். தம்பி மட்டையை விட்டுவிடாதே. கெட்டியாகப் பிடித்துக் கொள். நான் என் மடியிலே இருக்கிற 5 ஆயிரம் ரூபாவை உனக்குத் தருகிறேன் என்றான். மேலே தொங்குகிறவனுக்கு இன்னும் சந்தோசம். இவனும் பணம் தருகிறேன் என்று கூறுகிறான். அப்படியென்றால் இன்றைக்கு நமக்கு மொத்த வரவு எவ்வளவு என்று ஒவ்வொன்றாகக் கூட்டிப் பார்த்தான். மனக்கணக்கு சரியாக வரவில்லை. உடனே விரலைவிட்டு எண்ண ஆரம்பித்தான். அவ்வளவுதான். மட்டையை விட்டு கை நழுவி வந்துவிட்டது.

மூன்று பேரும் பொத்தென ஆற்றிலே விழுந்தார்கள்.

படாதபாடுபட்டு தட்டுத் தடுமாறி கரைக்கு வந்து சேர்ந்தார்கள். மூன்று பேரின் மடியில் வைத்திருந்த பணமும் ஆற்றோடு அள்ளுண்டு சென்றுவிட்டது.

"பேராசை பெரும் நட்டம்" அப்படியென்று ஒரு பழமொழி உள்ளது. அதை விளக்குவதற்காகத்தான் இக்கதை கூறப்பட்டது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி வெளவால்களும் ஊழல் பெருச்சாளிகளும்



திராவிட இயக்கத்தைச் சாய்க்க விடமாட்டேன். எத்தனையோ பேரின் தியாகத்தால் கட்டப்பட்ட மாளிகை இந்தத் திராவிட இயக்கம். இதை எந்தக் காலத்திலும் எப்படிப்பட்டப் புயலும், ஏன் - பிரளயமே வந்தாலும் சாய்க்க முடியாது, சாய்க்கவும் விடமாட்டோம் என தி.மு.க. தலைவர் கருணாநிதி சூளுரைத்துள்ளார்.

தி.மு.க.வை சாய்க்க விடமாட்டேன் எனக் கூறாமல் திராவிட இயக்கத்தை என்று அவர் கூறியது ஏன்?

'புலிக்குப் பயந்து ஓடிப் போய் குப்புறப் படுத்துக்கிடந்த ஒருவன், புலிக்குப் பயந்தவர்கள் என்மீது வந்து விழுங்கள்' என்று கூறிய கதையாக கருணாநிதியின் கூற்று அமைந்திருக்கிறது.

1949 ஆம் ஆண்டில் திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து வந்து தி.மு.க.வைத் தோற்றுவித்தபோது அதன் நோக்கங்களாகக் கீழ்க்கண்டவை அறிவிக்கப்பட்டன.

1.தமிழகம், ஆந்திரம், கர்நாடகம், கேரளம் ஆகிய மொழி வழி மாநிலங்கள் பிரிந்து போகும் உரிமையோடு கூடிய சுய நிர்ணய அடிப்படையில் சுதந்திரத் திராவிட சமதர்மக் குடியரசுக் கூட்டாட்சியை நிறுவுவது.

2.சமத்துவம், சமதர்மம், பகுத்தறிவு நெறி கொண்ட திராவிட சமுதாயம் காண்பது.

தி.மு.க. தோன்றி 66 ஆண்டுகள் கடந்தோடிவிட்டன. மேற்கண்ட நோக்கங்களில் எதுவும் இப்போது தி.மு.க.வில் இல்லை. திராவிட நாடு கோரிக்கையைக் குழியில் தள்ளி மண்போட்டு மூடி அதன்மீது புல்லும் புதரும் மண்டி வளர்ந்து கிடக்கின்றன.

கழகத்தைத் தன் குடும்பமாக மதித்து அனைத்துத் தோழர்களையும் சமமாக மதித்து அரவணைத்தார் அண்ணா. கழகத்தையே தனது குடும்பச் சொத்தாக்கி சமத்துவத்தை அடியோடு அழித்தவர் கருணாநிதி.

சமதர்மம் என்னும் நோக்கம் காணாமல் போய் வெகுகாலமாகிவிட்டது. அரசியலை மட்டுமே மூலதனமாகக் கொண்ட புதிய கோடிஸ்வரர்களின் கூடாரமாகக் கழகம் திகழ்கிறது. ஆசியாவிலேயே மிகப் பெரிய பணக்காரக் குடும்பங்களில் ஒன்றாகக் கருணாநிதி குடும்பம் திகழ்கிறது.

மற்றொரு நோக்கமான பகுத்தறிவுக்குக் கழகம் விடைகொடுத்து நீண்டகாலமாகிறது. கருணாநிதியின் குடும்பத்தினர் உட்பட கழகத்தினர் குடும்பங்கள் ஏறி இறங்காத கோயில்கள் இல்லை. பெரியாரின் தலையாய சீடன் எனத் தன்னைக் கூறிக்கொள்ளும் கருணாநிதி, கழுத்தில் மஞ்சள் துண்டை அணிந்தபோதே பகுத்தறிவு ஓட்டமாக ஓடிவிட்டது.

தமிழ் தமிழ்! என முழங்கி ஆட்சியைப் பிடித்தவர்கள் அரசு, கல்வி ஆகிய துறைகளில் ஆங்கிலத்துக்கு வெண்சாமரம் வீசிக் கொண்டிருக்கிறார்கள். உலகத் தமிழினத் தலைவர் என கருணாநிதியை அவரது கட்சியினர் அழைத்துப் பெருமிதம் கொள்கிறார்களே தவிர, உலகத் திராவிட இனத் தலைவர் என அவரை அழைப்பதில்லை. அவரும் அவ்வாறு சொல்வதை விரும்புவதுமில்லை.

பெரியாரும், அண்ணாவும் மதுவை அகற்றி மக்களைக் காப்பதில் உறுதியாக இருந்தனர். ஆனால், மதுக் கடைகளைத் திறந்து சில தலைமுறைத் தமிழர்களை சீரழியச் செய்த பெருமை இரு கழகங்களுக்கும் உண்டு.

இரு கழகத் தலைமைகளும் தங்களுக்குக் கீழ் இருந்த அமைச்சர்கள், அதிகாரிகள் ஆகிய அனைவரையும் ஊழலில் ஈடுபடுத்தி மொத்தத்தில் ஆட்சி நிர்வாகத்தையே ஊழல் மயமாக்கிவிட்டனர். இத்துடன் நிற்கவில்லை, மக்களையும் ஊழல் குட்டையில் ஆழ்த்துவதற்காக இலவசங்கள் என்ற பெயரில் மக்களின் வரிப் பணத்திலிருந்தே அவர்களுக்குத் தொலைக்காட்சி, மா அரைக்கும் இயந்திரம், அரிசி போன்றவற்றை அள்ளி அள்ளிக் கொடுத்ததோடு தேர்தல் நேரங்களில் அவர்களுக்குக் கட்டுக்கட்டாகப் பணத்தையும் கொடுத்து மக்களையும் கறைப்படுத்திவிட்டனர்.

இதன்மூலம் நாட்டின் ஜனநாயகத்தின் வேர்கள் அறுக்கப்பட்டு பணநாயகத்தை நிலைநிறுத்த இரு கழகங்களும் போட்டி போட்டுக் கொண்டு செயற்படுகின்றன.

இரு கழகங்களின் தற்போதைய நோக்கங்கள் பின்வருமாறு திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. பதவியை வைத்துப் பணத்தைக் குவிக்க வேண்டும். குவிந்தப் பணத்தை வைத்துப் பதவியைப் பிடிக்க வேண்டும்.

இவற்றைத்தவிர, வேறு நோக்கம் எதுவும் தி.மு.க.விற்குக் கிடையாது. இதன் சகோதரக் கட்சியான அ.தி.மு.க.விற்கும் அதுவே நோக்கம். இரு கழகங்களின் போட்டாப் போட்டியில் ஆட்சி நிர்வாகத்தில் இலஞ்சமும், ஊழலும் தலைவிரித்தாடுகின்றன.

தமிழகத்தின் இயற்கை வளங்கள் தங்குதடையின்றி சூறையாடப்படுகின்றன. தமிழ் நாட்டில் உள்ள 33 ஆறுகளிலும் உள்ள மணல், கொள்ளையோ கொள்ளை என அள்ளப்படுகிறது. இதன் விளைவாக, விவசாயமும் குடிநீரும் பாதிக்கப்படுவதைப் பற்றி இரு கழகங்களும் கவலை கொள்ளவில்லை. மணல் கொள்ளையில் ஈடுபட்டிருப்பவர்கள், இரு கழகங்களின் ஆட்சியிலும் ஒரே கூட்டத்தினர் என்பது ஊரறிந்த இரகசியம்.

உலகத்திலேயே தரத்தில் உயர்ந்த கிரானைட் கற்கள் தமிழகத்தில் மட்டுமே கிடைக்கின்றன. பல இலட்சம் கோடி பெறுமானமுள்ள இக்கற்கள் கொள்ளையடிக்கப்பட்டு வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்ட கடற்கரையோரங்களில் கிடைக்கும் தாது மணல் கப்பல் கப்பலாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

பன்னாட்டுக் குளிர்பான ஆலைகள் தமிழகத்தில் தொடங்க அனுமதிக்கப்பட்டு நாள்தோறும் நமது ஆறுகளிலிருந்தும், நிலத்தடி நீரிலிருந்தும் பல இலட்சம் லிட்டர் தண்ணீர் உறிஞ்சி குளிர்பானமாக மாற்றப்பட்டு, நமது மக்களிடமே விற்கப்படுகிறது. உடல் நலத்திற்குக் கேடு விளைவிக்கும் இப்பானங்களைத் தடுக்க இரு கழக அரசுகளும் எதுவும் செய்யவில்லை.

தோல் ஆலைகள், சாயப் பட்டறைகள் ஆகியவற்றின் மூலம் நமது ஆறுகளும், நிலத்தடி நீரும் மாசடைந்துவிட்டன. இவற்றைப் பருகும் நமது மக்கள் தோல் நோய்களால் அவதிக்குள்ளாவதைப் பற்றி இரு கழக அரசுகளுக்கும் கவலையில்லை.

தமிழகக் காடுகள் தங்குதடையில்லாமல் அழிக்கப்படுகின்றன. ஏரி, குளங்கள் ஆக்கிரமிக்கப்படுகின்றன.

நெல்லை மாவட்டத்தில் கூடங்குளம் அணு உலை, தஞ்சை சமவெளியில் மீத்தேன் வாயு எடுக்கும் திட்டம், தேனி மாவட்டம் தேவாரத்தில் நியூட்ரினோ திட்டம் போன்ற மரணத் திட்டங்கள் தமிழக மக்களை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன. தமிழக வளங்களைச் சுரண்டுவதற்குப் பன்னாட்டு நிறுவனங்களுக்குச் சலுகைகள் தந்து ஊக்குவித்த பெருமை இரு கழகங்களுக்கும் உண்டு. பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தமிழகத்தின் கதவுகளைத் திறந்து விடுவதில் இரு கழகங்களும் போட்டிப் போட்டன.

ஆட்சியில் இருக்கும்போது இரு கழகத் தலைவர்களும் தங்களின் சொந்தக் கருவூலங்களை நிறைப்பதற்காக, நாட்டின் வளங்களைச் சூறையாட அனுமதிக்கிறார்கள். இந்தப் போக்குத் தொடருமேயானால், எதிர்காலத் தலைமுறைக்குப் பாழடைந்த, வளமிழந்த தமிழ்நாட்டையே நாம் விட்டுச் செல்வோம் என்பது உறுதி.

அண்ணா காலத்தில் காங்கிரசுக்கு எதிரான கட்சிகளை ஒன்றிணைத்து ஒரு கூட்டணியை உருவாக்கி காங்கிரசைத் தோற்கடித்தார். ஆனால், அவர் மறைவிற்குப் பின்னால் காங்கிரசோடு கூட்டுச் சேர கருணாநிதி ஒருபோதும் தயங்கியதில்லை. அ.தி.மு.க. தலைமையும் அதே பாதையைப் பின்பற்றியது.

மத்திய ஆட்சியில் காங்கிரஸ் இருந்தாலும், பா.ஜ.க. இருந்தாலும் யார் முதலில் அக்கட்சிகளோடு கூட்டுச் சேர்வது என்பதில் இரு கழகங்களிடையே போட்டா போட்டி. இதன் விளைவாக, தமிழகத்தின் நலன்கள் தில்லியின் பலிபீடத்தில் காவு கொடுக்கப்பட்டன.

வடக்கு வாழ்கிறது தெற்குத் தேய்கி றது என்ற முழக்கத்தை முன்வைத்த கழகம் தெற்குத் தேய்ந்தாலும் பரவாயில்லை. வடக்கோடு கூட்டுச் சேர்ந்து வளமாக வாழ்வோம் என்ற புதிய முழக்கத்தை முன் வைக்கிறது.

தமிழகத்தில் தாங்கள் நடத்தும் ஊழல் ஆட்சி மீது தில்லி எத்தகைய நடவடிக்கையும் எடுத்துவிடக்கூடாதே என்பதற்காக, தில்லியிடம் சரணாகதி அடைந்த கழகங்களுக்கு எதைப் பற்றியும் பேசுவதற்குத் தகுதி கிடையாது.

2009 ஆம் ஆண்டில் ஒன்றரை இலட்சம் ஈழத் தமிழர்களை இந்திய அரசின் உதவியுடன் சிங்கள அரசு பதைக்கப் பதைக்கப் படுகொலை செய்தபோது ஆட்சியிலிருந்த கருணாநிதியும் எதிர்க்கட்சியிலிருந்த ஜெயலலிதாவும் கண்டும் காணாததுபோல் இருந்தனரே தவிர, இந்திய அரசை வற்புறுத்தி போர் நிறுத்தம் கொண்டுவரவும் அந்த மக்களைப் பாதுகாக்கவும் எதுவும் செய்யவில்லை.

இந்தியாவின் மிகப் பெரிய ஊழலான 2 ஜி அலைக்கற்றை ஊழலை மிகத் திறமையாகச் செய்து காட்டியது கழகக் கறைப் போட்ட வேட்டி கட்டிய ஒரு தமிழன்தான்.

கருணாநிதி குடும்பத்தைச் சேர்ந்த அவரது மனைவி, மகள், அவரது அமைச்சரவையில் அங்கம் வகித்தவர்கள், எள் என்பதற்கு முன் எண்ணெயாகச் செயற்பட்ட அதிகாரிகள் அத்தனை பேரும் ஊழல் வழக்குகளில் சிக்கித் தவிக்கிறார்கள்.

இவர்கள் செய்த ஊழல்கள் எதுவாக இருந்தாலும் கருணாநிதியின் ஒப்புதல் இல்லாமல் செய்திருக்க முடியவே முடியாது. ஆனால், இவர் மீது மட்டும் ஓர் ஊழல் வழக்குக்கூட பதியப்படவில்லை என்பது ஒரு பெரும் புதிர்தான்.

இவருடைய ஊழலை விசாரிக்க அமைக்கப்பட்ட சர்க்காரியா கமிஷன் விஞ்ஞானப்பூர்வமான ஊழல் செய்தவர் என்ற பட்டத்தைச் சூட்டியது இதனால்தான் போலும். தன்மீது படிந்துவிட்ட ஊழல் கறைகளை மறைப்பதற்காகத் திராவிட இயக்கம் எனக் கூப்பாடு போட்டுத் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள மற்றவர்களையும் அழைக்கிறார்.

மற்றொரு கழகத்தின் தலைவியோ ஊழல் வழக்கில் சிக்கிச் சிறை சென்றபோது அவரது அமைச்சர்களும் தொண்டர்களும் கோயில் கோயிலாக ஏறி இறங்கியும், தீ மிதித்தும், காவடி எடுத்தும் நடத்திய கூத்துக்கள் எந்தப் பகுத்தறிவைச் சார்ந்தது என்று அவர்களைத்தான் கேட்க வேண்டும்.

ஊழல் சேற்றில் திளைத்து எழுந்து தனது உடலெங்கும் கறைபடிந்து காட்சியளிக்கிற இரு கழகங்களோடு யார் சேர்ந்தாலும் அவர்கள் மீதும் ஊழல் கறை படியும். தங்கள் மீதுள்ள ஊழல் கறையை மற்றவர்கள் மீதும் பூசுவதற்காகவே திராவிட இயக்கத்தைச் சாய்க்கவிடமாட்டேன் என கருணாநிதி சவால் விடுகிறார்.

எத்தனையோ பேரின் தியாகத்தால் கட்டப்பட்ட மாளிகை இந்தத் திராவிட இயக்கம் என கருணாநிதி கூறியிருக்கிறார். ஆனால, அந்த மாளிகையில் இப்போது பதவி வெளவால்களும், ஊழல் பெருச்சாளிகளும் திரிகின்றன.

-பழ.நெடுமாறன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.யோகா அரங்கத்தின் சர்வதேச யோகா தினவிழா

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு நல்லூர்த் தேரடிக்கு அண்மையில் இயங்கிவரும் யாழ். யோகா அரங்க நிறுவனத்தினர் மருத்துவ சமூகத்தினையும் யோகா ஆர்வலர்களையும் இணைத்து சிறப்பான முறையில் எடுக்கின்ற யோகா தின விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30மணியளவில் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் யோக அரங்க இயக்குநர் எஸ்.உமாசுதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் மாவட்ட உளநல மருத்துவர் திருமதி.ஜே.திருமகள் சிவசங்கர் கலந்துகொள்ளவுள்ளார் மற்றும் மருத்துவ,உளநல,யோகா துறைகளில் வல்லுநர்களும் இந் நிகழ்வில் விருந்தினர்களாக கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

யோகாநடனம், அனுபவப்பகிர்வு, சிறப்புக் கருத்தரங்கு, செயல்முறைப் பயிற்சி ஆகியன நடைபெறவுள்ளன. சிறப்பு கருத்தரங்கு யோகா காட்டும் வாழ்வியல் என்னும் தொனிப்பொருளில் யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத்தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. இதன் நோக்குனராக பண்டிதர் வி.ஏ. தங்கமயில் பணி செய்கிறார். உலகளவில் யோகா என்னும் தலைப்பில் இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் எஸ்.றமணனும் சித்த மருத்துவமும் யோகாவும் என்னும் விடயம் பற்றி யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி விவியன் சத்தியசீலனும் உளவியல் நோக்கில் யோகா என்னும் கருத்துரையை யோக அரங்க நிறுவன ஆலோசகர் நா.நவராஜும் யோகாவும்' ஆன்மீகமும் என்னும் தொனிப் பொருளில் யாழ்/ சரவணை நாகேஸ்வரி வித்தியாலய ஆசிரியரான பாலசண்முகனும் வழங்குகின்றனர்.

மன ஒருமைப்பாட்டுடன் உகந்த ஒரு சூழலை யாழ்ப்பாணப் பிரதேசத்தில் ஏற்படுத்த துணை செய்வதற்காக இந்நிகழ்ச்சி ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது என நிகழ்ச்சி ஏற்பாட்பாளர்கள் அறிவித்துள்ளனர். இ

# 24 மணிநேரமும் புலனாய்வு தகவல்கள் திரட்டப்படுகின்றன

## பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர

(கொழும்பு)

நாட்டின் தேசிய பாதுகாப்புத் தொடர்பான நிலை பற்றிய தகவல்களை வழங்குவதற்காக, வாரத்தில் ஏழு நாட்களும், 24 மணி நேரமும், புலனாய்வுப் பிரிவினர் பணியாற்றுவதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பாக புலனாய்வுப் பிரிவினரிடம் இருந்து கிடைக்கும் தகவல்கள், விரிவாக ஆராயப்பட்டு பகுப்பாய் செய்யப்படுகிறது.

ஒவ்வொரு வாரமும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் பாதுகாப்புச் சபைக் கூட்டம் நடத்தப்படுகிறது.

இக் கூட்டத்தில் முப்படைகளின் தளபதிகள் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடுகிறர். இதனைச் சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது.

நாட்டில் பாதுகாப்பைக் குறைத்துக் கொள்ளும் படியான எந்த உத்தரவையும் நாம் பெறவில்லை.

மேலும் விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பு தொடர்பாக இராணுவம் கவனித்துக் கொண்டிருக்கிறது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 | 45 | 60 | 40 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 90 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 180 | 300 | 200 |
| தக்காளி | 100 | 100 | 100 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 50 | 60 | 60 |
| கோவா | 120 | 110 | 90 | 100 | 100 |
| கரட் | 200 | 200 | 200 | 280 | 150 |
| பூசணி | 30 | 40 | 40 | 40 | 30 |
| புடோல் | 50 | 70 | 70 | 80 | 50 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 160 | 140 | 110 | 160 | 100 |
| பெரிய வெங்காயம் | 120 | 110 | 100 | 120 | 120 |
| பாகற்காய் | 250 | 250 | 230 | 120 | 150 |
| வெண்டிக்காய் | 160 | 120 | 140 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 160 | 80 | 80 | 140 | 100 |
| பயற்றங்காய் | 160 | 150 | 120 | 100 | 140 |
| லீக்ஸ் | 160 | 180 | 160 | 200 | 120 |
| பீற்றூட் | 120 | 140 | 110 | 160 | 100 |
| கறிமிளகாய் | 120 | 200 | 170 | 200 | 120 |
| முருங்கைக்காய் | 200-350 | 400 | 350 | 400 | 500 |
| போஞ்சி | 250 | 240 | 200 | 280 | 200 |
| கத்தரிதம்புள்ள | 30 | 40 | 40 | 40 | 40 |
| கீரை - 1.பிடி | 30 | 20 | 20 | 20 | 10 |
| தேசிக்காய் | 120 | 80 | 120 | 80 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 45 | 40-50 | 50 |
| இராசவள்ளி | 200 | 140 | 130 | 160 | 120 |
| வெங்காயப்பூ | 300 | 250 | 200 | 280 | 200 |
| முள்ளங்கி | 120 | 80 | 70 | 120 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 30 | 20 | 20 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 20 |






## நயினை நாகபூஷணி அம்மனுக்கு இன்று பதினொராம் திருவிழா



### பக்தர் குறை தீர்ப்பாயே!

நயினை நாகபூஷணி எனும் நாமம் கொண்டவளே
நம்மை காத்து அருள்புரிவாய் தாயே
அலைகடல் மத்தியில் இருப்பவளே
அவதியுடன் வரும் பக்தர் குறை தீர்ப்பாயே
மனதில் தோன்றும் கவலையை களைவாயே
மனநிறைவு தருவாயே தாயே
தாயே உன்னை வணங்குகின்றோம்
தலை வணங்கி பாடுகின்றோம்

நவாலியூர்
செல்வி.ம.லலிதாம்பிகை

### வரம் தரும் மணி தீபக வல்லியே!

அலைகடலின் மத்தியிலே அம்பாளே
அரவணைக்கும் தாயாக எமைக்காக்கும்
அபிராம வல்லியே எங்கள் மணித்தீவின்
அலங்கார ரூபினியே -அருள் வழங்கும்
அற்புத நாயகியை அன்புடனே வேண்டுவோர்க்கு'
வரம் அருளும் எங்கள் நாயகியின்
அருள் வேண்டும் அடியவர்க்கு உன் அருட்கண்
பார்வையை எம்மீது பொழிந்திடம்மா

ப.கஜவதனன்
கல்வியங்கா

### அட்சய பாத்திரம் அருளிய அன்னை

அலைகடல் உறையும் அகிலாண்டேஸ்வரி
அகிலம் காத்திடும் ஆதிபராசக்தி
நவதள கோபுரம் வாய்க்கப் பெற்றவள்
நாகத்தால் தினமும் பூசிக்கப்பட்டவள்
அட்சய பாத்திரம் அருளிய அன்னையிவள்
ஆலம் பொந்தில் அமர்ந்த ஆதி பராசக்தி
இயக்கரும் நாகரும் அமைத்த உன்பதி
இந்திரன் வழிபட்ட மந்திர பூமி...


நயினை குல.அமுதன்

### கண்ணீரைத் துடைத்திடு தாயே!

நயினையில் வீற்றிருக்கும் நாகபூஷணி தாயே
புதுமைகள் புரிந்திட்டு புதுயுகம் படைத்திடு
உன் புகழ்பாட கடல் கடந்து வருகின்றோம்
நம் கண்ணீரைத் துடைத்திடு நயினையின் தாயே
உன்முகம் காண அசைந்து வரும் படகினிலே
உன் அருள் தேடி வருகின்றோம்
அள்ளக்குறையாத அமுதம் தரும்
தாயே உன் அருள் தேடி
வருகின்றோம்- எம் துயரங்களை
காத்து நீ அருள்வாய்

எஸ்.ரீ.ஆர் ராசா
புதுவையூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

உயர் அழுத்தம் மற்றும் தாழ் அமுக்க மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று (27.06.2015 ) சனிக்கிழமையும் நாளை (28.06.2015) ஞாயிற்றுக் கிழமையும் காலை 08.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை வடமாகாணத்தில் உள்ள சில பகுதிகளில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

27.06.2015 யாழ் பிரதேசத்தில கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சண்டிலிப்பாய், சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய, காரைநகர் பிரதேசம் உட்பட வலிகாமம் மேற்குப் பிரதேசங்கள், அராலி, காரைநகர் இலங்கை கடற்படை முகாம், காரைநகர் SLNS ELARA விடுதி ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில** இராமநாதபுரம், வட்டக்கச்சி, கோவிந்தன்கடைச்சந்தி, வட்டக்கச்சி பாம் , உடச்சகண்டி, கிளிநொச்சி விமானப்படை முகாம் 1 மற்றும் 2, கிளிநொச்சி நகரம், பூநகரி, ஆனையிறவு, திருநகர், கரடிப்போக்கு, பூட்சிற்றி, பரந்தன் ஒருபகுதி, பரந்தன் இலங்கைத் தொடர்பு நிலையம், சுகந்தன் அரிசிஆலை, ஆனையிறவு உப்பளம், உமையாள்புரம், ஓவசியர் கடைசந்தி, தரணிகுடியிருப்பு, நீவில், முற்கொம் பன், நல்லூர், தம்பிராய், பூநகரி 4ம் கட்டை, நெடுங்கேணி, தண்டுவன், நயினாமடு, குளவிசுட்டான், கிளிநொச்சி மக்கள் வங்கி, கிளிநொச்சி மாவட்ட செயலகம், கிளிநொச்சி நீர்ப்பாசன சபை, நெடுங்கேணி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் **வவுனியா பிரதேசத்தில** செக்கட்டிப்புலவு பிரதேசம், மாமடுவிலிருந்து மகாகச்சக் கொடிய வரை, பொகவஸ்வேவ, சளலிங்கம, நமலகம, பிரப்பன்மடு, CEC கல்லுடைக்கும் ஆலை ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில** மறிச்சுக்கட்டிப் பிரதேசம், கூழாங்குளம், உயிலங்குளம், புதுக்காமம், முதலைப்பிட்டி, வங்காலை, திருக்கேதீஸ்வரம், மன்னார்த்தீவிலிருந்து தலைமன்னார் வரை, வங்காலை கடற்படை முகாம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம், கமலாம்பிகை அரிசி ஆலை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், கீரி ஐஸ் தொழிற்சாலை, மன்னார் நீர்ப்பா சனத் திணைக்களம், மன்னார் தொலைத் தொடர்பு நிலையம், ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, மன்னார் வைத்தியசாலை, விசேட அதிரடிப் படை முகாம், வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, எருக்கலம்பிட்டி பம்கவுஸ், மீன்பிடிசமாசம், அந்தோனிப் பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, தலைமன்னார் கடற்படைமுகாம், சீனத் துறைமுகம், முசலிப் பிரதேசம், பரிகாரிக்கண்டல், பூந்தீவுக்கண் டல், மடுக்கரை, அரிப்பு, புதுவெளி, சிலாவத் துறை, கடற்படை முகாம், CECB, முள்ளிக்குளம் கடற்படை முகாம் ஆகிய பிரதேசங்களிலும்

28.06.2015 யாழ் பிரதேசத்தில ஊரெழு, புன்னாலைக்கட்டுவன் வடக்கு, குரும்பைசிட்டி, சுதந்திரபுரம், குட்டியப்புலம், அச்செழு, ஈவினை, நிலாவரை, சிறுப்பிட்டி மேற்கு, புத்தூர், ஆவரங்கால், நாவற்காடு, நவக்கிரி, தோப்பு, அச்சுவேலி, அச்சுவேலி வைத்தியசாலை, அச்சுவேலி நகரம், செல்வநாயகபுரம், அச்சுவெலி வல்லை வீதி, விஜிதா மில், பத்தமேனி, பாரதி வீதி, தம்பாலை, இடைக்காடு, வளலாய், அரசடி, சம்மந்தர்கடை, கிழவிதோட்டம், யாக்கரு, கலிகை, துன்னாலை, தாமரைக்குளத்தடி, இந்திர அம்மன் கோவிலடி, கப்பூது, சங்கத்தானை, சாவகச்சேரி, கச்சாய் வீதி, சாவகச்சேரி நகரம், நுணாவில், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி நீதிமன்றக் கட்டடத்தொகுதி, யாழ்ப்பாணம் தொழிநுட்பக்கல்லூரி, கொக்குவில் நெதேர்ண் இண்டஸ்ரியல், பல்கலைக்கழக கல்லூரி, அச்சுவேலி Plot A'B' கைத் தொழிற்பேட்டை, அச்சுவேலி கைத்தொழில் அபிவிருத்திப் பேட்டை, புன்னாலைக் கட்டுவன் விக்கிர மரட்ண பிறைவேற் லிமிற்ரேட் ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** கிளிநொச்சி நகரம், பூநகரி, ஆணையிறவு, திருநகர், கரடிப்போக்கு, பூட்சிற்றி, பரந்தன் ஒருபகுதி, சுகந்தன் அரிசி ஆலை, பூநகரி, ஆணையிறவு, ஆணையிறவு உப்பளம், உமையாள்புரம், ஓவசியர் கடைச்சந்தி, தரணிகுடியிருப்பு, நீவில், முற்கொம்பன், நல்லூர், தம்பிராய், பூநகரி, 4 ஆம் கட்டை, நாவற்காடு, கேப்பாப்பிலவு, வற்றாபபளை, கறிசிலைமடு, வித்தியாபுரம், தட்டையார் மலை, முத்து விநாயகர்புரம் 01 மற்றும் 02, கனகரத்தினபுரம், முத்தையன்கட்டு, பரந்தன் இலங்கைத் தொடர்பு நிலையம், விமானப் படை-1 மற்றும் 2, முல்லை த்தீவு 59 ஆவது படைப் பிரிவு, SFHQ வற்றாப்பளை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் பட்டானிச்சூர் பிரதேசம், பட்டக்காடு பிரதேசம், வேப்பங்குளம் பிரதேசம், இராசேந்திரகுளம், சூடுவெந்தபுலவு, உளுக்குளம் ஆகிய பிரதேசங்களிலும், மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். (இ-5)

# கொலைச் சந்தேக நபரின் பிணையை ரத்துச் செய்ய நீதிமன்றம் நடவடிக்கை

## யாழ்.நீதிமன்றத் தாக்குதலுடன் தொடர்பாம்

**(யாழ்ப்பாணம்)**

**கோப்பாய்ப் பிரதேசத்தில் இடம்பெற்ற கொலை வழக்கொன்றில் பிரதான எதிரியாகக் குற்றம் சுமத்தப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்த நபர் ஒருவர், அண்மையில் யாழ்ப்பாணம் நீதிமன்றத்தின் மீதான தாக்குதலில் எதிரியாகக் குற்றம் சுமத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதையடுத்து, அவருக்கு வழங்கப்பட்டுள்ள பிணையை இரத்துச் செய்வதற்கு யாழ்.மேல் நீதிமன்றம் நடவடிக்கை எடுத்துள்ளது.**

கடநத் 2009 ஆம் ஆண்டு கோப்பாய் பிரதேசத்தில் இரத்தினம் மணிவண்ணன் என்ற நபரை கொலை செய்ததாக 4 பேருக்கு எதிராக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் வழக்கில் முதலாவது எதிரியாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள நபருக்கு வழங்கப்பட்டுள்ள பிணை தொடர்பாகவே இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை 23 ஆம் திகத இந்த கொலை வழக்கு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இந்த வழக்கின் முதலாவது எதிரியாகக் குற்றம் சுமத்தப்பட்டு தற்போது பிணையில் செனறுள்ள கிருஸ்ணபிள்ளை பிரேமன் என்ற நபர் நீதிமன்றில் ஆஜராகியிருக்கவில்லை.

அவர் ஏன் ஆஜராகவில்லை என நீதிபி வினவியபோது அண்மையில் யாழ்.நீதிமன்றத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தில் 10 ஆவது எதரியாக கிருஸ்ணபிள்ளை பிரேமன் மீது குற்றம் சாட்டப்பட்டு யாழ். நீதவான் நீதிமன்ற உத்தரவில் அனுராதபுரம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் இருந்து வருவதாக அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து கொலை வழக்கொன்றில் யாழ.மேல் நீதிமன்றத்தில் பிணையில் சென்ற நபர் வழக்கு முடிவடையும் காலம் வரையில் நன்னடத்தையில் இருக்க வேண்டும்.

அத்துடன் வழக்கு தற்சமயம் மேல் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகின்றது. கொலை வழக்கில் தனக்கு பிணை வழங்கிய நீதிமன்றத்திற்கே கல்வீச்சு நடத்தி அரச நீதிமன்றத்தைச் சேதப்படுத்திய குற்றச்சாட்டில் நீதவான் நீதிமன்ற கட்டளையில் விளக்க மறியலுக்குச் சென்றிருப்பது, மேல் நீதிமன்றத்தின் பிணையை மீறிய செயலாகும்.

எனவே, மேல் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட பிணையை இரத்துச் செய்வதா? என்ற விசாரணை எதிர்வரும் ஜுலை மாதம் 27 ஆம் திகதி நடைபெறும் என தெரிவித்த நீதிபதி இளஞ்செழியன், அன்றைய தினம், தினத்தன்று குறிக்கப்பட்ட எதிரியை மேல் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அனுராதபுரம் சிறைச்சாலை அத்தியட்சகருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்தக் கொலை வழக்கின் விசாரணையும் முதலாவது எதிரியாகிய கிருஸ்ணபிள்ளை பிரேமனின் பிணை ரத்து விசாரணையும் ஜுலை மாதம் 27 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (இ-9)

# மழலைகள் விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

இருபாலை மதுரம் கிட்ஸ் முன்பள்ளியின் மழலைகள் விளையாட்டுவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப.1.30 மணிக்கு முன்பள்ளி தலைவர் எஸ்.கே.கிருபாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் என்.மகேந்திரராஜா பிரதம விருந்தினராகவும் ஜே.259 கிராம சேவையாளர் எஸ்.சுபாகரன் சிறப்பு விருந்திரனராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (இ-3)

# ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் ஒன்றுகூடல் நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை 10 மணிக்கு கோப்பாய் வடக்கு மாதர்கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது என சங்கச் செயலாளர் ந.கனகலிங்கம் அறிவித்துள்ளார். (இ-3)

# பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி சின்னத்தங்கம் ஆறுமுகம்

நயினாதீவைப்பிறப்பிடமாகவும்சுவிஸ் Bern ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தங்கம் ஆறுமுகம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை பி.ப 1 மணி தொடக்கம் பி.ப 3 மணிவரை Bremgartenfriedh of, Murtenstras se 51,3008 Bern,Switzerland என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### நவரத்தினம் நல்லதம்பி

முள்ளானையைப் பிறப்பிடமாகவும் கனடா Mississauga ஐ வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் நல்லதம்பி கடந்த 24 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மு.ப 11.30 மணிவரை 737 Dundas St E, Miss issauga,ON L4Y 2B5, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### தீபிகா சண்முகப்பிரபா

கனடா Toronto ஐ பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தீபிகா சண்முகப்பிரபா நேற்று முன்தினம் வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மு.ப 11 மணிவரை Elgin Mills Cemetery and Visitation Centre,1591 Elgin Mills Rd E, Richmond Hill, ON L4S 1M9 Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி தம்பையா நாகம்மா

காரைநகர் களபூமி திக்கரையைப் பிறப்பிடமாகவும் இல.57, சீனிவாசகம் வீதி, கொட்டடி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா நாகம்மா நேற்று முன்தினம் வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலுக்கியைவான பசுமைத்தொழில்நுட்பங்கள்- 51

## உயிர்ப்பசளைகளின் பாவனையும் எமக்குள்ள சவால்களும்?



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

பசுமைப்புரட்சியின் எதிர்பாராத விளைவுகளுள் ஒன்றாகவே பீடைநாசினிகள் மற்றும் அசேதன இரசாயனங்களின் ஆளுமையைக் குறிப்பிடலாம். உணவுற்பத்தியை பெருக்குவதற்காக பசுமைப்புரட்சி உள்வாங்கிய திருந்திக கலப்பினப் பயிர்கள் உள்ளீடுகளை நம்பியிருந்தபோது அதனை வரவேற்று அன்றைய காலத்தின் தேவையைப் பூர்த்தி செய்திருப்பினும் பிற்காலத்தில் பயன்படுத்திய உள்ளீடுகளினாலான தாக்கத்தை விஞ்ஞானிகள் முன்கூட்டியே அனுமானித்திருக்காமையும் அதன் விளைவுகளை பெரும்பொருட்டாக மதிக்காதமையும் தான் இவ்வாறான விளைவுகளுக்கெல்லாம் காரணம் என இப்போது அனைவரும் அடித்துக் கூறினாலும் காலந்தாழ்த்தியதால் அதன் விளைவுகள் எமது சூழலை வெகுவாகவே பாதித்துவிட்டது. இதிலிருந்து மீளுவதற்கான வழிவகைகளை பலரும் பலவாறாக ஆராய்ந்து கொண்டிருக்கையில் இக்கருத்தரங்கில் முன்வைக்கப்பட்ட செய்தி அனைவருக்கும் நம்பிக்கையூட்டுவதாகவே அமைந்தது. பயன்படுத்திய அசேதன இரசாயனங்களின் தாக்கம் குடிநீரில் அதிகளவாகவே காணப்படுவதும் அதனால் எமக்கு ஏற்படும் விளைவுகள் பற்றி இன்னமும் நாம் அலட்சியமாக இருக்க போது தாவரத்திற்கு தேவையான தழைச்சத்தை பக்ரீறியா வளியிலிருந்து நிலைநாட்டி வேர்முடிச்சுக்களில் சேமித்து வைக்கும்.


இதனை தாவரம் இலகு முறை தழைச்சத்தாக அகத்துறிஞ்சக் கூடியதாக இருக்கும். இவ்வாறான பக்ரீறியாவை நாம் செயற்கைமுறையில் விருத்தி செய்தால் அதனை பயிர்ச்செய்கை காலத்தில் விதை விதைக்கும் போது பக்ர்றியா கலவையில் சேர்த்து கலந்து விதைப்பதால் வேர்முடிச்சுக்கள் விரைந்துருவாவதை ஊக்குவிக்கலாம்.

உயிர்படல நுண்ணங்கிகள் (Biofilm microorganisms) தாவரத்தின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவுவதோடு அவற்றினது பங்கு பற்றியும் ஆய்வினால் கண்டறிந்திருக்கின்றார்கள். இவ்வாறான நுண்ணங்கிகளின் தொழிற்பாட்டை நாம் ஊக்குவிக்க வேண்டியதன் அவசியத்தை இக்கருத்தரங்கு ஆழமாகப் பதிவுசெய்திருக்கின்றது.

சேதன விவசாயத்தை ஊக்குவிப்பதற்கான வழிவகைகளை நாம் இன்னும் முயற்சிக்க வேண்டும். விவசாய திணைக்களத்தின் பாரிய வேலைத்திட்டடியிருக்கின்றது. இதற்கு ஆய்வுரீதியான பின்புலம் தேவையாயிருப்பதுடன் தரத்தையும் நிர்ணயஞ்செய்ய வேண்டியிருக்கின்றது. விவசாய பீடத்தின் ஆய்வுகளில் சேதன விவசாயத்திற்கும், உயிர்ப்பசளைகள் மற்றும் ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவத்தின் முக்கியத்திற்கும் இன்னும் உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி மதிப்பேற்றஞ் செய்து புதிய பொருட்களை கண்டுபிடிக்கும் செயற்பாட்டுக்கு முன்னுரிமையளிக் பெருகிவரும் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கைக்கு உணவும் ஒருவகையில் காரணியாக இருப்பதை அனைவருமே உணர்கின்றோம். அதுவும் தெளிக்கப்படும் பீடைநாசினிகளின் செறிவு மரக்கறிகளில் அதிகமாக இருப்பதை ஆய்வு மூலமாகவும் கண்டு அதற்கான தீர்வு முன்வைக்கப்பட வேண்டும்.

ஆங்காங்கே விவசாயிகளின் விளைநிலத்தில், இன்னும் விவசாயப் பெருமக்களின் சங்கத்தில் சிறு சிறு முயற்சிகளை ஏலவே நாம் செய்து பார்த்திருந்தும் அவற்றை முழுவீச்சில் செய்ய வேண்டிய காலத்தை நாமும் எதிர்பார்த்திருக்கின்றோம்.

நவீனமயப்படுத்தப்பட்ட ஆய்வுகூடத்தின் உதவி இதற்காக தேவைப்படுகின்றது. இதனை கிளிநொச்சியில் நாம் ஏற்படுத்திக்கொள்ள வழிவகை பிறக்கும் என நம்புகின்றோம். வடபகுதியில் உள்ள விவசாய திணைக்களம் உள்ளிட்ட அரச திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள், பாடசாலைகள் மற்றும் வங்கிகள் என பரந்துபட்டு பணிபுரியும்




## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 53-XXXVIII

முடியாதென்பதை கட்டியங் கூறியிருப்பதையும் கவனத்திற் கொண்டு இனிவருங்கால செயற்றிட்டங்களை நாம் திட்டமிட வேண்டும்.

அசேதன இரசாயனங்களுக்கான மாற்றுவழியாகவே உயிர்ப்பசளைகளை நாம் கவனத்திற் கொள்ளலாம். அவரைப் பயிர்தாவரங்களில் வளிமண்டல நைதரசனை வேர்முடிச்சுக்களாக நிலைநாட்டும் செயற்பாடு பற்றி நாமெல்லோரும் அறிந்திருக்கிறோம் அல்லவா. அவ்வாறான தாவரத்திற்கும் றைசோபியம் என்னும் நன்மைதரும் பக்ரீறியாவுக்குமான ஒன்றிய வாழ்க்கையில் பக்ர்றியாவுக்கான இடவசதியையும் தேவையான ஊட்டச்சத்தை தாவரம் வழங்கும்

இவ்வகையான பக்ரீறியாக்களை செயற்கை முறையல் விருத்தி செய்தால் அவறறை விவசாயிகள் வாங்கி பயன்படுத்த தக்கதாக ஏற்பாடு செய்தல் வேண்டும். இதற்காக தான் தொழிற்சாலைகளின் உதவி தேவைப்படுகின்றது. பாரிய அளவில் உயிர்ப்பசளைகளை உற்பத்தி செய்வதற்கான வழிவகைகளை நாம் ஆராயும் அதே வேளையில் அவற்றை விவசாயிகளின் பயன்பாட்டுக்கும் கிடைக்கக்கூடியதாக செய்தல்வேண்டும்.

இவற்றுடன் தாவர வேர்த்தொகுதியில் இருக்கும் நன்மை தரும் பூஞ்சணங்கள் மற்றும் பக்ரீறியாக்களை ஒன்றிணைத்து உயிர்ப்படல நுண்ணங்கிகளை உருவாக்கி வெற்றியும் கண்டிருக்கின்றார்கள். இந்த துடன் இச்செயற்பாடு முன்னெடுக்கப்பட்ட போதிலும் எமது மக்களும் விவசாயிகளும் அதில் அதீத அக்கறை கொள்ளாதிருப்பது இச்செயற்பாட்டை தொடர்ந்து முன்னெடுக்க முடியாமல் செய்து விடுகின்றது.

விவசாய பெருமக்களிடையே பீடைநாசினி பயன்பாட்டை பயன்படுத்துவ்தில் கட்டுப்பாடுகளை நாம் போடுவதற்கு முன்னால் மாற்று வழிகள் பலவற்றை பரிந்துரை செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும். இந்தியாவில் தமிழ்நாட்டில் கிராமந்தோறும் உயிர்ப்பசளைகள் மற்றும் உயிர்க்கொல்லிகள் பலவற்றை வாங்கி பயிர்ச்செய்கையில் பயன்படுத்துவதற்கு முடியும். அவ்வாறான நிலைமையை இங்கும் நாம் உருவாக்க வேணகப்படும்.

உலகளாவிய ரீதியில் நடைபெறும் ஆய்வுகளுக்கிணைவாக எமது பிரதேசத்தில் உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி ஏமது விவசாயிகளுக்கான பிரச்சனைகளுக்கு தீர்வு காணவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி இதில் நாமனைவரும் இணைந்து செயலாற்ற வேண்டியதன் தேவையையும் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

பாரம்பரியமாக செய்யப்பட்ட விவசாயத்தின் முக்கியத்துவத்தை பதிவு செய்து அதன் நல்ல விடயங்களை மீண்டும் பரிசீலனை செய்து இயற்கையுடன் வாழ பயிர்ச்செய்கை செய்ய நாமனைவரும் முயற்சிக்க வேண்டும்.

யாழ்ப்பாண குடாநாட்டில் பட்டதாரிகளை உருவாக்குவதில் விவசாய பீடத்திற்கு கணிசமான பங்களிப்புண்டு. விவசாய பீடம் வட பகுதிக்கு தேவையான ஆளணியை உருவாக்குவதோடு அவர்களோடு இணைந்து செயலாற்ற திட்டம் தீட்டியுமிருக்கின்றது.

அதனுடன் விவசாய பீடத்தில் விவசாய கற்கை நெறி தவிர்ந்த சமகாலத்திற்கு தேவையான புதிய கற்கை நெறியும் அறிமுகம் செய்ய இருக்கின்றோம். இதற்கான கருத்துக்களை, முன்மொழிவுகளை எம்மினிய உறவுகளிடமிருந்து எதிர்பார்க்கின்றோம். இன்னும் காலத்தின் தேவையறிந்து தொழில்நுட்பத்தில் சிறந்த பட்டதாரிகளையுருவாக்க தேவையேற்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்ஃபி




ரமேஷ், சங்கானை.



ரவி வல்வெட்டித்துறை



சிவா ரதிகன்



கே.தர்கீபன்



ஜெயகரன்

உங்கள் செல்ஃபிகளை
photosofvalampurii@gmail.com
என்னும் முகவரிக்கு உங்கள் பெயர்,
முகவரியுடன் அனுப்பிவையுங்கள்.
சிறந்த செல்ஃபிக்கு பரிசில்கள் உண்டு




துஷ்யந்தன், பருத்தித்துறை.

உங்கள் செல்பிக்கள் ஏதும் பொருள் கூறுவதாயோ அல்லது வித்தியாசமான பின்புலத்திலோ இருக்குமாறு அனுப்பி வையுங்கள்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 414

அனுசா அனுசாந்தி




லதா கோஸ்வரன்





செல்வா குமார்





தாஸன் நகுல்




அஜித் ரஜீத்




சாந்தி வரதன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை யோக்கியனாக மாற்றிக் கொள்வதில் ஒரு நன்மை ஏற்படும். அதாவது உலகில் ஒரு அயோக்கியன் குறைகிறான். - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# நீதிபதிகளின் ஆட்சியில் வடக்கு தலைநிமிரட்டும்

வட மாகாணத்தில் இப்போது நீதிபதிகளின் ஆட்சி ஆரம்பமாகியுள்ளது.

இலங்கையில் எந்த மாகாணத்திலும் எப்போதும் இல்லாத பெருமையை வடக்கு மாகாணம் கொண்டிருப்பது கண்டு புளகாங்கிதம் அடையாமல் இருக்க முடியாது.

ஆம், வடக்கு மாகாணத்தின் முதலமைச்சர் இந்த நாட்டின் நீதியரசராக இருந்த சி.வி.விக்னேஸ்வரன். எதையும் வெளிப்படையாகக் கருத்துரைக்கக்கூடிய நீதியரசரின் கீழ் வடக்கு மாகாண ஆட்சி வந்ததால் தமிழ் அரசியல்வாதிகள் தங்களை ஒழுங்குபடுத்தவும்- தமக்கிருக்கக்கூடிய கடமைகளை உணரவும் தலைப்பட்டுள்ளனர்.

இதன்மூலம் வடக்கு மாகாணத்தில் நல்லதொரு அரசியல் அமைப்பு உருவாகுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் அரசியல்வாதிகளின் வாக்குறுதிகளை நம்பி ஏமாந்துபோனவர்கள்.

தமிழ் அரசியல்வாதிகள் ஆற்றுகின்ற ஒவ்வொரு உரையினதும் பொருளை தமிழ் மக்கள் நன்கு உணர்ந்துள்ளனர்.

எனவே காலாகாலமாக அரசியல்வாதிகளின் கபடத்தனமான உரைகளை நம்பி ஏமாந்தது போதும் என்ற நிலையில் நேர்மையான அரசியல் தலைமையே முதலில் எங்களுக்குத் தேவை என்று தமிழ் மக்கள் உணர்கின்றனர். அந்த வகையில்தான் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை தமிழ் மக்கள் தங்கள் மாகாணத்தின் ஆட்சித் தலைவராகத் தெரிவு செய்தனர்.

ஒரு நீதியரசர் வடக்கு மாகாண சபையின் ஆட்சியில் இருப்பது நல்லதென்ற தமிழ் மக்களின் முடிவு, பாதை மாறிப் பயணிக்கும் தமிழ் அரசியல்வாதிகளையும் இழுத்து நல்வழிப்படுத்துவதாக அமைகிறது.

அதேநேரம் நீதியரசரை தமிழ் அரசின் தலைவராக்கி விட, நீதியரசர்-நீதிபதிகள் மூலமாக தமிழ் மண்ணை - தமிழர் தாயகத்தை நிமிர்த்துவதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

ஆம், யாழ்.மாவட்டத்தின் மேல் நீதிமன்ற நீதிபதியாக மா.இளஞ்செழியன் அவர்கள் பதவி ஏற்றதும் அவரின் துணிச்சல்மிகு நடவடிக்கையால் வடக்கு மாகாணம் முழுமையும் நீதிபதிகளின் ஆட்சியாக மாறியுள்ளது.

பலவீனமான தமிழ் அரசியல் தலைமைகளால் எதுவும் செய்ய முடியாது என்றிருந்தவேளை, நீதியரசர் முதலமைச்சராகவும், துணிச்சல் மிக்கவர்கள் வடக்கின் நீதிபதிகளாகவும் அமர்ந்த போது அனைத்து நீதிபதிகளும் வடக்கில் நீதியை நிலைநாட்ட துணிந்தனர். இதனால் தமிழ் மக்கள் நிம்மதியாக வாழும் வாய்ப்பு கிட்டி வருகிறது.

இன்னும் சில மாதங்களில் வடக்கு மாகாணம் திருந்தியது-திருத்தப்பட்டது அதிசயம் என்று மற்றவர்கள் போற்றக்கூடிய அறிகுறிகள் இப்போதே தென்படுகிறது.

அரசியலைவிட; அதிகாரத்தை விட; நீதித்துறை ஆட்சிசெய்வதுநல்லாட்சியைவிடஉயர்வானது என்று கூறுவதில் தமிழர்கள் பெருமை அடைய முடியும்.

# இலங்கையர் சட்டத்தை சரியாக அறியாதுள்ளனர்

(கொழும்பு)

இலங்கை மக்கள் சட்டத்தை சரியாக

## ஆசிய மனித உரிமை ஆணைக்குழு தெரிவிப்பு

அறியாததாலும் பயிற்சிகளை பெறாதவர்கள் சம்பளத்திற்கு வேலை செய்வதாலும் சமூகத்திற்கு பாரிய சேதம் ஏற்படுவதாக ஆசிய மனித உரிமை ஆணைக் குழுவின் பணிப்பாளரான சட்டத்தரணி பசில் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதனால், நாட்டிற்குள் அறிவு பூர்வமாக போராட்டம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

தேசிய நூலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பொன்றில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய முன்னாள் கணக்காய்வாளர் நாயகம் சரத் மாயதுன்னே, 19-வது திருத்தச் சட்டத்திலும் ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்படவில்லை என்றார்.

அடுத்த பொலிஸ்மா அதிபர் பதவிக்கு தகுதியானவர்கள் 10 பேர் இருந்தாலும் அவர்களில் ஒருவரை நியமிக்க ஜனாதிபதியின் பரிந்துரை அவசியம் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (செ-11)

# துஷ்பிரயோக முயற்சி நபர் விளக்கமறியலில்

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறைப் பகுதியில் 15 வயது பாடசாலைச் சிறுமி ஒருத்தியை 100 ரூபா கொடுத்து துஷ்பிரயோகம் செய்ய முற்பட்ட நபரை எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி மா.கணேசராஜா நேற்று உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஒரு வாரத்திற்கு முன்னர் 63 வயதுடைய நபர் ஒருவர் சிறுமியை துஷ்பிரயோகத்திற்குட்படுத்த முயன்ற குற்றச்சாட்டில் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில் பிரஸ்தாப சந்தேகநபரை அடையாள அணி வகுப்புக்கு உட்படுத்துமாறும் இவ்வாறான நபர்களுக்கு இலகுவில் பிணையில் செல்வதற்கு நீதிமன்றம் அனுமதி அளிக்காது எனவும் எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணியிடம் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி மா.கணேசராஜா சுட்டிக்காட்டியுள்ளார். (செ-3)

# பாலியல் வல்லுறவு இளைஞருக்கு மறியல்

(பருத்தித்துறை)

பாலியல் வல்லுறவுக் குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவரை எதிர்வரும் 3-ம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி மா.கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

குடத்தனைப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் 28 வயதுடைய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் நேற்று ஆஜர் செய்யப்பட்டிருந்தார்.

பிரஸ்தாப இளைஞர் குறித்த யுவதியை மிரட்டியுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

விடயத்தை வெளியில் யாருக்காவது கூறினால் யுவதியின் தந்தையை கொலை செய்வதாக மிரட்டியுள்ளதாக அதில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

மேலும் கடந்த 2-ம் திகதி இந்த வல்லுறவுச் சம்பவம் இடம்பெற்றதாகவும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(செ-3)

# ஞானயக்ஞம் நிகழ்வு இன்று

பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரின் பிறந்த நூற்றாண்டை முன்னிட்டு யாழ்ப்பாண சின்மயாமிஷன் நடத்துகின்ற கீதாஞானயக்ஞம் நிகழ்வு இம்மாதம் வேதாந்தமடத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

இதில் கீதை காட்டும் பாதை எனும் தலைப்பில் யாழ்.சின்மயாமிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரமச்சாரி ஜாக்ரத சைதன்யா உரையாற்றவுள்ளார்.

இன்று சனிக்கிழமை தொடக்கம் 30ம் திகதி செவ்வாய்க்கிழமை வரை தினமும் மாலை 6.30 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை ஏற்பாடாகியுள்ள இந்நிகழ்வு இல.18, குமாரசுவாமி வீதி, கந்தர்மடம் எனும் முகவரியில் அமைந்துள்ள வேதாந்த மடத்தில் இலவச அனுமதியுடன் ஏற்பாடாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(செ)

# கசிப்பு உற்பத்தி இருவர் கைது

(கரணவாய்)

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவர் பருத்தித்துறை பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 25 லீற்றர் கோடா மற்றும் 15 போத்தல் ஸ்பிறிற் என்பன நேற்று மதியம் கைப்பற்றப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பாக அல்வாய் பகுதியைச் சேர்ந்த இருவரே கைது செய்யப்பட்டவர்களாவர். (இ-3-60)

# தொழில்வாய்ப்பற்றோர் கணக்கெடுப்பு- 2015

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டச் செயலரின் அறிவுறுத்தலுக்கமைய தொழில்தேடுவோர், தொழில் வாய்ப்பற்றோர் சுயவிபரங்களைப் பெற்று அதனூடாக வேலை வாய்ப்பை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் அனைத்துக் கிராம அலுவலர் பிரிவிலும் நாளை மறுதினம் திங்கட்கிழமை கணக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

எனவே சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள தொழில் தேடுவோர் தாம் வதியும் கிராம அலுவலர் பிரிவுகளில் அன்றைய தினம் பதிவுகளை மேற்கொள்ளுமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.(செ-3)

# ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



## உண்மையான அன்பு

நீங்கள் அனைவருமே அன்பைத் தேடி அலையும் பிச்சைக்காரர்கள் நிலைமையில்தான் இருக்கிறீர்கள். மற்றவர்கள் உங்கள் மீது அன்பு செலுத்தவேண்டும் என்று விரும்புகிறீர்கள். ஆனால் நீங்கள் மற்றவர்களுக்கு அன்பைக் கொடுப்பதில்லை. உங்களுடைய அன்பு எதிர்பார்ப்புகள் நிறைந்தது.

ஆனால் காரணம் இல்லாத அன்பு- அதாவது ளீழிற்விளயிளவிவி ஸிலிஸள என்று ஒன்று இருக்கிறது. அந்த அன்புக்கு காரணம் எதுவும் கிடையாது. நான் குறிப்பிடும் அன்பு அத்தகைய அன்புதான். அத்தகைய அன்பை நீங்கள் கண்டுபிடித்தால் மட்டுமே நீங்கள் சத்தியலோகத்தில் நுழைய இயலும். இல்லையென்றால் நுழைய இயலாது.

உங்களைக் கூர்ந்து நோக்கி ஆராய்ந்தால் நீங்கள் எத்தகையவர் என்பது உங்களுக்குத் தெளிவாகும். அதுவே உங்கள் உண்மை இயல்பு ஆகும். இதனை உணர்ந்தால் உலகத்தை வேறு கண்ணோட்டத்துடன் காண இயலும். இப்பொழுது உங்களுக்கு தெரிந்ததெல்லாம் பற்று ஒன்றுதான். கூர்ந்து பார்த்தால் உங்கள் உறவுமுறை மீது நீங்கள் வைத்திருப்பது வெறும் பற்றுத்தான் என்பதைத் தெளிவாக உணர்வீர்கள்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



நான் உனக்காக எப்போதும் பிரார்த்தனை செய்கிறேன். நீ எனக்காகப் பிரார்த்தனை செய். தாழ்த்தப்பட்ட கோடிக் கணக்கான இந்தியர்களுக்காக நாம் ஒவ்வொருவரும் இரவும் பகலும் பிரார்த்தனை செய்வோம்.

தனித்திருப்பவனே மகிழ்ச்சியாக இருக்கிறான். எல்லோருக்கும் நன்மை செய். எல்லோரையும் ஏற்றுக் கொள். ஆனால் யாரிடமும் பற்றுவைக்காதே. அது பந்தம். பந்தம் துக்கத்தை மட்டுமே கொண்டுவரும். தன்னந்தனியாக உன்னுள்வாழ். அதுவே ஆனந்தம். தான் கவனிக்கவோ, தன்னைக் கவனிக்கவோ யாரும் இல்லா மல் இருப்பதுதான் சுதந்திரமாக இருப்பதற்கான ஒரே வழி.

யாருடைய இதயம் ஏழைகளுக்காக இரத்தம் வடிகிறதோ அவனையே மகாத்மா என்பேன். இல்லாவிட்டால் அவன் ஒரு துராத்மாவே.

பூஜை, படிப்பு, பிரசாரம் என்ற பாணியில் இப்போது வேலையை ஆரம்பி. வாரந்தோறும் கூடுவதற்கான ஓரிடத்தை அமைத்துக்கொள். அங்கே பூஜை, உபநிடதங்களை உரைகளுடன் படித்தல் போன்றவை நிகழவேண்டும். இவ்வாறு மெல்ல மெல்லக் கற்றுக்கொண்டும் வேலை செய்து கொண்டும் முன்னேறு. சக்கரம் உருள்வதற்காகத் தோள் கொடுத்து உதவ நீ முன் வந்தால் உனக்கு எல்லாம் வந்து சேரும்.

நீ சொல்லவேண்டிய செய்தியைச் சொல். போதிக்கவேண்டியதைப் போதனை செய். அதோடு நிறுத்திக்கொள். மற்றவற்றை இறைவனே அறிவான்.

மனிதனை தெய்வமாகக் கருதுவது மிகக் கடினம். ஆனால் முயற்சி செய்தால் நிச்சயமாக வெற்றி கிடைக்கும். மனிதன் அறிகிறானோ இல்லையோ ஒவ்வொரு மனிதனிலும் கடவுள் உறைகிறார். உங்கள் பக்தியால் மனிதனிலுள்ள அந்த தெய்வீகம் விழித்தெழுவது உறுதி.

நான் காட்டுகின்ற வழியில் செல்லுங்கள். வெற்றி நிச்சயம். இதன் இரகசியம் குருபக்தி.

உண்மையில் கோழைத்தனத்தை விடப் பெரிய பாவம் எதுவும் இல்லை. கோழைகளுக்கு கதிமோட்சமே கிடையாது. அது உறுதி. வேறு எதையும் சகித்துக்கொள்ள என்னால் முடியும். ஆனால் கோழைத்தனத்தை மட்டுமே சகிக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III -2015 ஓல்ட்கோல்ஸ் அணி காலிறுதிக்கு தகுதி

சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III சுற்றுப் போட்டிக்கு யாழ்.மாவட்டத்தில் இருந்து ஓர் அணியை தெரிவு செய்வதற்காக யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கம் நடத்தி வருகின்ற தகுதிகாண் போட்டித் தொடரில் 2 ஆவது சுற்றில் 10 ஆவது போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை 21.06.15 அன்று ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் ஓல்ட்கோல்ஸ் அணி சிறிகாமாட்சி அணியை 3 இலக்குகளால் வெற்றி பெற்று கால் இறுதி போட்டிக்கு தகுதி பெற்றது.

பூவா, தலைவா நிகழ்வில் வெற்றி பெற்ற சிறிகாமாட்சி அணி 26 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 143 ஓட்டங்களை பெற்றது.

கஜீவராஜ்-66 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சிறிகுகன்-05, நிமலேந்திரா-03, குகன்-01, நிரோஸன்-01 இலக்குகளை கைப்பற்றினர்.

144 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய ஓல்ட்கோல்ஸ் அணி 27.3 ஓவர்களில் 7 இலக்குகளை இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றனர். சிறிகுகன்-18, மதூஸன்-27, திலீபன் ஆட்டமிழக்காது 41, கஜேந்திரன் ஆட்டமிழக்காது 12 ஓட்டங்களைப் பெற்றனர். சுவேநிதன்-03, சுதர்ஸன்-02, தீபநாதன், கேதீஸ் தலா ஒரு இலக்கினை கைப்பற்றினர்.

இப்போட்டியில் வெற்றிபெற்ற ஓல்ட்கோல்ஸ் அணி 04/07/15 அன்று நடைபெற இருக்கும் 3 ஆவது கால் இறுதிப் போட்டியில் கே.சீ.சீ.சீ. அணியை எதிர்கொள்வர்.

இப்போட்டியின் மூலம் தரவரிசை பட்டியலுக்கு ஓல்ட்கோல்ஸ் அணி 7.74 புள்ளிகளையும் சிறிகாமாட்சி அணி 2.13 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டனர். (க)

# அணியில் ஏற்பட்ட குழப்பமே தொடர் இழப்பிற்கு காரணம்

## கோலி பரபரப்பு கருத்து



வங்கதேச தொடரில் இந்திய அணி வீரர்களிடம் முடிவெடுப்பதில் குழப்பம் ஏற்பட்டதாக விராட் கோலி கருத்து தெரிவித்துள்ளது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

வங்கதேச அணிக்கு எதிரான ஒருநாள் தொடரை இந்திய அணி தோற்றதால் அணித்தலைவர் டோனி மீது பல்வேறு விமர்சனங்கள் எழுந்தன.

இதனால் அவர் அணித்தலைவர் பதவியில் இருந்து விலகிக் கொள்வதாக அறிவித்தார்.

இதைத் தொடர்ந்து அஸ்வின், ரெய்னா ஆகியோர் டோனிக்கு ஆதரவாக கருத்து தெரிவித்தனர்.

மேலும், இந்திய அணி பிளவு பட்டிருப்பதாகவும், வீரர்களுக்கு இடையே மோதல்கள் இருப்பதாகவும் கூறப்பட்டது.

இந்நிலையில் துணை அணித்தலைவர் விராட் கோலி தெரிவித்துள்ள கருத்து இந்திய அணியில் பிளவு ஏற்பட்டுள்ளது என்பதை உறுதிசெய்யும்வகையில் இருக்கிறது.

கடைசி ஒருநாள் போட்டிக்கு முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய விராட் கோலி, இந்திய வீரர்கள் தெளிவற்ற மனநிலையில் இருந்தனர். அதனால் தான் முழுத் திறமையை வெளிப்படுத்தவில்லை.

அதே சமயம் வங்கதேச வீரர்கள் சிறப்பாக விளையாடினார்கள். இந்திய அணி வீரர்களிடம் முடிவெடுப்பதில் ஏற்பட்ட குழப்பத்தினால் தான் தோல்வி அடைந்தோம் என்று தெரிவித்துள்ளார். (க)

# சர்வதேச டென்னிஸ் போட்டி அரையிறுதியில் சானியா

பெண்களுக்கான ஏகான் சர்வதேச டென்னிஸ் போட்டி இங்கிலாந்தில் உள்ள ஈஸ்ட் போர்னில் நடந்து வருகிறது.

இதில் இரட்டையர் பிரிவில் நேற்று முன்தினம் நடந்த கால் இறுதி ஆட்டம் ஒன்றில் சானியா மிர்சா (இந்தியா)-மார்ட்டினா ங்கிஸ் (சுவிட்சர்லாந்து) ஜோடி 4-6, 6-3, 10-6 என்ற செட் கணக்கில் ஹாவ் சிங் சான் (சீனத் தைபே)-பிளவியா பென்னட்டா (இத்தாலி) இணையை வீழ்த்தி அரை இறுதிக்கு முன்னேறியது.

இந்த வெற்றியை பெற சானியா ஜோடிக்கு 73 நிமிடம் தேவைப் பட்டது.

அரை இறுதியில் சானியா ஜோடி, கரோலின் கார்சியா (பிரான்ஸ்)-காதரினா ஸ்ரீ போட்னிக் (சுலோவேனியா) இணையை எதிர் கொள்கிறது. (க)



# துடுப்பாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.சென்றல் அணிக்கும் ஹாட்லியைற்ஸ் அணிக்கும் இடையில் நடைபெறும் சிநேகபூர்வமான துடுப்பாட்டப் போட்டி இன்று சனிக் கிழமை பி.ப.2 மணிக்கு ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடை பெற வுள்ளது. இப்போட்டி வர்ண ஆடை, வெள்ளை பந்து கொண்ட இருபதுக்கு இருபது போட்டியாக நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# ஐ.சி.சி. ஒரு நாள் தரவரிசை டிவில்லியர்ஸ் முதலிடம்



ஒருநாள்போட்டிக்கான சிறந்த வீரர்களின் தரவரிசை பட்டியலை சர்வதேச கிரிக்கெட் வாரியம் வெளியிட்டுள்ளது.

இதில் தென் ஆபிரிக்க அணித் தலைவர் டிவில்லியர்ஸ் வழக்கம் போல் 902 புள்ளிகளுடன் முதலிடத்தில் இருக்கிறார்.

இவருக்கு அடுத்தடுத்த இடத்தில் இலங்கை வீரர் குமார் சங்கக்காரா, ஹாசிம் ஆம்லா இடம் பெறுகின்றனர்.

இவரைத் தொடர்ந்து இந்திய அணியின் துணைத்தலைவர் விராட் கோலி 4ஆவது இடத்தை பிடிக்கிறார். 5ஆவது இடத்தில் இலங்கை அணியின் சகலதுறை வீரர் டில்ஷான் இடம்பெற்றுள்ளார்.

ஷிகர் தவான் 777 புள்ளிகளுடன் 6ஆவது இடத்தில் இருந்து 7ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார்.

அதே வேளையில் இந்திய அணித்தலைவர் டோனி 734 புள்ளிகளைப் பெற்று 8ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

வங்கதேச தொடரை இழந்தாலும், ஒருநாள் போட்டி அணிகளின் தரவரிசையில் இந்திய அணி தொடர்ந்து 2 ஆவது இடத்தில் நீடிக்கிறது. அதேசமயம் வங்கதேச அணி 7ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது. (க)

# வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சி சென்.அன்ரனிஸ், மானிப்பாய் மகளிர் சம்பியன்







வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான உடற் பயிற்சி போட்டியில் ஆண்கள் பிரிவில் ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரி அணியும் பெண்கள் பிரிவில் மானிப்பாய் மகளிர் கல்லூரி அணியும் சம்பியன் ஆகின. கடந்த செவ்வாய்க்கிழமை ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டியில்.

ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தினை ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரி அணியும் 2ஆம் இடத்தை இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணியும் 3ஆம் இடத்தை பகுதித்துறை சித்தி விநாயகர் வித்தியாலய அணியும் பெற்றுக் கொண்டன.

பெண்கள் பிரிவல் முதலாம் இடத்தை மானிப்பாய் மகளிர் கல்லூரி அணி யும் 2ஆம் இடத்தை வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும் 3ஆம் இடத்தை ஊர்காவற்றுறை சிறிய புஸ்பம் மகளிர் அணியும் பெற்றுக் கொண்டன. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றம்...

20ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தியதன் பின்னரே நாடாளுமன்றம் கலைக்கப்படும் என முன்னதாக அறிவிக்கப்பட்டது.

எனினும் 20ஆம் திருத்தச் சட்டத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெற்றுக்கொள்ள முடியாத காரணத்தினால் ஜனாதிபதி இவ்வாறு பாராளுமன்றைக் கலைத்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தல் ஓகஸ்ட் 17-ம் திகதி நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அலுவலக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதன் பின்னர் நாடாளுமன்ற தேர்தல் சட்டத்தின் பிரகாரம் 52-66 நாட்களுக்குள் பொதுத்தேர்தலை நடத்தி புதிய நாடாளுமன்றத்தை தெரிவு செய்ய வேண்டும். ஓகஸ்ட் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 52 நாட்கள் நிறைவடைகின்றன.

அதன்பிரகாரம் வேட்பு மனுத் தாக்கல் ஜூலை 6முதல்- ஜூலை 15 வரை வேட்புமனுத்தாக்கல் செய்யப்படும். பொதுத்தேர்தல் சட்டத்தின் பிரகாரம் தேர்தல் நிறைவடைந்ததன் பின்னர் புதிய நாடாளுமன்றத்தின் முதல் அமர்வு செப்டெம்பர் 1ஆம் திகதி நடத்தப்பட வேண்டும் எனக்கூறப்படுகிறது.

இந்தக் கலைப்பின் மூலம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான கூட்டு அமைச்சரவையின் பதவிக்காலம் முடிவுக்கு வருகிறது.

கடந்த ஜனவரி மாதம் நடந்த ஜனாதிபதி தேர்தலுக்குப் பிறகு ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டார்.

225 உறுப்பினர்களைக்கொண்ட இலங்கை நாடாளுமன்றத்திற்கு இதற்கு முன்பாக 2010-ம் ஆண்டில் தேர்தல் நடைபெற்றது. (செ-11)

# நீதிமன்ற தாக்குதல்...

செல்ல அனுமதித்ததோடு ஏனைய 52 பேரையும் எதிர்வரும் யூலை மாதம் 10 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ் நீதவான் நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் நேற்றைய தினம் உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாண நீதிமன்றம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் கடந்த மாதம் 20 ஆம் திகதி இடம்பெற்ற கலவரத்தில் தொடர்புடையதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 66 பேர் நேற்று யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

அதில் நீதிமன்ற கட்டிடத்தொகுதி மீது தாக்குதல் மேற்கொண்டமை , சிறைச்சாலை வாகனத்தை சேதமாக்கியமை, சட்டவிரோத கூட்டம் மற்றும் பொலிஸாரை தாக்கியமை தொடர்பிலான 3 வழக்குகள் நேற்று மன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவர்களில் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களில் 9 பேரை இந்த வழக்குகளில் சேர்த்து மேலதிக விசாரணைக்கு உட்படுத்த பொலிஸார் மன்றில் அனுமதி கோரியிருந்தனர். அதற்கமைய அவர்களை நீதிமன்ற வளாகத்திலேயே விசாரணைக்குட்படுத்த நீதிவான் அனுமதித்தார்.

இதேவேளை நீதிமன்ற கட்டிடத்தின் மீதான தாக்குதல் மேற்கொண்ட சந்தேக நபர்கள் இருவர் தலைமறைவாகியிருப்பதாக பொலிஸார் தெரிவித்ததை அடுத்து அவர்களை நாட்டை விட்டு வெளியேற தடை விதித்ததுடன் அவர்களை உடனடியாக கைதுசெய்ய பொலிஸாருக்கு நீதிபதி பிடிவிறாந்து பிறப்பித்தார்.

இந்த வழக்கில் ஒரு பல்கலைக் கழக மாணவனும் ஒரு உயர்தர வகுப்பு மாணவனும் தமது விதிவிலக்கான சூழலை வைத்து பிணைக்கு விண்ணப்பித் திருந்தனர்.

ஆனால் அவர்கள் முன்குற்றம் தொடர்பான ஒளிப்படம் சான்றாக இருப்பதனால் பொலிஸார் அவர்களை பிணையில் செல்ல ஆட்சேபனை தெரிவித்ததை அடுத்து அவர்களுடைய பிணை நிராகரிக்கப்பட்டது.

இந்த வழக்கில் ஒரு நபர் தான் சுயாதீன ஊடகவியலாளர் என்று கூறி பிணை விண்ணப்பித்திருந்தார். அவர் தொடர்பான நம்பத்தகுந்த ஆதாரங்களை மன்றில் சமர்ப்பிக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

மேலும் ஒருவர் விசேட அதிரடிப்படையால் கைது செய்யப்படும் போது கையில் முறிவு ஏற்பட்டுள்ளதாக கூறி பிணை விண்ணப்பித்திருந்தார். அவருக்கு சிறைச்சாலை அத்தியட்சகரால் உரிய முறையில் மருத்துவ சிகிச்சை வழங்கும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

அத்துடன் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள ஊடக அலுவலகங்களில் இருந்து புகைப்படம் மற்றும் ஒளிப்படங்களை பெறுவதற்கு பொலிஸாருக்கு அனுமதி அளித்ததுடன் இந்த வழக் குகள் தொடர்பாக துரிதமாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

இதனையடுத்து மிக விரைவில் விசாரணைகளை பூர்த்தி செய்து யார் யாருக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்வது என விரைவில் அறிவிப்பதாக பொலிஸார் மன்றில் தெரிவித்தனர்.

அத்துடன் மே மாதம் 20 ஆம் திகதி நீதிமன்றக் கட்டிடத்தின் மீதான தாக்குதலின் போது கைப்பற்றப்பட்ட வாகனங்களை விடுவிக்க உரிமையாளர்கள் கோரியிருந்தனர். அதனை அடுத்து வாக னங்களை 2 இலட்சம் ரூபா பிணைமுறியில் வாகனங்களை பதிவு செய்த உரிமையாளர்கள் மட்டும் பொறுப்பேற்க நீதவான் அனுமதியளித்தார். (செ-9)

# இனவாதமே பிர...

மொழியில் உரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

இந்த விழாவின் நோக்கங்களையிட்டு நான் மகிழ்வுறுகிறேன. சிங்கள, தமிழ் அல்லது இந்து, பௌத்த ஐக்கியம் என்பது நல்ல விடயம்தான். ஆனால், இந்த ஐக்கியம் என்பதற்கு இருக்கின்ற முதன்மை நிபந்தனையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதுதான், சமத்துவம் என்பதாகும். மொழிகள், மதங்கள்,இனங்கள் மத்தியில் சமத்துவம் இருக்க வேண்டும். எங்கே சமத்துவம் இருக்கின்றதோ அங்கே ஐக்கியம் தளைக்கும். எங்கே சமத்துவம் இல்லையோ அங்கே ஐக்கியம் காணாமல் போய்விடும்.

உண்மை சமத்துவத்தை நோக்கியதான முயற்சிக்கு நான் எப்போதும் ஆதரவளிப்பேன். அதை இரத்தின தேரர் முன்னெடுக்கின்றார் எனின் அதற்கு அரசியல் பேதங்களுக்கு அப்பால் சென்று உதவிட நான் தயாராக உள்ளேன். ஆனால், நடந்து முடிந்த யுத்தத்திற்கும், இன்றைய நமது எல்லா துன்பங்களுக்கும், இனங்களுகிடையேயான விரிசல்களுக்கும் ஆக வேலுப்பிள்ளை பிரபாகரனே காரணம் என்ற கூற்றை இந்நாட்டு அரசியல் தலைவர்கள் கைவிட வேண்டும். அது அப்படியல்ல.

உண்மையில் இந்நாட்டில் தொன்று தொட்டு இருந்து வந்த இனவாதம்தான் வேலுப்பிள்ளை பிரபாகரனை விடுதலை புலி பிரபாகரனாக மாற்றியது. இனவாத ஆரம்பத்திற்கு அன்றைய அரசாங்கங்களும், சிங்கள தலைவர்களும், தமிழ் தலைவர்களும் காரணமாக அமைந்தார்கள். விடுதலை புலிகள் இயக்கத்தின் பின்பாதி கால கட்ட நடவடிக்கைகள் சில இன விரிசலுக்கு காரணமாக அமைந்தன என்பதும் உண்மைதான். ஆனால், ஒட்டுமொத்தமாக எல்லா பழிகளையும் புலிகளின் மீது போட்டு விட்டு தப்பும் முயற்சிகளை நாம் ஏற்க முடியாது. யுத்தம் நடந்தமைக்கான காரணங்களை கண்டறிந்து தீர்வு காண்பதற்கு இந்த புரிந்துணர்வு அவசியம்.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தனதுரையில் தெரிவித்தார். (செ-11)

# போர்க்குற்றவாளிகள்...

எனவும் இந்த அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது.

அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஜோன் கெரி வாஷிங்டனில் நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள இந்த அறிக்கையில்,

இலங்கையில் சிவில் சமூகப் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் விடுதலைப் புலிகளின் அனுதாபிகள் எனக் கருதப்படுவோர் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்தவர்களால் துன்புறுத்தப்படும் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் இடம்பெற்ற போர் முடிவுக்கு வந்த பின்னரும் காணாமற்போகச் செய்யப்படுதலும், நீதிக்குப் புறம்பான படுகொலைகளும் இடம்பெற்றுள்ளதுடன், மனிதவுரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்படாத நிலையும் பரவலாக காணப்படுகின்றது.

ஊடக அமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அரசாங்கத்தை விமர்சிப்போர் இலங்கை அரசாங்கத்தின் ஆதரவாளர்களால் அச்சுறுத்தப்படுவதும், தாக்கப்படுகின்ற நிலையும் காணப்படுகின்றது. இதனால் ஊடகவியலாளர்கள் சுய தணிக்கையை கடைப்பிடிக்க வேண்டிய நிலை எற்பட்டுள்ளது.

படையினர் மற்றும் துணை ஆயுதக் குழுக்களால் தமிழ் மக்களின் பிரதேசங்களில் நீதிக்குப் புறம்பான படுகொலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை பாரிய மனிதவுரிமைகள் சார்ந்த பிரச்சினையாகும்.

அத்துடன், மோசமான சிறைச்சாலை வசதிகள், விசாரணையின்றி நீண்டகாலம் தடுத்து வைக்கப்படுதல் மற்றும் நியாயமான விசாரணைகள் மறுக்கப்படுதல் போன்றனவும் இலங்கையில் முக்கிய பிரச்சினையாக உள்ளது.

இலங்கையில் பேச்சுச் சுதந்திரம், ஊடக சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடும் சுதந்திரம் ஆகியன அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கை அரசாங்கத்தால் பெரும்பாலான ஊடகங்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன், இணையத்தளங்களும் தணிக்கை செய்யப்பட்டன.

உயர் பாதுகாப்பு வலயங்களும், சோதனைச் சாவடி கெடுபிடிகளும் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கின்றன. போரின் போது இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த விடங்களில் மீளக்குடியேறுவது தொடர்பிலும் பிரச்சினைகள் காணப்படுகின்றன.

இடம்பெயர்ந்த மக்கள் தாம் எங்கு மீளக்குடியேறுவது என்பதை சுயாதீனமாக தீர்மானிக்க முடியவில்லை.

பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் ஆகியன மற்றொரு முக்கியமான பிரச்சினையாகும்.

சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு எதிரான பாகுபாடு மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்ந்து இடம்பெற்றன. மத சிறுபான்மையினருக்கு எதிரான மனிதவுரிமை மீறல்களும் அதிகரித்திருந்தன.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்களில் ஈடுபட்ட ஒருவரேனும் இன்னமும் நீதியின் முன் நிறுத்தப்படவில்லை.

படையினருக்கும், துணை ஆயுதக் குழுக்களுக்கும் இடையில் உறவுகள் காணப்படுவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இந்த துணை ஆயுதக்குழுக்களால் பொதுமக்கள் மீதான கொலைகள், கடத்தல்கள் மற்றும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மத சிறுபான்மையினர் மீதான தாக்குதல்களில் பொது பலசேனா அமைப்பு ஈடுபட்டுள்ளது. இவ்வமைப்பின் வன்முறைகளால் குறைந்தது மூன்று பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

# சாராயப் போத்...

காங்கேசன்துறை வீதி மற்றும் பஸ்ரியன் சந்திப் பகுதிகளில் அனுமதிப்பத்திரம் இன்றி சாராயம் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் மூவர் யாழ்ப்பாண பொலிஸாரினால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதோடு பெறுமதிமிக்க சாராயங்களும் கைப்பற்றப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று காலை காங்கேசன்துறை வீதியில் விநியோகிப்பதற்கான அனுமதிப் பத்திரம் காலாவதியாகிய நிலையிலும் வழி அனுமதிப்பத்திரம் இன்றியும் தென்னஞ் சாராயத்தை கடைகளுக்கு விநியோகம் செய்து கொண்டிருந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 392 தென்னஞ் சாரய போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இவர்கள் சுன்னாகம், மானிப்பாய் பிரதேசத்தினைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் பிற்பகல் வேளை யாழ். பஸ்ரியன் சந்திப் பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி சாராயம் வைத்திருந்த மேலும் ஒருவர் யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவரிடமிருந்து கால் போத்தல் -75 , பெரிய சாரய போத்தல் 06 என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் விசுவமடுவைச் சேர்ந்தவர் எனவும் தெரிவித்த பொலிஸார், கைது செய்யப்பட்ட குறித்த மூவரிடமும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இன்று இவர்கள் மூவரும் யாழ். நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படுவர் என்றும் யாழ்.பொலிஸார் தெரிவித்தனர். (செ-4,9)


## பிரயோக ஆங்கிலம்
## PRACTICAL ENGLISH

ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்
வகுப்பிடம் : யாழ்நகர், திருநெலவேலி
விபரங்களுக்கு : 077 321 2711
(இ)

## நெல்லியடி வட்ட லயன்ஸ் கழகம் நடாத்தும் தேனிசை இராகங்கள் (இசை நிகழ்ச்சி)

| | |
|---|---|
| வழங்குபவர்கள் – | நெல்லியடி வட்ட லயன்ஸ் கழகம் |
| நோக்கம் – | வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சி செயற்பாடுகளுக்கான நிதி சேகரிப்பு |
| காலம் – | 27.06.2015 |
| இடம் – | மாநகரசபை மைதானம், யாழ்ப்பாணம். (சுப்பிரமணியம் பூங்கா முன்பாக) |
| நேரம் – | மாலை 6.00 மணி |
| பிரதான அனுசரனை– | Rio Ice Cream, Hari Engineering |
| நிகழ்வின் பெயர் – | தேனிசை இராகங்கள் (இசை நிகழ்ச்சி) |
| பங்குபற்றுவோர் – | தேனிசைத் தென்றல் தேவா மற்றும் பின்னணி பாடகர்களான கிருஸ்ணா ஐயர்,வினைதா,மீனாட்சி இளையராஜா |
| இசை – | மோகன்ராஜ் இன் அப்சராஸ் இசைக்குழு |
| ஒலி,ஒளி,மேடை– | தயா வீடியோ சென்ரர் – யாழ்ப்பாணம் |
| நிகழ்ச்சி ஒழுங்கமைப்பு – | சிட்னி மோகன் |

(இ)

தொடர்புகளுக்கு - 0771013235


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



(C-1397)

CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)

அழையுங்கள் - 077 29 31 062



கலகலப்பான இசை நிகழ்ச்சியோடு இளம் கலைஞர்களுடன் சுன்னாகம் "சுருதி லயா" இசைக்குழு. உங்கள் விழாக்களை சிறப்பிக்க அழைத்திடுங்கள்.

தொடர்புகளுக்கு :
0771107601 / 0778954262
(C-1403) 0776913010



## Seminar (கருத்தரங்கு)

**B.A பேராதனை பல்கலைக்கழகம்** (வெளிவாரி)

**Philosophy** (மெய்யியல்) **28.06.2015** (ஞாயிறு) காலை 8 மணி

**Geography** (புவியியல்) **11.07 - 12.07** காலை 8 மணி (சனி, ஞாயிறு)

பல்கலைக்கழக விரிவுரையாளர்களினால் நடத்தப்படும் விஷேட கருத்தரங்கு (C-1399)

புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
**021 222 8148**



மீண்டும் O/L உடன் சுவிஸ், நியூசிலாந்து, சிங்கப்பூர், மலேசியாவில் மாதம் 3 இலட்சத்துக்கு மேல் உழைக்கக்கூடிய

## Business & Hotel Management



யாழ்ப்பாணத்திலேயே ஆரம்பித்து 6 மாதங்களில் விரும்பிய நாடு செல்லும் விசா உத்தரவாதம்!

கற்கைநெறி ஆரம்பம் ஜூலை 1 புதன்கிழமை காலை 10 மணி

(C-1401) SIKARAM Get Set for Careers & Take off Your Dreams

இதுவரை பதிவுசெய்யாதவர்கள் ஜூன் 30க்கு முன்னர் நேரில் வந்து பதிவினை மேற்கொள்ளவும்

வெளிநாடு செல்ல விரும்பாதோருக்கு யாழ், கொழும்பு முன்னணி ஹொட்டேல்களில் வேலைவாய்ப்பு ஏற்பாடு செய்து தருகிறோம்.

**Sikaram (Pvt) Ltd.**
இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.(வைத்தியசாலை பின்புறம்)

Call: 077 36 16 798
021 222 00 11



## சிறுநீரகம் தேவை

O + வகை குருதியுடைய யாழ் வலிகாமம் கிழக்கு பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞர் ஒருவருக்கு சிறுநீரகம் தேவை.

தானமாக வழங்க விரும்புவோர் தாயாருடன் பின்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்

(C-1402) தொலைபேசி இல :
077 968 8715



## B.A பேராதனைப் பல்கலைக்கழகம் (வெளிவாரி)

- மேற்படி பதிவுகள் எமது நிறுவனத்தினூடாக மேற்கொள்ளப்படுகிறது:
- தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழாமுடன் விரிவுரைகள் எமது நிறுவனத்திலேயே நடைபெறும்.
- **A/L** 3 பாடங்களும் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்க தகுதி உடையவர்.
- இறுதிப் பதிவுகள் இன்றும் நாளையும் (சனி, ஞாயிறு) காலை 8.00 - 4.00 வரை பதிவுகள் மேற்கொள்ளப்படுவதால் இதுவரை பதிவினை மேற்கொள்ளாதவர்கள் உடன்பதிவினை மேற்கொள்ளவும்.
- **Note:-** ஒலுவில் பதிவினை மேற்கொண்டவர்கள் உடனடியாக அன்றையதினம் வருகை தரவும்.

**NJT** பட்டப் படிப்புக்கள் (C-1399) பலாலிறோட், இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம். T.P : 0776624387



## ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



கற்பதற்கு இலங்கையில் **FRENCH EMBASSY** யின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. (யாழில் 1976 முதல்). 136 நாடுகளில் 1040 கிளைகள். ஆசிரியர்கள் : யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் & ஆங்கில விரிவுரையாளர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்). இலங்கையில் AF மட்டுமே அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF) ஐ வழங்குகின்றது. பிரெஞ்சு மொழிபெயர்புகள். French Embassy: www.ambafrance-lk.org

ஆரம்பம் விரைவில்... உடன் அழைத்து பதியுங்கள்

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் (932)



## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



## தென்னிந்திய யாத்திரை

பாடசாலை விடுமுறையை அனுசரித்து நடைபெறும் யாத்திரை
தமிழ்நாடு, ஆந்திரா,கேரளா,பாண்டிச்சேரி,கர்நாடகா ஊடான யாத்திரை

**நாட்கள் 16 யாத்திரிகர் 10 ஆரம்பம் 10.08.2015**

மலைக்கோட்டை விநாயகர், பஞ்சபூதத்தலங்கள், ஆறுபடை வீடுகள், இராமேஸ்வரம், திருப்பதி, 9 நவக்கிரக ஆலயங்கள், மேல்மருவத்தூர்,பொற்கோவில், மதுரைமீனாட்சி, குருவாயூர், மைசூர் சாமுண்டேஸ்வரி, திருக்கடையூர், கன்னியாகுமரி, ஸ்ரீரெங்கம், பிரம்மாகோவில் உட்பட 65க்கும் அதிக ஆலயங்களை தரிசிக்கலாம்.

*பெற்றுக் கொள்ளும் பணத்திற்கான எமது சேவைகள்:*

(இரு வழி விமான ரிக்கட், மூன்று வேளை உணவு, குடிநீர், தரமான தங்குமிடம், AC வாகன வசதி எயார் போட் போக வர வாகன வசதி, 60 புகைப்படங்கள் மற்றும் ஆலய தரிசனக் கட்டணங்கள் உட்பட) மேல் விபரங்களை கேட்டறிந்து பதிவு செய்யவும்.

விபரங்களுக்கு:-
கலாநிதி **T.ஸ்ரீரெங்கநாதன்**
மகன் **ராஜன்**
**0777680102, 0777362154**

(C-1378)





## பண்பாட்டு விழுமியங்களுடனான வாழ்வுக்கான பிரார்த்தனை

எங்களுடைய சமூகம் வரலாற்றுக் காலத்திலிருந்தே உலகத்துக்கு வழிகாட்டக்கூடிய பண்பாட்டு விழுமியங்களுடன் வாழ்ந்து வந்துள்ளது. இதனால் கவரப்பட்ட உலகில் பல நாடுகளில் வாழ்கின்ற பல்லாயிரக்கணக்கானவர்கள் எமது பண்பாட்டு விழுமியங்களை பின்பற்றி வருவதை காண முடிகிறது.

பெருமையுடன் பண்பாட்டைக் கடைப்பிடித்து வாழ்ந்துவந்த எமது சமூகத்தில், இன்று மனிதப்பண்புகளை இழந்து வெட்கித்தலைகுனியும் அளவில் செயல்படும் நிலை அதிகரித்து வருகிறது. மதுவும், போதைப் பொருளும், மனித உணர்வுகளை இழந்தவர்களது செயல்களும் எமது சமூகத்தை வெகுவாகவே பாதித்துள்ளது. பல இளந்தளிர்களது வாழ்வு சின்னாபின்னப்படுத்தப்பட்டுள்ளது. உச்சமாக வித்தியாவுக்கு ஏற்பட்ட நிகழ்வு சமூகத்தை அதிர வைத்துள்ளதுடன், பெண்கள், சிறுவர்களது மன நலன்களை வெகுவாகவே பாதித்துள்ளது.

எமது சமூகத்தில் இன்று ஏற்பட்டுள்ள நிலைமைகளால். அதிர்வடைந்துள்ள அனைவரும் இதிலிருந்து விடுபட்டு தமது மனங்களை ஆற்றுப்படுத்தவும், வித்தியாவுக்காக பிரார்த்திக்கவும், எமது சமூகம் மீளப்பண்பாட்டு விழுமியங்களுடன் வாழவும் பிரார்த்தனை ஒன்றை மேற்கொள்ள களம் அமைக்கப்பட்டுள்ளது.

**இடம் :** யாழ் - வீரசிங்கம் மண்டபம்
**காலம் :** 28-06-2015, ஞாயிற்றுக்கிழமை
**நேரம் :** காலை 10.00 மணி முதல் மாலை 4.00 வரை

**"மனிதம் பேணுவோம், பண்பாடு காப்போம்" எனும் தொனிப் பொருளில் பிரார்த்தனை நிகழ்வு நடைபெறவுள்ளது.**

இந் நாளில் உணர்வுபூர்வமாக அனைவரும் கலந்து விரதமிருந்து அமரர் வித்தியாவுக்காக அஞ்சலி செலுத்துவதுடன், எம்மை அதிர்வடையச் செய்துள்ள சூழலில் இருந்து விடுபட சிந்திப்போம், பிரார்த்திப்போம், செயல்படுவோம்.

(937) **ஏற்பாட்டாளர்கள்**


## Microsoft Excel Solution

**Basic Excel** — 3 Months, 30 functions கற்பிக்கப்படும்

**Advanced Excel** — 4 Months, 120 functions கற்பிக்கப்படும்

**Finance Excel** — 5 Months, 140 functions கற்பிக்கப்படும்

**Data Analystics through Microsoft Excel** — 6 Months, 190 functions கற்பிக்கப்படும்



உங்கள் தேவைக்கு ஏற்ப விரும்பிய கற்கைநெறியினை தெரிவு செய்ய முடியும்

(C-1382)

## Student Success Centre

320, Main Street, Jaffna.

தொடர்புகளுக்கு- 077 616 9470


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.06.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.